வெளியீடு 20-7-2005 Issued 20-7-2005

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

**செவ்வாய்க்கிழமை, மார்ச் 8, 2005—தொகுதி 70—எண் 1**

**Tuesday the 8th March, 2005—Volume 70—No. 1**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

D
V 21,31'P05
P05.7:1
226632

[Price Rs. 3.00

8-03-2005

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii - vii |
| Governor and Council of Ministers | ix - xii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xiii - xv |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xvii - xxvii |
| **1. வினாக்கள்—விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-28, 29-36, |
| **2. பாராட்டு—** | |
| உலக மகளிர் தினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வாழ்த்து | 2-3, 28-29 |
| **3. தகவல் கோரல்—** | |
| சேது சமுத்திரக் கால்வாய் திட்டம் மத்திய நிதி அமைச்சர் கூற்று | 36-37 |
| **4. கவன ஈர்ப்பு—** | |
| திண்டுக்கல் ராணி மங்கம்மாள் காலனி வீட்டு வசதி வாரிய வீடுகளுக்குக் கூடுதல் பணம் கட்ட வாரியம் அறிவிப்புக் கொடுத்துள்ளது | 38-43 |

பக்கங்கள்

5. **அறிக்கை அளித்தல்—**

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு ... 44

6. **வரவு–செலவுத் திட்டம், 2005—2006, பொது விவாதம்–**தொடர்ச்சி ... 45-118

திரு. சி. ஞானசேகரன் ... 45-50, 53, 54, 56-66, 68,69

திரு. ஐ. கணேசன் ... 70-76,78-81, 85, 88-90

*திரு. எ.வ. வேலு ... 90-100, 102-105

7. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** ... 118-119



## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

   பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

2. **பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

   பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறு பாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு, சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

3. **நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**

   நிதி, திட்டமிடல், தேர்தல்கள் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

4. சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**

சட்டம், நீதிமன்றங்கள், தகவல் தொழில்நுட்பவியல்.

5. உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் :**

உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு,. புள்ளியியல் மற்றும் கூட்டுறவு.

6. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

7. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

8. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

9. ஊரகத் தொழில் [துறை அ]மைச்சர் .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி :**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.

226632
சென்னை-600 008



10. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

11. போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள், மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

12. தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

13. வேளாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

14. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன்.

15. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:**

கால்நடை பராமரிப்பு.

16. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

V2",5' 205 . 70-1

17. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

18. கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டோர் மற்றும் வணிக வரிகள்.

19. பால் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

20. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

21. மீன் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:**

மீன்வளம்.

22. சுற்றுலாத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அ. மில்லர்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.



23. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வஃக்பு.

24. செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:**

செய்தி & விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

25. விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்.

- - -

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. **Chief Minister** | .. | **The Hon. Selvi J Jayalalithaa:**<br>Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. **Minister for Public Works, Prohibition & Excise and Revenue** | .. | **The Hon. Thiru O. Panneerselvam:**<br>Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| 3. **Minister for Finance** | .. | **The Hon. Thiru C. Ponnaiyan:**<br>Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| 4. **Minister for Law and Information Technology** | .. | **The Hon. Thiru D. Jayakumar:**<br>Law, Courts and Information Technology. |
| 5. **Minister for Food and Co-operation** | .. | **The Hon. Thiru Pollachi V. Jayaraman:**<br>Food, Civil Supplies, Consumer Protection, Price Control, Statistics and Co-operation. |

| | | |
|---|---|---|
| 6. **Minister for Hindu Religious and Charitable Endowments** | .. | **The Hon. Thiru P. C. Ramasamy:** Hindu Religious and Charitable Endowments. |
| 7. **Minister for Social Welfare** | .. | **The Hon. Tmt. P. Vijayalakshmi Palanisamy:** Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration. |
| 8. **Minister for Health** | .. | **The Hon. Thiru N. Thalavai Sundaram:** Health, Medical Education and Family Welfare. |
| 9. **Minister for Rural Industries** | .. | **The Hon. Tmt. B. Valarmathi:** Rural Industries including Cottage Industries, Small Scale Industries and Khadi & Village Industries Board. |
| 10. **Minister for Adi-Dravidar Welfare** | .. | **The Hon. Thiru C. Karuppasamy:** Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen. |
| 11. **Minister for Transport and Electricity** | .. | **The Hon. Thiru R. Viswanathan:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports, Electricity and Non-conventional Energy Development. |
| 12. **Minister for Industries** | .. | **The Hon. Thiru Nainar Nagenthran:** Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics. |



| | | |
|---|---|---|
| 13. **Minister for Agriculture** | .. | **The Hon. Thiru K. Pandurangan:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |
| 14. **Minister for Backward Classes** | .. | **The Hon. Thiru Se. Ma. Velusamy:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities. |
| 15. **Minister for Animal Husbandry** | .. | **The Hon. Thiru P. V. Damodhiran:** Animal Husbandry. |
| 16. **Minister for Forests and Environment** | .. | **The Hon. Thiru R. Vaithilingam:** Forests & Environment and Pollution Control. |
| 17. **Minister for Housing and Urban Development** | .. | **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:** Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A. |
| 18. **Minister for Education and Commercial Taxes** | .. | **The Hon. Thiru C. Ve. Shanmugam:** Education, Technical Education, Science and Technology, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees, Evacuees and Commercial Taxes. |
| 19. **Minister for Dairy Development** | .. | **The Hon. Thiru S. Ramachandran:** Milk and Dairy Development. |

| | | |
|---|---|---|
| **20. Minister for Handlooms and Textiles** | .. | **The Hon. Thiru V. Somasundaram:** Handlooms and Textiles. |
| **21. Minister for Fisheries** | .. | **The Hon. Thiru M. Radhakrishnan:** Fisheries. |
| **22. Minister for Tourism** | .. | **The Hon. Thiru A. Miller:** Tourism and Tourism Development Corporation. |
| **23. Minister for Labour** | .. | **The Hon. Thiru P. Annavi:** Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs. |
| **24. Minister for Information & Publicity and Local Administration** | .. | **The Hon. Thiru K. P. Anbalagan:** Information & Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control, Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural indebtedness, Urban and Rural Water Supply. |
| **25. Minister for Sports and Youth Welfare** | .. | **The Hon. Thiru Inbathtamilan:** Sports and Youth Welfare. |

- - -



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

### மாற்றுத் தலைவர்கள் #

திரு. ப. இராஜரெத்தினம்

திரு. அ. அன்வர் ராஜா

திருமதி சி. எம். சூரியகலா

திரு. லா. சந்தானம்

டாக்டர் தே. குமாரதாஸ்

முனைவர் செ.கு. தமிழரசன்

### செயலாளர்

திரு. வெ. இராசாராமன்

# 2-2-2005 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | - குழு அலுவலர் |



| | |
|---|---|
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | .. பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கே.எஸ். சந்திரசேகர், பி.எஸ்சி. | .. சார்புச் செயலாளர் |
| திரு. ச. ஆறுமுகம், பி.எஸ்ஸி. | .. சார்புச் செயலாளர் |
| திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. அ. நவாப்ஜான், பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |

## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | .. அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | .. வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | .. புவனகிரி |
| 10 | அழகம்மாள், திருமதி வி. | .. தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆ.கு.சி. | .. பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | .. நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | .. தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | .. இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | .. வேடசந்தூர் |

20. ஆறுமுகம், திரு. கே. .. செங்கல்பட்டு
21. ஆறுமுகம், திரு. த. .. திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. .. நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. .. திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. .. திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. .. கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். .. கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
31. இராமு, திரு. ந. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
32. இராம் பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. .. ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. .. பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி.கே. .. திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. .. பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே.என். .. மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. .. அரியலூர்
40. இளையக்கண்ணு, திரு. கா.தி. .. ஏற்காடு (ஆ.வா.)
41. இன்பத்தமிழன், திரு. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
42. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ)



43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். .. திருவல்லிக்கேணி
44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. .. திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். .. செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. .. செஞ்சி
48. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
50. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
51. கணேசன், திரு. வி. .. மங்களூர் (செ.வ.)
52. கண்ணன், திரு. ஏ.எஸ். .. பொன்னேரி (செ.வ.)
53. கந்தசாமி, திரு. க.ரா. .. சத்தியமங்கலம்
54. கந்தசாமி, திரு. கா. .. குன்னூர் (செ.வ.)
55. கருணாகரன், திரு. கே.சி. .. சிங்காநல்லூர்
56. கருணாநிதி, திரு. மு. .. சேப்பாக்கம்
57. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
58. கருப்பணன், திரு. கே.சி. .. பவானி
59. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. .. குளத்தூர் (செ.வ.)
60. கலாவதி, திருமதி கு. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
61. கனகதாரா, செல்வி சி. .. பேரணாம்பட்டு (செ.வ.)
62. கனிதா சம்பத், திருமதி எஸ். .. திருப்போரூர் (செ.வ.)
63. காசாம்பு பூமாலை, திருமதி .. சங்கராபுரம்
64. காமராஜ், திரு. மே.ப. .. தாரமங்கலம்
65. கார்த்தி, திரு. மு. .. சேலம்-2

66. காளிமுத்து, டாக்டர் கா. - திருமங்கலம்
67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. - அரூர் (செ.வ.)
68. கிருஷ்ணன், திரு. ஆர். - அந்தியூர் (செ.வ.)
69. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்
70. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. - ஆண்டிமடம்
71. கோதண்டராமன், திரு. ஜி. - முகையூர்
72. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
73. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். - விருத்தாசலம்
74. கோவிந்தராஜ், திரு. வெ. - கிருஷ்ணகிரி
75. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
76. சக்திவேல் முருகன், திரு. எம். - அம்பாசமுத்திரம்
77. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்
78. சசிகலா, திருமதி ஆர். - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
79. சண்முகநாதன், திரு. எஸ்.பி. - ஸ்ரீவைகுண்டம்
80. சண்முகம், திரு. சி. - பூந்தமல்லி
81. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
82. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
83. சந்தானம், திரு. லா. - உசிலம்பட்டி
84. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். - இராணிப்பேட்டை
85. சந்திரமோகன், திரு. நா. - சீர்காழி (செ.வ.)
86. சந்திரன், திரு. வீ. - சிவகங்கை
87. சம்பத், திரு. எம்.சி. - நெல்லிக்குப்பம்
88. சரவணன், திரு. துரை. கி. - சிதம்பரம்
89. சரோஜா, திருமதி இரா. - உப்பிலியாபுரம் (ஆ.வா.)



90. சாமி, திரு. ஆர். - மேலூர்
91. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
92. சிதம்பரம், திரு. ப. - பவானிசாகர்
93. சிவகாமி, திருமதி வி. - தாராபுரம் (செ.வ.)
94. சிவசாமி, திரு. கே.கே. - அருப்புக்கோட்டை
95. சிவசாமி, திரு. சி. - திருப்பூர்
96. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். - கரூர்
97. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
98. சிவபெருமாள், திரு. அ. - ஒட்டப்பிடாரம் (செ.வ.)
99. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
100. சின்னசாமி, திரு. மா. - பழனி (செ.வ.)
101. சீனிவேல், திரு. எஸ்.எம். - திருப்பரங்குன்றம்
102. சுதர்சனம், திரு. டி. - திருவள்ளூர்
103. சுந்தரம், திரு. பி.ஆர். - ராசிபுரம்
104. சுந்தராம்பாள், திருமதி செ. - மேட்டூர்
105. சுப்பிரமணியன், திரு. வீ. - கண்டமங்கலம் (செ.வ.)
106. சுப்பையா பாண்டியன், திரு. எம். - சுடையநல்லூர்
107. சூரியகலா, திருமதி சி.எம். - குடியாத்தம்
108. செம்மலை, திரு. செ. - ஓமலூர்
109. செல்லையா, திரு. வி.ஏ. - மருங்காபுரி
110. செல்வம், திரு. எஸ்.கே. - வீரபாண்டி
111. செல்வராஜ், திரு. ஏ.கே. - மேட்டுப்பாளையம்
112. செல்வி முருகேசன், திருமதி - காங்கேயம்
113. சேகரன், திரு. கே.என். - திருவெறும்பூர்

114. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
115. சோமசுந்தரம், திரு. வி. - உத்திரமேரூர்
116. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
117. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. - திருநாவலூர்
118. தமிழரசன், முனைவர் செ.கு. - நன்னிலம் (செ.வ.)
119. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி - மேல்மலையனூர்
120. தம்பிதுரை, டாக்டர் மு. - பர்கூர்
121. தவமணி, திரு. க. - திருவிடைமருதூர்
122. தளவாய் சுந்தரம், திரு. ந. - கன்னியாகுமரி
123. தனபால், திரு. ப. - சங்கரி (செ.வ.)
124. தாமோதரன், திரு. எஸ். - விருதுநகர்
125. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
126. தாமோதிரன், திரு. ப.வெ. - பொங்கலூர்
127. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. - பேராவூரணி
128. துரைமுருகன், திரு. - காட்பாடி
129. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
130. தென்னரசு, திரு. கே.எஸ். - ஈரோடு
131. நடராசன், திரு. வ.து. - இளையான்குடி
132. நடராஜன், திரு. அ. - குத்தாலம்
133. நடராஜன், திரு. எஸ். - நாட்ராம்பள்ளி
134. நடராஜன், திரு. பி.கே.டி. - ஆத்தூர்
135. நயினார் நாகேந்திரன், திரு. - திருநெல்வேலி
136. நரசிம்மன், திரு. பி.எம். - பள்ளிப்பட்டு



137. நளினி மனோகரன், திருமதி - போளூர்
138. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
139. நீலகண்டன், திரு. ப. - ஆற்காடு
140. நீலமேகவர்ணம், திரு. லெ. - சாத்தான்குளம்
141. நெப்போலியன், திரு. து. - வில்லிவாக்கம்
142. பச்சைமால், திரு. கே.டி. - குளச்சல்
143. பதினெட்டாம்படியான், திரு. க. - முதுகுளத்தூர்
144. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி-1
145. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
146. பவானி கருணாகரன், திருமதி கே. - அரக்கோணம் (செ.வ.)
147. பழனிசாமி, திரு. கே.எஸ். - பெருந்துறை
148. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செவ.)
149. பழனியப்பன், திரு. பெ. - மொரப்பூர்
150. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
151. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
152. பாண்டுரங்கன், திரு. கே. - அணைக்கட்டு
153. பாப்பாசுந்தரம், திரு. அ. - குளித்தலை
154. பாரமலை, திரு. க. - மானாமதுரை (செ.வ.)
155. பாரிமோகன், திரு. கி. - தருமபுரி
156. பாலகிருஷ்ணன், திரு. சோ. - கடலாடி
157. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். - தொண்டாமுத்தூர்

158. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. - ஸ்ரீரங்கம்

159. பாலபாரதி, செல்வி க. - திண்டுக்கல்

160. பாலன், திரு. எஸ்.எம். - லால்குடி

161. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். - சேரன்மகாதேவி

162. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை

163. புகழேந்தி, திரு. இ. - கடலூர்

164. பூபதி மாரியப்பன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)

165. பூவராகமூர்த்தி, திரு. ஏ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)

166. பெருமாள், திரு. என்.கே. - விளாத்திகுளம்

167. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. - பொள்ளாச்சி

168. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்

169. பொன்னம்பலம், திரு. டி.பி. - சமயநல்லூர் (செ.வ.)

170. பொன்னையன், திரு. சி. - திருச்செங்கோடு

171. போளூர் வரதன், திரு. - செங்கம் (செ.வ.)

172. மகாலிங்கம், திரு. எஸ். - அவினாசி (செ.வ.)

173. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)

174. மஹேஸ்வரி, திருமதி எ.எஸ். - கோயம்புத்தூர் மேற்கு

175. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்

176. மணி, திரு. டி. - விளவங்கோடு

177. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்

178. மலையப்பசாமி, திரு. அ.இரா. - கபிலர்மலை

179. மல்லிகா சின்னசாமி, திருமதி - முசிறி

180. மாணிக்கராஜ், திரு. எஸ். - நாங்குநேரி



181. மில்லர், திரு. அ. .. கடலூர்

182. முரளிதரன், திரு. கே.வி. .. தளி

183. முருகவேல் ராஜன், திரு. க. .. வந்தவாசி (செ.வ.)

184. முருகேசன், திரு. ஆ.கு. .. ஆத்தூர்

185. முனுசாமி, திரு. கா.பூ. .. காவேரிப்பட்டினம்

186. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை

187. மோகன், திரு. ப. .. சின்னசேலம்

188. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

189. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்

190. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை

191. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. கோபிசெட்டிப்பாளையம்

192. ராதாகிருஷ்ணன், திரு. எம். .. திருமயம்

193. ராதாரவி, திரு. .. சைதாப்பேட்டை

194. ராமசாமி, திரு பி.சி. .. மொடக்குறிச்சி

195. ராமராஜ், திரு. ச. .. போடிநாயக்கனூர்

196. ராம்குமார், திரு. எம். .. பாபநாசம்

197. ராஜகோபால், திரு. ஆ. .. சிவகாசி

198. ராஜம்மாள், திருமதி எஸ். .. தூத்துக்குடி

199. ராஜா, திரு. எச். .. காரைக்குடி

200. ராஜாங்கம், திரு. வி.ஆர். .. சோழவந்தான்

201. ராஜு, திரு. எச்.எம். .. உதகமண்டலம்

202. ரெங்கநாதன், திரு. என். .. பூம்புகார்

203. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. .. பேரூர்

| | | |
|---|---|---|
| 204. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 205. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. | .. | அரவக்குறிச்சி |
| 206. வடிவேல், திரு. ஆர். | .. | வாணியம்பாடி |
| 207. வளர்மதி, திருமதி பா. | .. | ஆலந்தூர் |
| 208. வளர்மதி ஜெபராஜ், திருமதி | .. | மதுரை மேற்கு |
| 209. வள்ளல் பெருமான், டாக்டர் பி. | .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 210. வாசுதேவன், திரு. பெ. | .. | மதுராந்தகம் |
| 211. விசுவநாதன், திரு. இரா. | .. | நத்தம் |
| 212. வில்வநாதன், திரு. இரா. | .. | சோளிங்கர் |
| 213. விநாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. | .. | பூங்கா நகர் |
| 214. விஜயபாஸ்கர், டாக்டர் சி. | .. | புதுக்கோட்டை |
| 215. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | .. | பனமரத்துப்பட்டி |
| 216. வீரபாண்டியன், திரு. ஜெக. | .. | மயிலாடுதுறை |
| 217. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 218. வெங்கடாஜலம், திரு. செ. | .. | சேலம்-1 |
| 219. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 220. வேலு, திரு. எ.வ. | .. | தண்டராம்பட்டு |
| 221. வேலுசாமி, திரு. செ.ம. | .. | பல்லடம் |
| 222. வேல் முருகன், திரு. தி. | .. | பண்ருட்டி |
| 223. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 224. வைத்திலிங்கம், திரு. ஆர். | .. | ஒரத்தநாடு |
| 225. ஜீவானந்தம், திரு. இரா. | .. | நாகப்பட்டினம் |
| 226. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. | .. | ஆரணி |



| | | |
|---|---|---|
| 227. ஜெயக்குமார், திரு. கு. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 228. ஜெயக்குமார், திரு. டி. | .. | இராயபுரம் |
| 229. ஜெயலலிதா, செல்வி ஜெ | .. | ஆண்டிப்பட்டி |
| 230. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 231. ஹக்கீம், திரு. எம்.ஏ. | .. | மதுரை மத்தி |
| 232. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. | திருவட்டாறு |
| 233. (வெற்றிடம்) | .. | காஞ்சிபுரம் |
| 234. (வெற்றிடம்) | .. | கும்மிடிப்பூண்டி |
| 235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | .. | (நியமனம்) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | | |
|---|---|---|
| திரு. என்.ஆர். சந்திரன் | .. | மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர் |

- - -

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## மாசி 24, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2036

## 2005 மார்ச் 8, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. அ. அருணாசலம்** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**

"தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்."

கற்பு நெறியில் தன்னையும், தன் சமுதாயத்தையும் காத்துக் கொண்டு, தமக்குப் பெருமை சேர்க்கும் புகழையும் காப்பாற்றிக் கொள்வதில் உறுதி குலையாமல் இருப்பவர் பெண்.

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 101, திரு. வெ. ஏழுமலை, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

101—

### கிளைச் சிறைச்சாலை

***28072—திரு. வெ. ஏழுமலை:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிளைச் சிறைச்சாலைகளில் பெண் குற்றவாளிகளை விசாரணைக் கைதியாக remand செய்வதைத் தவிர்த்து, பெண்களுக்குரிய சிறைகளில் remand செய்ய ஆணை பிறப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

[2005 மார்ச் 8

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, *24.10.2002* முதல், *10* கிளைச் சிறைகள், தனிக் கிளைச் சிறைகள் முழுவதும் பெண் பணியாளர்களால் நிருவகிக்கப்படும் பெண்கள் சிறைகளாக மாற்றப்பட்டு பெண் குற்றவாளிகள் remand செய்யப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெண் இனத்திற்குப் பெருமை சேர்க்கும் மனித தெய்வம் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், கோடானுகோடி நன்றியினைத் தெரிவிப்பதோடு, விழுப்புரம் மாவட்டம், விழுப்புரத்தில் இயங்கிக் கொண்டிருந்த கிளைச் சிறை இப்போது பெண்களுக்காக மாற்றப்பட்டிருக்கிற காரணத்தால் அங்கு ஆண் கைதிகள் remand செய்ய முடியாத காரணத்தால், ஆண் கைதிகளை உளுந்தூர்பேட்டை, பண்ருட்டி, செஞ்சி, திண்டிவனம் போன்ற கிளைச் சிறைச்சாலைகளுக்கு அழைத்துச் சென்று remand செய்கின்ற இந்தக் கஷ்டமான வேளையிலே விழுப்புரத்திலுள்ள பெருவளாகத் திட்டத்தில் பெண்களுக்குத் தனியாக கிளைச் சிறை கட்டித் தர ஆவன செய்யப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மீண்டும் ஒரு முறை விழுப்புரம் மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## 2. பாராட்டு

### உலக மகளிர் தினம்—மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வாழ்த்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் இந்தியத் துணைக் கண்டத்திலே, முதலமைச்சராக ஒரே ஒரு பெண் இருப்பதால், பெண்ணினுடைய பெருமை சேர்க்கின்ற இந்த



2005 மார்ச் 8] [பேரவைத் துணைத் தலைவர்]

மகளிர் தின விழாவில் அவர்களுக்கு வாழ்த்துக்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 1. வினாக்கள்—விடைகள்—தொடர்ச்சி

### உடுக்குறியிட்ட வினாக்கள்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *102*, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க தள்ளிவைக்கப்படுகிறது.

வினா எண் *103*, திரு. என்.கே. பெருமாள், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**103—**

### தேர் புதுப்பித்தல்

*** 19832—திரு. என்.கே. பெருமாள்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்திலுள்ள அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தின் தேரைப் புதுப்பித்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், விளாத்திகுளம், அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தின் தேர்த் திருப்பணிகள், தற்போது தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. ஏப்ரல் *2005*-ல் பணிகள் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளன என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆலயங்களைப் புனரமைப்புச் செய்துவரும் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், விளாத்திகுளம், அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் பழுதடைந்துள்ள தேருக்குப் பதிலாக புதிய தேர் வடிவமைக்க, 10 இலட்சம்

ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்ததற்கு, பக்தகோடிகளின் சார்பாகவும் என் சார்பாகவும் நன்றியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் திருப்பாதங்களிலே சமர்ப்பிக்கின்றேன், அம்மா. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு தொடங்கப்பட்ட தேர்ப் பணி இன்னும் முடிவடையாமல் உள்ளது. எனவே, இந்த ஆண்டு ஏப்ரல் 22 ஆம் தேதி தமிழ் சித்திரை 9 ஆம் தேதி, திருவிழா நடைபெறுவதால் பழுதடைந்த தேரை இழுத்துச் செல்ல முடியாத சூழ்நிலை உள்ளதால், 31 ஆம் தேதிக்குள் தேர்ப் பணி நிறைவுபெறுமா என மாண்புமிகு துணை சபாநாயகர்மூலம், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், விளாத்திகுளத்திலுள்ள அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலின் ஆண்டு வருமானம் 90,000 ரூபாயாகும். இத்திருக்கோயிலில் சித்திரைத் தேர்த் திருவிழா, கந்த சஷ்டி திருவிழா, நவராத்திரி திருவிழா மற்றும் திருவாதிரை திருவிழா ஆகிய முக்கிய திருவிழாக்கள் நடைபெறுகின்றன. 2002-2003 ஆம் ஆண்டுக்கான துறையின் மானியக் கோரிக்கையின்போது, சட்டமன்றத்திலே அறிவித்தபடி, புதிய தேர் ஒன்று செய்ய முடிவு செய்யப்பட்டு, தேர்த் திருப்பணி, ரூ.12.30 இலட்சம் மதிப்பீட்டில், துறை நிதியுதவி ரூ.10 இலட்சம் மற்றும் பொதுமக்கள் நன்கொடை ரூ.2.30 இலட்சம் செலவில் செய்ய முறையான அனுமதி வழங்கப்பட்டு, பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. 5.5 சதவிகிதப் பணிகள் முடிவுற்று, எஞ்சியுள்ள பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ஏப்ரல் 2005-ல் பணிகளை முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்தேருக்கான சக்கரங்கள் செய்யும் பணி திருச்சியிலுள்ள மிகுமின் 'பெல்' நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்பணியை விரைவில் முடித்து, எதிர்வரும் சித்திரை மாதத்தில் தேரோட்டத்தை நடத்த, தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்.

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆரணி தொகுதியில், தேவிகாபுரம் அருள்மிகு கனக எரீஸ்வரர் பெரியநாயகி கோவிலுக்குத் தேர் ஒன்றை நான் கேட்டு, அரசு அதற்கு ஆணையிட்டு, 7-1-2003-ல் மாண்புமிகு அமைச்சர்





அவர்களால் அவையிலே 21 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், தேர்ப் பணிக்கு tender விடப்படவில்லை. இன்னும் வேலையும் தொடங்கப்படவில்லை. அதற்கான அறிகுறியே இல்லாமல் வேண்டுமென்றே அங்கே அதிகாரிகள் அதைத் தொடங்காமல் மெத்தனமாக இருக்கிறார்கள். ஆகவே, அந்தத் தேர்ப் பணி, எந்த நிலையில் இருக்கிறது என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். அதற்குப் பதில் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையின் அடிப்படையிலே அறிவிக்கப்பட்ட அந்தத் தேர்ப் பணிக்கு, இப்போது 10 இலட்சம் ரூபாய் அரசினுடைய மானியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மீதியிருக்கின்ற நிதி, அங்கேயிருக்கின்ற பொதுமக்கள் மூலமாக, பக்தர்கள் மூலமாக வசூல் செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும், சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கே நிதி கொடுப்பதற்கு முன்வராத காரணத்தினால், அதையும் துறையே ஏற்பாடு செய்து, அந்தத் தேர்ப் பணியை முடிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் 10 இலட்சம் ரூபாய் அரசினுடைய மானியம் இல்லாமல், அருகிலே இருக்கின்ற வசதிபடைத்த ஆலயத்திலேயிருந்து நிதியைப் பெற்று, கூடியவிரைவில் அந்தத் தேர்ப் பணி முடிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. என்.கே. பெருமாள்.

**திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பக்தர்களுடைய மனமறிந்த மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அம்மா அவர்கள், நலிவடைந்த எங்களுடைய மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்திற்குத் தேர்த் திருப்பணி செய்வதற்கு 10 இலட்சம் ரூபாய் வழங்கிய அம்மா அவர்களுக்கு, மீண்டும் ஒருமுறை நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு இந்து, சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், ஏப்ரல் 22 ஆம் தேதி, அந்தத் தேரை ஓட்டுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால், ஆலய மேம்பாட்டிற்கு ஒதுக்கிய 10 இலட்சம் ரூபாய் நிதியில், 5 இலட்சம் ரூபாய்தான் இப்போது நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் சார்பாக இரண்டு இலட்சத்து, முப்பதாயிரம் ரூபாய் வசூல் செய்யும் பணி நடைபெற்று வருகின்றது. ஆகையினால், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், விரைவிலேயே அந்த 5 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்து இந்த

[2005 மார்ச் 8

ஆண்டு சித்திரை மாதம் 9 ஆம் தேதி தேர் ஓடுவதற்கு ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 5 இலட்சம் ரூபாய் நிதியைக் கொடுத்துதான், வருகின்ற சித்திரை மாதத்தில் தேர் ஓட்டப்படும் என்பதை மீண்டும் ஒருமுறை தங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தின் தேரைப் புதுப்பிப்பதற்காக நிதியுதவி வழங்கப்பட்டிருப்பது வரவேற்கக்கூடியது. மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம் முதலாக பல்வேறு ஆலயங்களிலே தமிழில் அர்ச்சனை செய்யப்படும் என்று ஆணை இருக்கிறது. அங்கே விளம்பரப் பலகைகளிலேகூட, தமிழிலும் அர்ச்சனை செய்யப்படும் என்ற நிலை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம் முதலாக எல்லா ஆலயங்களிலும்— தமிழ்நாட்டிலே இருக்கிற கோவில்கள், தமிழர்கள் வழிபடுகின்ற கோவில்களிலும்—தமிழில்தான் அர்ச்சனை செய்யப்படும் என்பதை அரசு கட்டாயப்படுத்துமா, அதைத் தீவிரப்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இருக்கின்ற அனைத்து ஆலயங்களிலேயும், அங்கே வருகின்ற பக்தர்கள், தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டுமென்று கேட்டால், அனைத்து ஆலயங்களிலேயும் தமிழில் அர்ச்சனை செய்யப்பட்டு வருகிறது; இன்றைக்கும் செய்யப்பட்டு வருகிறது; நாளைக்கும் செய்யப்படும். நீங்கள் கேட்கவில்லை என்று சொன்னால், இப்பொழுது எப்படி அர்ச்சனை செய்துகொண்டிருக்கிறார்களோ, அந்த அடிப்படையில் பல்வேறு இடங்களிலே பல்வேறு ஆலயங்களில் அர்ச்சனை செய்யப்படுகிறது. அங்கே ஆலயத்திற்கு வருகின்ற பக்தர்கள் தமிழில்தான் அர்ச்சனை செய்ய வேண்டுமென்று கேட்டால், அனைத்து ஆலயங்களிலும் தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டுமென்று ஆணையிடப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ. சிவபெருமாள்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம் சார்பாக எழுப்பப்பட்ட



2005 மார்ச் 8]

கேள்வி என்பதால் இதைக் கேட்கிறேன். ஒட்டப்பிடாரம் தொகுதியிலே சுமார் 20 ஆண்டுகள் அந்த சிவன் கோவிலுக்குச் சொந்தமான தேர் ஓடாமல் பழுதடைந்த நிலையில் இருந்தது. அங்குள்ள பொது மக்களின் பங்குத் தொகையின் காரணமாக, இப்போது இரண்டு மூன்று ஆண்டுகளாக அந்தத் தேர் சிறப்பாக ஓடுகிறது. இருந்தாலும், அந்தப் பங்குத் தொகை மூலமாக, அந்தத் தேர் முழுவதும் நல்ல நிலையில் இருக்கிறது. ஆனால், அந்த நான்கு சக்கரங்கள் மிகவும் பயனற்ற நிலையில் இருக்கின்ற காரணத்தினால், மீண்டும் அந்தத் தேர் நிறுத்தப்படக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும் என்கின்ற நிலையை மாற்றி, அந்த நான்கு சக்கரங்களையும் புதியதாக அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசில் மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2001 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்திலே, தாரமங்கலத்தில் இருக்கின்ற ஆலயத்தில், அந்தத் தேருக்கு 1-7-2001 அன்று திடீரென்று தீ விபத்து ஏற்பட்டது. 2-7-2001 அன்று மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு, 25 இலட்சம் ரூபாயில் உடனடியாக அந்தத் தேர் சரி செய்து கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில், அங்கே அந்தத் தேர் சரி செய்யப்பட்டு ஒரு வார காலத்திற்கு முன்னாலே வெள்ளோட்டம் விடப்பட்டிருக்கிறது. அதேபோல, தமிழ்நாட்டிலே இருக்கின்ற அனைத்து ஆலயங்களிலேயும், தேர்கள் எங்கெங்கெல்லாம் பழுதுபட்டிருக்கின்றனவோ அங்கெங்கெல்லாம் அவற்றை மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உடனடியாக செப்பனிட்டு புதுப்பிக்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தேரும் புதுப்பிக்கப்படும் என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் பதில் அளிக்கின்ற நேரத்திலே இப்போது வழக்கமாக அர்ச்சனை செய்யப்படுகிறது என்றும், தமிழில் அர்ச்சனை செய்யப்பட வேண்டுமென்று கேட்டால், நாங்கள் தமிழில் அர்ச்சனை செய்வதற்கு ஆணையிட்டிருக்கிறோம், வலியுறுத்தியிருக்கிறோம் என்றும்

சொல்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டிலே இருக்கிற கோவில்கள், தமிழர்கள் வழிபடுகின்ற கோவில்கள். ஆகவே, தமிழில் அர்ச்சனை செய்யப்படவேண்டும்; வேறு மொழியிலே வேண்டுமென்று கேட்டால், பிற மொழியிலே அர்ச்சனை செய்து கொடுப்பதிலே ஆட்சேபணையில்லை. ஆக, இப்படி கேட்காதபட்சத்திலே, தொடர்ந்து தமிழிலே அர்ச்சனை செய்வதற்கு அரசு வலியுறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனியிலே இருக்கிற ஆண்டவன் ஆலயத்திற்குக் கேரள மாநிலத்திலிருந்துதான் அதிகமான பேர் வருகிறார்கள். எனவே, தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்லாமல், பல மாநிலங்களிலேயிருந்தும் தமிழ்நாட்டிற்கு ஆண்டவனை வழிபட வருகிறார்கள். அந்தந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், அந்தந்த மொழியிலே கேட்டால் செய்ய முடியாது. இப்போது சமஸ்கிருதத்திலே அர்ச்சனை செய்கிறார்கள். அது மட்டுமல்லாமல், தமிழிலே வேண்டுமென்று கேட்டால் அனைத்து ஆலயங்களிலேயும் செய்ய இன்றைக்கும் அந்த ஆணையிருக்கிறது. அந்த அடிப்படையிலே அர்ச்சனை செய்யப்படும் என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 104, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**104—**

## வணிக வளாகம்

*** 67293—திரு. வி.கே. லட்சுமணன்:**

*மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கோயம்புத்தூர் நகரில் 27-வது வார்டிலுள்ள இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான கூப்பிடு விநாயகர் கோவில் வளாகத்திலுள்ள பாழடைந்த திரையரங்கை இடித்துவிட்டு வணிக வளாகம் மற்றும் பல்லடுக்கு வாகனங்கள் நிறுத்தும் இடமும் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



திருக்கோயில் வளாகத்தில் வணிக வளாகம் கட்டும் முதல் கட்ட திட்டப் பணிகளுக்குப் போதுமான நிதி வசதியில்லாத காரணத்தினால், மேற்படி இடத்தை வணிக வளாகம் கட்டும்வரை, தற்காலிகமாக வாகனக் காப்பகமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை நகரின் மையப் பகுதியிலே இருக்கின்ற இந்தக் கூப்பிடு விநாயகர் கோவில் பிரச்சினையானது, நீண்டகாலமாக நீதிமன்றத்திலேயிருந்து, இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் இந்தக் கோவிலுக்கு அந்த இடம் உரிமையாக்கப்பட்டது. அந்த இடத்திலே ஒரு பாழடைந்த திரையரங்கு, டைமண்ட் தியேட்டர் என்ற பெயரிலே நீண்டகாலமாக இருந்து வந்தது. இன்றைக்கும் இருக்கிறது. ஆனால், அது பயன்படுத்தப்படாத ஒரு திரையரங்காக இருக்கிற காரணத்தினாலே, அந்தத் திரையரங்கை முழுவதுமாக இடித்து அகற்றிவிட்டு, அந்தத் திரையரங்கு இருக்கிற இடத்தில் இந்து சமய அறநிலையத் துறைக்கு வருவாய் கிடைக்கின்ற முறையிலே ஒரு வணிக வளாகத்தையும், கோவை நகரிலே மிக அதிகமான போக்குவரத்து நெரிசல் இருக்கிற காரணத்தினாலே ஒரு Multi Level Parking-ஐ அந்த வணிக வளாகத்திற்குள்ளே உருவாக்குவதற்கு தமிழக அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், கோயம்புத்தூர் மாநகரம், அருள்மிகு கூப்பிடு விநாயகர் திருக்கோவில்பட்டியைச் சேர்ந்த திருக்கோவிலாகும். இந்தத் திருக்கோவிலுக்குக் கடந்த பசலி ஆண்டில், 91,335 ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது. இந்தத் திருக்கோவிலுக்குச் சொந்தமான இடத்தில் திரையரங்கு ஒன்று இருந்தது. அது நீண்டகால வழக்கிற்குப் பின்பு, திருக்கோவில் நிருவாகத்தால் எடுத்துக்கொள்ளப்பட்டது. அந்தத் திரையரங்கை இடித்துவிட்டு, அவ்விடத்தில் வணிக வளாகம் கட்ட, தமிழ்நாடு பொதுப் பணித் துறை கட்டட மையத்திற்கு வரைபடம், வடிவமைப்பு ஆகியவற்றிற்கு அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. இதற்கிடையில், அந்த இடத்தில் வாகனக் காப்பகம் ஒன்று அமைத்து, இத்திருக்கோவிலுக்கு ஆண்டு ஒன்றிற்கு 3 இலட்சம் ரூபாய் வருவாய் பெற, தற்சமயம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்தத் திருக்கோவில் மிகச் சிறியது என்பதாலும், உத்தேசிக்கப்பட்டுள்ள வணிக வளாகத்திற்கு ஒரு கோடி ரூபாய்வரை நிதி தேவைப்படும் என்பதாலும், உடனடியாக வணிக வளாகம் கட்டும் திட்டம் செயல்படுத்த இயலாத நிலை உள்ளது. பொதுப் பணித் துறை கட்டட மையத்திலிருந்து

[2005 மார்ச் 8

அங்கீகாரம் கிடைத்த பின்பு, பிற திருக்கோவில்களின் உபரி நிதியிலிருந்து கடனாக நிதி பெற்று வணிக வளாகம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம். நீங்கள், உசிலம்பட்டியிலிருந்து கோயம்புத்தூருக்குப் போனீர்கள் என்றால், எப்படி?

**திரு. லா. சந்தானம்:** இல்லை, இல்லை. மொத்தத் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே உள்ள பொதுவான கேள்வி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று தமிழகத்திலே பல்வேறு நகரங்களிலே, அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடங்கள் இருக்கின்றன. அவையெல்லாம், அறநிலையத் துறைக்கு, ஆலயங்களுக்கு எந்த வருவாயும் தராத நிலையில் கிடக்கின்ற ஒரு சூழலில், மதுரையில்கூட, மீனாட்சியம்மன் கோவிலுக்குச் சொந்தமான இடம், எல்லிஸ் நகரிலே, ஐந்து ஏக்கருக்கு மேலாக இருக்கிறது. அந்த இடத்தில் பேருந்து நிலையம் அமைத்தால், மேற்கே நமது ஆண்டிப்பட்டிப் பகுதியிலே, அம்மா அவர்களுடைய தொகுதியில் இருந்து, எங்கள் தொகுதி சேடப்பட்டி தொகுதி போன்ற பகுதியிலே, திண்டுக்கல் போன்ற பகுதியிலே இருந்து வருகின்றவர்கள் பயனடைவார்கள் என்கின்ற முறையில், அந்த மாவட்ட ஆட்சித் தலைவரும், அந்த இடத்தை வாடகைக்கு அறநிலையத் துறை கொடுக்குமேயானால், அது ஆலயத்திற்கும் வருவாயைத் தருகின்ற நிலை இருக்கும்; மக்களுக்கும் பயனுள்ளதாக, மதுரை நகரிலே இருக்கின்ற போக்குவரத்து நெரிசலைப் போக்குகின்ற நிலையும் இருக்கும் என்கின்ற சூழலைச் சொல்கிறார். அப்படிப்பட்ட நிலங்களைக் கோவிலுக்கு வருமானம் வருகின்றவகையில், வாடகைக்குத் தருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்திற்குச் சொந்தமான எல்லிஸ் நகரிலே இருக்கின்ற, தினத்தந்தி அலுவலகத்திற்கு அருகிலே இருக்கக்கூடிய இடம், மிக முக்கியமான இடம் என்று பல்வேறு அரசியல் தலைவர்களும், பல்வேறு பொது மக்களெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்குப் பயன்படக்கூடிய அளவுக்குப் பேருந்து நிலையம் அமைக்க வேண்டுமென்று சொன்னால், அங்கே இருக்கின்ற வருவாய்த் துறை அலுவலர்கள், என்ன விலையை நிர்ணயம் செய்கிறார்களோ, அந்த விலையை நிர்ணயம் செய்து கொடுப்பதற்கு



2005 மார்ச் 8]

நீங்கள் முன்வருவீர்களேயானால், அறநிலையத் துறையின் மூலமாக எங்கெங்கு கட்டடங்கள்— அறநிலையத் துறையின் மூலமாக மருத்துவமனைகள், கால்நடை மருத்துவமனைகள், ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டுவது போன்ற பல்வேறு அரசினுடைய பணிகளுக்கு அந்த ஆலயங்களினுடைய இடங்களைக் கொடுக்கலாம் என்று சொல்லி, தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில், பொதுமக்களுக்குப் பயன்படுமேயானால், நீங்கள் அந்த இடத்திற்குரிய தொகையை ஆலயத்திற்கு வழங்குவீர்களேயானால், கிரயத்திற்கே கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபகாலமாக, கோவில்களிலே உள்ள உண்டியல்களை, அறநிலையத் துறை அதிகாரிகள் சென்று அங்கே இருக்கின்ற காசுகளை எண்ணுவதற்கு முன்னாலே, திருடர்கள் அதிக அளவிலே அள்ளிவிடுகிறார்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது. டாக்டர் கோவிந்தசாமி.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலத்திலுள்ள விருத்தகிரீசுவரர் ஆலயம், புகழ்பெற்ற ஆலயம். அதற்குச் சொந்தமான நந்தவனப் பகுதி, 3 ஏக்கர், 60 சென்ட். அந்த இடத்தில், நகராட்சியினுடைய அனுமதி இல்லாமல், காய்கறி மார்க்கெட் நடத்தப்படுகிறது. அந்த இடத்தைச் சுற்றுலாத் தலமாக்க அல்லது பக்தர்கள் தங்கக்கூடிய வசதியுள்ள இடமாக்க, பெரிய கட்டடம் கட்டினால் வசதியாக இருக்குமென்று நினைக்கின்றேன். அதற்கு உரிய பதிலைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஆலயங்களுக்குச் சொந்தமான இடங்கள் இருக்குமேயானால், அங்கெல்லாம் அந்தப் பகுதி மக்களுக்காக, அந்த ஆலயங்களிலே வழிபடக்கூடிய அந்த மக்களுக்காக நன்மைகள் செய்வதற்காக நிச்சயமாக சுற்றுலாத் தலம் அமைப்பதற்கு, அந்த ஆலயத்திற்கு, வருகிற ஆண்டுகளில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி மஹேஸ்வரி.

[2005 மார்ச் 8

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு உலக மகளிர் தினம். அடுப்படியிலே இருந்த பெண்களை, அதிரடிப் படைக்குக் கொண்டுவந்து சேர்த்த பெருமை, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) மகளிர் மேம்பாட்டிற்காகத் தொடர்ந்து பாடுபட்டுவரும் இந்த அரசானது, திருக்கோவில்களிலே. பெண்களை - பெண் அர்ச்சகர்களை நியமிக்க முன்வருமா என்பதை இந்த மகளிர் தினத்தன்று கோரிக்கையாக வைத்து, அதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகமப் பள்ளியில் படித்த ஆண்களாக இருந்தாலும், பெண்களாக இருந்தாலும், எந்தச் சமுதாயத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் அனைவரும் அர்ச்சனை செய்ய சொல்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. ஆன்மீகக் கல்விப் படித்தவர்கள் யார் வேண்டுமென்றாலும் வரலாம் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்றபோது அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடங்கள் எங்கு இருந்தாலும் அதைக் கையகப்படுத்தி, அதிலே கட்டடங்கள் கட்டுவதற்கோ அல்லது மக்கள் பயன்பாட்டிற்கோ பயன்படக்கூடிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்கள். என்னுடைய தொகுதியிலே, என்னுடைய கிராமத்திலே இருக்கின்ற நூற்றுக்கணக்கான ஏக்கர் அரசுக்குச் சொந்தமான, அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலம், சில தனி நபர்களால், பல ஆண்டுக் காலம் கையகப்படுத்தப்பட்டு இருக்கிறது. ஒரு கிளை நூலகம் கட்டுவதற்குக்கூட அரசு முயற்சித்தபோது, அது தடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் பரம்பரை தர்மகர்த்தாக்கள் என்று கூறி, அதை அனுபவித்து வருகிறார்கள். நான்கூட, சில ஆண்டுகளுக்கு முன்னால் அதை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல் முருகன், அதையெல்லாம் விவரமாக எழுதிக் கொடுங்கள்.

*வினா எண் 105, திரு. சி. சண்முகம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.*



2005 மார்ச் 8]

**105—**

## உணவு மானியம்

*** 27343—திரு. சி. சண்முகம்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சமூக நலத் துறைமூலம், தமிழ்நாட்டிலுள்ள தொண்டு நிறுவனங்களில் தங்கிப் படிக்கும் ஆதரவற்ற பிள்ளைகளின் உணவு மானியத்தை ரூ. 300/- ஆக உயர்த்தித் தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையிலிருந்து மானியம் பெற்று இயங்கிவரும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் உள்ள ஆதரவற்ற குழந்தைகளுக்குத் தற்போது அரசால் வழங்கப்பட்டுவரும் உணவீட்டுச் செலவினமான ரூ.200/-ஐ, ரூ.300/- ஆக உயர்த்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-20*

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொண்டு நிறுவனங்களில் படிக்கும் மாணவர்களுக்கு 1992-ல் அரசு நிர்ணயித்த தொகை அது. இப்பொழுது விலைவாசி அதிகமாக ஏறிவிட்ட காரணத்தினாலும், மாணவர்களுக்கு இந்த நிதியானது போதுமானதாக இல்லாததாலும், அவர்களுக்கு அந்தத் தொகையை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும். மற்றும் தற்போது தமிழ்நாட்டில் எவ்வளவு மாணவர்கள் இதில் பயனடைகிறார்கள் என்றும், மாணவிகள் எவ்வளவு பேர் பயன் பெறுகிறார்கள் என்றும், தன்னார்வத் தொண்டு பள்ளிகளை உயர்த்த அனுமதி அரசின் பரிசீலனையில் உள்ளதா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு உதவியுடன் செயல்படும் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகள் நலத் திட்டத்தில், குழந்தைகளைப் பராமரிப்பதற்காகத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு, மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இதில், 80 சதவிகிதம் 1-4-1992 முதல், மாநில அரசால் வழங்கப்பட்டு வருகிறது. 20 சதவிகிதம்

[2005 மார்ச் 8

தொண்டு நிறுவனம் ஏற்றுக்கொள்கிறது. இம்மானியம், தொடர் செலவினமாக உணவு, உடை போன்றவற்றுக்கு, ஒரு குழந்தைக்கு ஒரு மாதத்திற்கு ரூபாய் 200 வீதம் வழங்கப்படுகிறது. இவ்வில்லங்களை, மாவட்ட அளவில் மாவட்ட அலுவலர்களும், சமூக நல இயக்குநகரத்தில் உள்ள அலுவலர்களும் முறையாகப் பார்வையிட்டு வருகிறார்கள். இவ்வில்லங்களில் பராமரிக்கப்படும் 14,377 குழந்தைகளுக்கு உதவிட, 183 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அரசிடம் மானியம் பெறுகின்றன. மேலும், இத்திட்டத்திற்காக 2004-2005 ஆம் ஆண்டுக்கு 267.69 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதனையும், இம்மானியத்தை ரூபாய் 300 ஆக உயர்த்தக் கோரி, பல்வேறு தொண்டு நிறுவனங்கள் ஏற்கெனவே வேண்டுகோளாக வைத்திருக்கின்றன. அதை அரசு பரிசீலனை செய்து, நிதி நெருக்கடியின் காரணமாக அக்கோரிக்கை ஏற்கப்படவில்லை. எனவே, தொண்டு நிறுவனங்களில் தங்கிப் படிக்கும் ஆதரவற்ற குழந்தைகளுக்கு உணவு மானியத்தை உயர்த்தித் தரும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சண்முகம்.

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்த்தித் தருவது குறித்து அரசின் பரிசீலனையில் இல்லை என்று துறை அமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள். ஆனாலும், முதல்வர் அவர்கள் அதைப் பரிசீலனை செய்து, கண்டிப்பாக உயர்த்திக் கொடுக்க வேண்டும். ஏனென்றால், ஏழை மாணவர்கள். ஒவ்வொரு விடுதியிலும் S.C. hostel. B.C. hostel போன்ற மற்ற hostel-களில் 50 மாணவர்கள் படிக்கிறார்கள். அவற்றுக்குண்டான செலவு ஒரு மாணவருக்கு வார்டன் செலவு, சமையலர் செலவு, சாப்பாட்டுச் செலவு போன்றவற்றுக்கு 50 ஆயிரம் ரூபாய் அரசுக்கு ஆகிறது. ஒரு பிள்ளைக்கு நேரடியாக 500 ரூபாய் கொடுத்தால்கூட போதும். 50 ஆயிரம் ரூபாய் ஆகியும் பல hostel களில் அதற்குண்டான கணக்கு, பொய்யான கணக்குதான் கொடுக்கப்படுகிறது. எனது பகுதியிலுள்ள S.C. hostel-ல் .... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. சி. சண்முகம்:** நான் பார்வையாளர் புத்தகத்தில் கையெழுத்து போட்டு, சரியாக நடக்கிறதா என்று ஆய்வு செய்ய சென்றபோது, அந்தப் புத்தகத்தைக்கூட வழங்கமாட்டேன் என்கிறார்கள். பார்வையாளர் புத்தகத்தை எங்களுக்குக் காட்டமாட்டேன் என்கிறார்கள். அந்தமாதிரி உத்தரவு இல்லை; எந்த எம்.எல்.ஏ.-வும் இதுவரை பார்த்தது இல்லை



2005 மார்ச் 8]

hostel-ல் என்கிறார்கள். இதில் உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு hostel-ல் என்கிறார்கள் இதில் உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்ய வேண்டும் என்றும், பரிசீலனை செய்து முதல்வர் அம்மா அவர்கள் மாணவர்களுக்கு உயர்த்தி வழங்க ஆவன செய்வார்கள் என்றும் எதிர்பார்க்கிறோம்.

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அரசு மானியமாக 80 சதவிகிதமும், தொண்டு நிறுவனம் 20 சதவிகிதமும் கொடுக்கின்றது என்பதனை நான் இங்கே எடுத்துக் கூறியிருந்தேன். மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வற்புறுத்துவதனால், இதை அரசு பரிசீலித்து சிந்திக்கும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 106, திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**106—**

## முதியோர் இல்லம்

*** 41272—திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரணி நகரத்தில் முதியோர் இல்லம் துவக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி நகரத்தில் முதியோர் இல்லம் தொடங்குவது குறித்த திட்டம், தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. தகுதிவாய்ந்த தனியார் தொண்டு நிறுவனங்கள் முன்வந்தால், விதிமுறைகளுக்குட்பட்டு அரசு மானியம் வழங்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-25

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் தொண்டு நிறுவனம் முன்வந்தால் அரசு பரிசீலிக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். தனியார் தொண்டு நிறுவனங்களில்கூட சில இடங்களில் கோளாறுகள் ஏற்படுகின்றன. ஆகவே, கேட்காமலேயே கொடுக்கும் மாண்புமிகு தங்கத் தாரகை தமிழக முதல்வர் அம்மாவின் ஆட்சியிலே, அரசே தொடங்க வேண்டுமென்று கேட்டு, அதை

[2005 மார்ச் 8

மறுபரிசீலனை செய்து, அரசு தொடங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் தொண்டு நிறுவனங்கள் செயல்பட்டு வருவதில் கோளாறு இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். எந்த இல்லங்களில், என்ன தவறுகள் நடக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கூறினால், நிச்சயம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும். அதேநேரத்தில் முதியோர் இல்லங்கள் அரசால் தொடங்கப்பட்டு நடத்தப்படுவதில்லை. முதியோர் இல்லங்களை நடத்திட, தொண்டு நிறுவனங்களை ஊக்குவிப்பதுதான் மாநில அரசு திட்டங்களில் ஒன்றாகும். முதியோர் இல்லங்கள் நடத்த, தனியார் தொண்டு நிறுவனங்களை ஊக்குவிப்பதற்காக பராமரிப்பு மானியம் மட்டுமே அரசால் வழங்கப்படுகிறது. அதனால், மாண்புமிகு உறுப்பினர் முயற்சி செய்து, ஆரணி நகரத்தில் தகுதி வாய்ந்த தனியார் தொண்டு நிறுவனங்கள், முதியோர் இல்லங்களை நடத்த முன்வரச் செய்தால், அரசு அதற்கு உதவி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்.

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டது, ஆரணி பகுதியிலே, முதியோர் இல்லம் இல்லை; வாழ்ந்தவர்கள், வரலாறு படைத்தவர்கள் நூற்றுக்கணக்கானவர்கள் இப்போது வறுமைக் கோட்டிலே பல பெரியவர்கள், முதியோர்கள் வசதி இல்லாமல் தவிக்கின்றார்கள், ஆகவே, அம்மா அவர்கள் கருணை உள்ளத்தோடு, இந்த அரசு சார்பிலேயே, ஆரணி தொகுதியிலே, ஒரு முதியோர் இல்லம் தொடங்கி அதற்கு உரிய நடவடிக்கை எடுத்தால், இந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள், அநாதைகளாக இருப்பவர்கள், பாதிக்கப்பட்ட பல பேர் பயன்பெறுவார்கள் என்பதற்காகத்தான் அதைக் கேட்டிருக்கிறேன். அதை மறுபடியும் மறுபரிசீலனை செய்து அரசே தொடங்க வழி செய்யுமா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் விளக்கமாக பதில் அளித்திருக்கின்றேன்.



2005 மார்ச் 8]

இப்போது இதுபோன்ற தொண்டு நிறுவனங்கள் அரசால் நடத்தப்படுவது இல்லை. அந்தத் தொண்டு நிறுவனங்களை அரசு ஊக்குவிப்பதுதான் மாநில அரசின் திட்டங்களில் ஒன்றாகும். முதியோர் இல்லங்கள் நடத்த தனியார் தொண்டு நிறுவனங்களை ஊக்குவிப்பதற்காக பராமரிப்பு மானியத் தொகையை அரசு வழங்கி வருகிறது என்பதனையும் நான் ஏற்கெனவே கூறியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகவும் ஆர்வமாக, உற்சாகமாக அவருடைய தொகுதியில், ஆரணியில் அரசு முதியோர் இல்லம் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். தனியார் தொண்டு நிறுவனங்கள் இந்த ஆரணிப் பகுதியில் முதியோர் இல்லம் ஆரம்பிப்பதற்கு உறுப்பினர் அவர்கள் முயற்சிகளைச் செய்தால் நிச்சயம் அதற்கு அரசு உதவி செய்யும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. போளூர் வரதன்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி பகுதியிலே முதியோர் இல்லம் அமைப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆரணிக்கு அருகில் 15 கிலோ மீட்டரில் திருமலை என்ற கிராமத்தில் ஜைன மதம் சார்பிலே ஒரு தொண்டு நிறுவனம் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. இப்போதுகூட, 200 குழந்தைகளை வைத்து அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. வரைக்கும் school நடத்திக் கொண்டு வருகிறார்கள்; நன்றாக நடத்தி வருகிறார்கள். கடந்த 4, 5 ஆண்டுக் காலமாக முதியோர் இல்லம் திறப்பதற்கு அரசிடத்திலே அனுமதி கோரியும் இதுநாள் வரையில் அனுமதி கிடைக்கவில்லை. இரண்டு மாதங்களுக்கு முன்புகூட நீங்கள் பேப்பரில் பார்த்திருக்கலாம், வாலாஜா அருகில் ஒரு பெரியவர், யாரும் இல்லாத நிலையில் ரோட்டிலே கிடந்தார், 5 நாட்கள் கேட்பாரற்றுக் கிடந்து, பின்னர் hospital-க்கு கொண்டுபோனார்கள்; அங்கு இறந்துபோனார் என்று செய்தி வந்தது. கலமூர் என்ற பகுதியைச் சேர்ந்தவர். இப்படி வயதானவர்களைக் காப்பாற்றுவதற்கு இல்லாத ஒரு சூழ்நிலை அந்தப் பகுதியிலே நிரம்ப இருக்கிறது. ஜைன மதம் அவர்களைக் காப்பாற்றுவதற்கு முன் வருகிறது. அந்த மதத்தின் சார்பிலே நான்கு ஆண்டுகளாக இந்தத் தொண்டு நிறுவனம் நடத்துவதற்கு அனுமதி கேட்டும், இதுவரையில் அரசிடமிருந்து எந்தப் பதிலும் இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனியார் நடத்துவதற்கு ஏற்பாடு செய்தால் வழங்கப்படும் என்று சொல்கிறார்கள். திருமலையில் இயங்குகிற அந்த ஜைன மதத் தொண்டு நிறுவனத்திற்கு அனுமதி அளித்தால், அதை நடத்துவதற்கு அவர்கள் தயாராக

[2005 மார்ச் 8

இருக்கிறார்கள்; அரசு ஆவன செய்யுமா என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஆரணி பகுதியில் முதியோர் இல்லங்கள் ஆரம்பிப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று நான் சொன்னதாக, அவர் இங்கு பேசுகின்ற நேரத்தில் எடுத்துக் கூறினார்கள். ஆனால், நான் அவ்வாறு கூறவில்லை. ஏற்கெனவே மாண்புமிகு அண்ணன் ஜெமினி ராமச்சந்திரன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், அந்தப் பகுதியில் தனியார் தொண்டு நிறுவனங்களை முதியோர் இல்லங்கள் நடத்த முன்வரச் செய்தால், அரசு அதற்கு உதவி செய்யும் என்றுதான் நான் கூறியிருந்தேன். அதேநேரத்தில், ஏற்கெனவே அங்கு ஜைன மதத்தின் சார்பாக ஒரு தொண்டு நிறுவனம் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்றும், அதற்கு அரசின் சார்பாக அனுமதி இல்லை என்றும் இங்கு எடுத்துக் கூறினார்கள். அதைப்பற்றிய விவரங்களை மாண்புமிகு உறுப்பினரவர்கள் என்னிடம் கொடுப்பாரேயானால், நிச்சயம் அவற்றைப் பரிசீலித்து, அதற்கு அனுமதி வழங்க அரசு ஏற்பாடு செய்யும் என்பதனையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் இல்லங்களைத் தனியார் தொண்டு நிறுவனங்கள் அமைக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதற்கு அடிப்படைத் தகுதி என்ன என்பதை அமைச்சர் அவர்கள் வாயால் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் அதற்குத் தனிக் கேள்விப் போட்டால், நிச்சயம் அதற்கு என்ன தகுதி இருக்க வேண்டும் என்பது குறித்து நான் விளக்கமாகப் பதில் அளிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 107, திரு. ப. சிதம்பரம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.



2005 மார்ச் 8]

**107—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

***35256—திரு. ப. சிதம்பரம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் தொகுதி, பவானிசாகர் ஊராட்சி ஒன்றியம், பனையம்பள்ளி ஊராட்சியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானிசாகர் ஊராட்சி ஒன்றியம், பனையம்பள்ளி கிராமத்தில் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**திரு. ப. சிதம்பரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலாவதாக, தமிழ்நாடு அரசு பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையின் சார்பாக ஒவ்வொரு வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்திலும் 20-க்கும் மேற்பட்ட மருத்துவர் குழுக்களைக் கொண்டு இலவச சிறப்பு மருத்துவ சிகிச்சை முகாமினை நடத்த ஆணையிட்டு அதன் மூலமாக என் தொகுதியில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏழை எளிய ஆதிதிராவிட மக்கள் சிகிச்சை பெற்றுப் பயனடைந்துள்ளார்கள்; இதற்கு முதற்கண்ணாக, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர், தங்கத் தாரகை, டாக்டர் புட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் சார்பிலும் என் தொகுதி மக்களின் சார்பிலும் நன்றிதனைக் காணிக்கையாக்குகின்றேன்.

பவானிசாகர் ஊராட்சி ஒன்றியம், பனையம்பள்ளி ஊராட்சியை மையமாகக் கொண்டு, சுற்றிலும் 6 ஊராட்சிகள் உள்ளன. அவற்றில், சுமார் 50 ஆயிரம் மக்கள் வசித்து வருகின்றார்கள். அவர்களில், 40 ஆயிரம் வாக்காளர்கள் இருக்கிறார்கள். மேலும் அங்கு 10 கிலோ மீட்டர் தொலைவில் அரசு ஆரம்ப சுகாதார நிலையமோ மற்ற அரசு மருத்துவமனைகளோ ஏதும் இல்லை. பனையம்பள்ளி ஊராட்சி, பனையம்பள்ளி முக்கியமான ஊராகும். இப்பகுதி, புளியம்பட்டி, பவானிசாகர், பண்ணாரி ஆகிய இடங்களுக்குச் செல்லும் வழியில்

அமைந்துள்ளதால் போக்குவரத்து நிறைந்த பகுதியாக உள்ளது. இங்கு, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடியின மக்கள் அதிகமாக வாழ்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர், தங்கத் தாரகை, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் இதனை மறுபரிசீலனை செய்து, நடப்பு ஆண்டிலே இங்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அமைச்சர் முன்வருவாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதன் அடிப்படையிலே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய மேலான பார்வைக்குக் கண்டிப்பாக இது எடுத்துச்செல்லப்பட்டு, மக்கள் தொகைக் கணக்கை அடிப்படையாக எடுத்துக்கொண்டு செயல்படுத்தப்படும். அவர் கூறியதைப்போல பனையம்பள்ளி கிராமத்தினுடைய மக்கள் தொகை 1,490 ஆகும். இக்கிராமம் மல்லியம்பட்டி துணை சுகாதார நிலையத்தையும் புஞ்சைபுளியம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தையும் சார்ந்தது. இக்கிராமத்திற்கு 6 கிலோ மீட்டர் தொலைவில் புஞ்சைபுளியம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையமும், 10 கிலோ மீட்டர் தொலைவில் பவானிசாகர் அரசு மருந்தகமும் செயல்படுகின்றன. இக்கிராமம், பவானிசாகர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. பவானிசாகர் ஊராட்சி ஒன்றியத்தினுடைய மக்கள் தொகையை அடிப்படையாக எடுத்துக்கொண்டாலும், இவ்வூராட்சி ஒன்றியத்திலே 2 ஆரம்ப சுகாதார நிலையங்கள், புஞ்சைபுளியம்பட்டி, வின்னப்பள்ளி ஆகியவை இருக்கின்றன. மேலும், மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச்சென்று, வருகின்ற நிதி ஆண்டில் நிதிநிலைமைக்கேற்ப அரசு ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. சிதம்பரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்காமல் கொடுக்கின்ற மனம், கேட்டதெல்லாம் தருகின்ற குணம், இல்லை என்ற சொல்லுக்கே இடம் இல்லாதவகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற தங்கத் தாரகை, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலே இப்போது அமைச்சரவர்கள் சிந்திக்கப்படும் என்று கூறியதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பிலும், என் தொகுதி மக்கள் சார்பிலும் நன்றிதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் சி. விஜயபாஸ்கர்.





**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன? ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையங்களிலே Labour Ward என்று சொல்லக்கூடிய அந்த பிரசவ அறையைக் கட்டி, அங்கே அவசியம் ஒரு பெண் மருத்துவரை, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் 24 மணி நேரமும் அங்கேயே தங்கி இருக்கக்கூடிய வகையிலே, பெண் மருத்துவர்களை, M.D. அல்லது D.G.O. முடித்த பெண் மருத்துவர்களை நியமித்து, ஏழை எளியவர்களுக்கு உதவி செய்ய அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, கிட்டத்தட்ட 1,415 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. இந்த 1,415 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் கிட்டத்தட்ட 104 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மேம்படுத்தப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே, இங்கே சில மாமன்ற உறுப்பினர்கள், தங்களுடைய தொகுதியிலே அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மேம்படுத்தப்பட்டனவா என்று தெரியாமல்கூட சில கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். இருந்தபோதிலும், அதற்கு நான் பதில் அளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். நேற்றும் பதில் அளித்தேன், இன்றும் பதில் அளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*முற்பகல் 10-35*

1981-லே 20 படுக்கைகள் கொண்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. அவற்றிலே ஒட்டுமொத்தமாக 15-ம், அதற்கு அடுத்தாற்போல 15-ம், ஆக 30. 1,415 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலே 104 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டிருந்தாலும், கடந்தகால ஆட்சியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் எதுவுமே தரம் உயர்த்தப்படவில்லை என்பதை மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல், நீங்கள் கோரிய கோரிக்கையின் அடிப்படையில் இன்றையதினம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கிட்டத்தட்ட 90 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தேர்வு செய்து அங்கே பேறுகாலத்திற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், இந்தத் தரம் உயர்த்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார

[2005 மார்ச் 8

நிலையங்கள் அத்தனையிலும் அதற்கான வசதிகள் ஏற்பாடு செய்து அங்கிருக்கக்கூடிய மக்களுக்குப் பல்வேறு வசதிகளும் செய்து தரப்படுகின்றன என்பதை இந்த மாமன்றத்தில் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எஸ். தென்னரசு.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு தொகுதி, சித்தோட்டில் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மேம்படுத்துவதாக இருந்தது. ஆனால் அது இன்னும் செய்யப்படவில்லை. 3 ஏக்கர் நிலம் இருக்கின்ற காரணத்தாலும், அது தேசிய நெடுஞ்சாலையிலே இருக்கின்ற காரணத்தாலும், ஈரோடு அருகில் சித்தோட்டில் உள்ள மருத்துவமனையை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக இந்த ஆண்டு மேம்படுத்திக் கொடுப்பதற்கு, மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத்தைப் பொறுத்தவரை, கிட்டத்தட்ட 3 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. அவை, நம்பியூர், தாளவாடி, கூகளூர். மேலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று வருகின்ற ஆண்டில், நிதிநிலைமைக்கேற்ப அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இயங்கி வருகின்ற மொத்தம் 415 ஆரம்ப சுகாதார நிலையங்களில் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன என்பதை நான் தங்கள் வாயிலாக அறிய விரும்புவதோடு, என்னுடைய திருவெறும்பூர் தொகுதியிலே திருநடுங்குளம் ஊராட்சியிலும், அதுபோன்று கிளக்குறிச்சியிலும் இயங்கிக் கொண்டிருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஊராட்சிமன்ற அலுவலகத்திலேயே இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றிற்கு இந்த அரசு சொந்தக் கட்டடம் அமைத்திட முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2005 மார்ச் 8]

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 415 அல்ல, 1,415 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்றேன். தற்போது அரசுக் கட்டடத்தில் செயல்படும் (குறுக்கீடு) நீங்கள் 415 என்று சொன்னீர்கள். சின்ன correction தான். வேறொன்றுமில்லை, அதில் தப்பில்லை. தமிழ்நாட்டில் செயல்படும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 1,415. தற்போது அரசுக் கட்டடத்திலே செயல்படும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் எண்ணிக்கை 1,368. அரசுக் கட்டடம் கட்டப்பட்டு வரும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை 10. அரசு கட்டடம் இல்லாத ஆரம்ப சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை 37. அரசுக் கட்டடம் கட்டப்பட்டுவரும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் 10-லே, காஞ்சிபுரத்தில் ஒக்கியம் துரைப்பாக்கம், பெரம்பலூரில் குன்னம், தஞ்சாவூர், மதுரை, பரமக்குடி, கிருஷ்ணகிரி, தேனி, நாகர்கோவில் ஆகியவற்றிலே கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்ட நிலையில் இருக்கின்றன என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதுமட்டுமல்ல, தங்களுடைய தொகுதிக்குட்பட்ட அந்த அரசு ஆரம்ப சுகாதார நிலையம், ஊராட்சி ஒன்றியத்தில் இருந்தால் அல்லது அந்த இடத்தில் நிலங்கள் ஏதாவது இருந்தால் கண்டிப்பாக அரசால் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பேசுகின்றபோது, நேற்றைக்கு ஒரு மாமன்ற உறுப்பினர் இங்கே தரம் உயர்த்தியதுகூட தெரியாமல் கூறியதாகக் கூறினார்கள். நான்தான் அதைக் கேட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி ஏதாவது இருந்தால் கேளுங்கள்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** கேள்விதான் நான் கேட்கிறேன். மேடவாக்கத்தில் நடைபெறுகின்ற அந்த ஆரம்ப சுகாதார நிலையம் கடந்த 4 ஆண்டுகளாக 24 மணி நேர மருத்துவமனையாகவும், 24 மணி நேரமும் மருத்துவர்கள் இருந்து சிகிச்சை அளிப்பதையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் மறுக்கிறாரா என்பதை நான் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

[2005 மார்ச் 8

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு உறுப்பினருக்கு ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். நீங்கள் நேற்று கேட்ட கேள்வியை மறந்துவிடக் கூடாது. ஆக, அத்தனையும் அங்கே பதிவிலே இருக்கிறது. "அங்கே X-ray இருக்கிறது, அங்கே X-ray வரவில்லை, மீண்டும் அங்கு 24 மணி நேரம் வேலை செய்கிறார்கள், அது மேம்படுத்தப்பட்டது, அதை மேம்படுத்த கடந்தகால ஆட்சியிலே எங்களுக்கு வாக்குறுதி கொடுத்தார்கள்" என்ற அத்தனையும் உண்மைக்குப் புறம்பானவை. ஆகவே, நீங்கள் நேரடியாகச் சென்று அந்த அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பார்வையிட்டு வந்து, உங்களுடைய கேள்வியைக் கேட்குமாறு நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 108, டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**108—**

**மூலிகைப் பண்ணை**

***35435—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி அரசு மருத்துவமனைகளில் மூலிகைப் பண்ணை அமைக்க அரசு பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனை வளாகத்தில் தனியாக மூலிகைப் பண்ணை அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி.

**டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டும் அம்மா!" என்று பெண்மையைப் பெருமைப்படுத்தினார் கவிமணி. உலக மங்கையர் எல்லாம் செய்த தவப் பயனாய்த் தோன்றிய மங்கையர் திலகமே! மகளிர் நலனுக்காக வாழ்ந்து கொண்டிருக்கும் மாமணியே! மகளிர் திட்டங்களுக்காக மாபெரும் விருதுபெற்ற தங்கத்



2005 மார்ச் 8]

தாரகையே! மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் அம்மா அவர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாகவும், பெண் சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாகவும், பெண் அமைச்சர்களின் சார்பாகவும், ஒட்டுமொத்த மகளிரின் சார்பாகவும், இந்த நல்ல நாளிலே, மகளிர் தின வாழ்த்துக்களை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்பெருமைமிகு நல்ல நாளிலே, மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக சிந்தியா பாண்டியன் என்ற கல்வியாளரை, ஒரு பெண்ணை நியமித்து மேலும் பெண் குலத்திற்கு பெருமை சேர்த்தமைக்காக மீண்டும் பெண் குலத்தின் சார்பாக எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனை வளாகத்தில் மூலிகைப் பண்ணை அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். எனது குளத்தூர் தொகுதியிலே கீரனூர், அன்னவாசல், இலுப்பூர், விராலிமலை ஆகிய மருத்துவமனைகளிலே சித்த மருத்துவப் பிரிவுகள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு நாளும் மூலிகை மருத்துவமான சித்த மருத்துவத்திற்காக ஏராளமான மக்கள் வந்து பயனடைந்து செல்கின்றார்கள். மேலும், சித்த மருத்துவப் பிரிவுக்கென தனியாக எனது சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலே, இரண்டு கட்டடங்கள், இரண்டு பிரிவுகள் நான்கு இலட்சம் ரூபாய் செலவிலே கட்டித் தரப்பட்டிருக்கின்றன. அருகிலே மூலிகைப் பண்ணை அமைப்பதற்கு ஏராளமான இடமும் இருக்கிறது. எனவே, மூலிகைப் பண்ணை தனியாக அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை என்றாலும், சித்த மருத்துவர்கள்— ஆங்காங்கு பணியாற்றக்கூடிய, எனது குளத்தூர் தொகுதியிலே பணியாற்றக்கூடிய, சித்த மருத்துவர்களே—அவர்களுடைய செலவிலேயே சிறிய மூலிகைப் பண்ணைகளை அமைத்திருக்கிறார்கள்; அவற்றைப் பராமரிப்பதற்காகவும், விரிவுபடுத்துவதற்காகவும், அரசு ஏதாவது நிதி ஒதுக்கித் தர முன்வருமா என்று தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களிடத்திலே அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலிகைப் பண்ணையைப் பற்றியும், அதை வளர்ப்பதற்கான அரசு நிதியைப் பற்றியும், கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். சுகாதாரத் துறையைப் பொறுத்தவரையிலே, தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகம்

[2005 மார்ச் 8

சார்பாக, நாமக்கல் மாவட்டத்திலே இருக்கக்கூடிய கொல்லிமலையிலே, கிட்டத்தட்ட 50 ஏக்கர் நிலத்திலே அதற்கான பண்ணைகளில் பயிரிடப்படுகின்றன. இந்தத் துறையைப் பொறுத்தவரையிலே இருக்கக்கூடிய ஒரே இடம், அந்த ஒரே இடத்தில்தான் மூலிகைப் பண்ணை நடத்தப்படுகின்றது. ஆனால், வனத் துறை சார்பாக, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, இந்த மூலிகையை வளர்க்க வேண்டும் என்ற ஒரு நல்லெண்ணத்திலே, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து, கிட்டத்தட்ட தமிழகத்திலே 12 வனத் துறை இடங்களைக் கண்டுபிடித்து, அந்த இடங்களில் எல்லாம் இன்றையதினம் மூலிகைப் பண்ணைகள் வளர்க்கப்படுகின்றன. இதற்கு முன்னாலே அங்கிருக்கக்கூடிய டேனிடா மூலமாக அந்தப் பண்ணைகள் எல்லாம் பாதுகாக்கப்பட்டு வந்தன.

இந்த ஆண்டு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பத்து இலட்சம் ரூபாயை, வனத் துறையின் மூலமாக, ஆங்காங்கு இருக்கக்கூடிய வனத் துறை பண்ணைகளைப் பாதுகாப்பதற்காக நிதியை ஒதுக்கி, குறிப்பாக எடுத்துக்கொண்டால், திண்டுக்கல் மாவட்டத்திலே இருக்கக்கூடிய அழகர்கோயில், கொடைக்கானல், நாகப்பட்டினம் மாவட்டத்திலே இருக்கக்கூடிய கோடியக்கரை, சேலத்திலே இருக்கக்கூடிய கொல்லிமலை, திண்டிவனத்திலே இருக்கக்கூடிய குறும்புரம், கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கக்கூடிய பேச்சிப்பாறை, திருவண்ணாமலையிலே இருக்கக்கூடிய தென்மலை, கோவையிலே இருக்கக்கூடிய டாப்சிலிப், ஸ்ரீவில்லிப்புத்தூரிலே இருக்கிற தானிப்பாறை, திருநெல்வேலியிலே இருக்கிற முண்டந்துறை, குற்றாலம், நம்பிகோயில், ஆகிய வனத் துறைக்குட்பட்ட கிடங்குகளில், வனத் துறையின் மூலமாக மூலிகைகள் அங்கே வளர்க்கப்படுகின்றன. கிட்டத்தட்ட எட்டு இடங்களிலே, அதாவது ஆத்தூர், செங்கல்பட்டு, கோயம்புத்தூர், தருமபுரி, தொட்டபெட்டா, மதுரை, சேலம், வேலூர் ஆகிய எட்டு இடங்களிலே, இந்த மூலிகைகளை வளர்த்து வரக்கூடிய விவசாயிகளுக்கு வசதியாக அந்த மூலிகைகளுக்கான மரங்கள் கொடுக்கப்படுகின்றன என்பதை இந்த மாமன்றத்தில் பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி.

*முற்பகல் 10-45*

**டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** வனத் துறை மூலம் மூலிகைப் பண்ணைகள் வளர்க்கப்படுகின்றன என்ற அமைச்சர் அவர்களின்



2005 மார்ச் 8]

விளக்கத்திற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, புதுக்கோட்டை மாவட்டத்திலே 20 சித்த மருத்துவப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன; இவற்றையெல்லாம் மேற்பார்வை செய்வதற்காக, மாவட்ட சித்த மருத்துவ அலுவலருக்குத் தனியாக வாகனம் வழங்கும் திட்டம் ஏதாவது அரசிடம் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற நிதியாண்டில் நிதிநிலைக்கேற்ப, ஆங்காங்கு இருக்கக்கூடிய மாவட்ட சித்த மருத்துவர்களுக்கு, வாகனம் வழங்குவது குறித்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, அதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை உட்பட தமிழகத்தின் பல்வேறு இடங்களில், அரிய மூலிகைகள் கிடைக்கின்றன. இந்த அரிய மூலிகைகளை வெளிநாட்டவர் patent உரிமை பெற்றுவிடுகிறார்கள். அவ்வாறு patent உரிமை கொடுக்காமல் இருக்க, அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூலிகைப் பண்ணைகளைக் காப்பதற்காக National Medicinal Plant Board என்ற ஒன்று டெல்லியிலே இருக்கின்றது. அதற்குக்கீழாக, தமிழகத்திலே Tamil Nadu Medicinal Plant Board என்று இருக்கிறது. அங்கே, மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் தலைவராகவும், இங்கே மாநிலத்தினுடைய சுகாதாரத் துறை அமைச்சர் தலைவராகவும் இயக்கப்படுகிறார்கள். இந்த மூலிகைகளைப் பொறுத்தவரையிலே, இந்தக் கட்டுப்பாடுகளுக்குள்ளாகக் கிட்டத்தட்ட மத்தியிலே 28 Committee-களும், மாநிலத்திலே 14 Committee-களும் போடப்பட்டிருக்கின்றன. இவற்றில் அத்தனை துறைகளினுடைய செயலாளர்களும், ஆங்காங்கு இருக்கக்கூடிய என்.ஜி.ஓ.-க்களும் கலந்தாலோசித்து, வெளிநாட்டவர்கள் இதுபோன்ற மருந்துகளை, மூலிகைகளை எடுப்பார்கள் என்றால், அதற்கும் இந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும். அதுமட்டுமல்லாமல், கடந்த ஓராண்டு காலத்திற்கு முன்னால், இதற்கான கூட்டம் கூடி, மத்திய அரசிடம் நிதி பெறுவதற்கு, மத்திய அமைச்சருக்குக் கோப்புகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. கூடியவிரைவிலே அதற்கும் நடவடிக்கை

எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூலிகைகளை வளர்ப்பதன் மூலமாக, சித்த மருத்துவத்தில் இவற்றைப் பயன்படுத்துவதற்கு, ஏதாவது வழிவகை நம்முடைய மாநிலத்திலே செய்யப்படுகின்றதா? அந்த மருந்துகளை விற்பனை செய்வதற்கு ஏதாவது நடைமுறை சாத்தியக்கூறுகள் உள்ளனவா? அதுபோன்று, சில மூலிகைகள்; அவற்றினுடைய இனமே அழிந்து போகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. குறிப்பாக, மூடில்லா தாழி என்று சொல்கிற ஓர் அரிய மருந்து வகை இலை இருந்தது. இப்போது நம்முடைய பல்வேறு பகுதியில் அது இல்லாத நிலை உருவாக்கப்பட்டுள்ளது. எனவே, இன்னும் இந்தத் துறையிலே அறிவார்ந்தவர்களைக் கண்டுபிடித்து, இவ்வாறு அழிந்து வருகின்ற மூலிகைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு, அரசு முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

## 2. பாராட்டு-தொடர்ச்சி

### உலக மகளிர் தினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வாழ்த்து-தொடர்ச்சி

*(மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவைக்குள் நுழைந்தார்.)*
*(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனைத்துலக மகளிர் தின விழாவான இன்று, ஆக்கபூர்வமான நலப் பணிகளாலும், ஏழைகளுக்கு இரங்கும் வள்ளன்மையாலும், பெண்குலத்தின் பெருமையை உலகறிய ஓங்கி நிலைநிறுத்தி, வரலாற்றைப் படைத்திருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், நீடு வாழ்க எனப் பேரவையின் சார்பில் என் வாழ்த்து, வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பா. வளர்மதி.

*** மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அனைத்துலகப் பெண்கள் தினம். நியூயார்க் நகரில் Clara Zetkin, Rosa Luxemburg போன்ற பெண்கள் பெண்ணுரிமைப் போராட்டத்திற்குத் தலைமைப் பொறுப்பேற்று 'ஆண்களுக்கு நிகராகப்



பெண்களுக்கும் சம்பளம் கொடு' என்று கோபன்ஹேகன் நகரில், 1910 ஆம் ஆண்டு, மார்ச் 8-ல் போராடி வெற்றி பெற்ற தினத்தை அனைத்துலகப் பெண்கள் தினமாகக் கொண்டாட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆண்களுக்கு நிகராகப் பெண்களுக்குச் சம்பளம் கொடு என்கிற போராட்டத்திற்கு உலகம் முழுவதும் இப்போது விழா கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், பெண்கள் சமுதாயத்திற்குப் பாடுபட்டவர்; பெண் குலத்தின் முன்னேற்றத்தைத் தன் வாழ்நாள் இலட்சியங்களில் ஒன்றெனக் கொண்டவர்; அந்த இலட்சியங்களின் வெற்றியைத் தன் கண்முன்னே அடுக்கடுக்காகக் கண்டு வருபவர், தொட்டில் குழந்தைத் திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், பெண்கள் சுய உதவிக் குழு அமைப்புகள், அனைத்துப் பெண்கள் காவல் நிலையங்கள், பெண்களின் அதிரடிப்படை, அனைத்துப் பெண்கள் காவலர் அணி, பெண்களுக்கான தொழிற்பேட்டைகள், அரசு உயர் பதவிகளில் பெண்கள், உள்ளாட்சி அமைப்புகளில் பெண்கள் (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்றத்தில் பெரும்பாலான பெண்கள், தலைமை ஏற்று கட்சி நடத்துவதில் கட்சியின்கீழ் மட்டத்திலேயிருந்து மேல்மட்டம் வரை பெண்களுக்கு வாய்ப்புரிமை, குழந்தைகளின் தலைப்பு எழுத்தாக, தாயின் பெயரை வைத்துக்கொள்ள அனுமதி, குடிமகன் என்று மட்டுமே அழைக்கப்பட்டு வந்த வார்த்தையோடு, குடிமகள் என்றும் வைத்துக்கொள்ள அனுமதி, பெண் குழந்தையாகப் பிறந்தால், பிறக்கும் குழந்தைக்குத் தென்னை இளங்கன்று, சுனாமித் தாக்குதலால் ஏற்பட்ட பேரழிவில் பெரும்பாலானவர்கள் பெண்கள் மற்றும் குழந்தைகள் என்பதை அறிந்து, அரசின் வாழ்வுப் பாதுகாப்பு, இந்தச் சாதனைகளுக்காகவே வருங்கால வரலாற்றில் தனக்கெனத் தனியிடம் பெற்றுவரும் சாதனையாளர், தமிழ்நாட்டுப் பெண் குலத்தின் பொன் விளக்கு, தமிழகத் தாய்க் குலத்தின் தங்கத் தாரகை, மாண்புமிகு அம்மா அவர்களை வாழ்த்த வயதில்லை (மேசையைத் தட்டும் ஒலி) வாழ்த்த வயதில்லை, பெண் குலத்தின் சார்பிலே, பெண்குல சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பிலே வணங்கி விடை பெறுகிறேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10-50*

## 1. வினாக்கள்—விடைகள்—தொடர்ச்சி

### உடுக்குறியிட்ட வினாக்கள்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பதிலைத் தொடரலாம்.

[2005 மார்ச் 8

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய வரலாற்றிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சுகாதாரத் துறையைப் பொறுத்தவரையிலே—இன்றையதினம். மகளிர் தினமாக இருப்பதால், சொல்கிறேன்— கிராமப் பகுதியிலே இருக்கக்கூடிய பெண்கள் எல்லாம், இப்பொழுது பிரசவத்திற்கு அரசு மருத்துவமனைக்குச் செல்லும்பொழுது, அந்தப் பிரசவத்தின்போது அந்த உறவினரே நேரடியாக உள்ளுக்கு, அந்த பிரசவ அறைக்குச் செல்லலாம் என்ற ஒரு கட்டளையிட்டிருக்கிறார்கள். எந்த மாநிலத்திலும் இதுபோன்ற உத்தரவு இல்லையென்பதை இந்த மகளிர் தினத்திலே நான் பெருமையாகச் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உறுப்பினருடைய கேள்வி, அவருடைய தொகுதிக்குட்பட்ட கேள்வி. பேச்சிப்பாறை வனப் பகுதியிலே, சுமார் 160 எக்டேர் மூலிகைப் பாதுகாப்புப் பகுதி உள்ளது. இப்பகுதியிலே, 182 வகை மூலிகைத் தாவரங்கள் உள்ளன. அழிந்து வரக்கூடிய அரிய தாவரங்கள் இங்கு 17 வகை உள்ளன. இங்கு, சுமார் 250 வகை மூலிகைத் தாவரங்களை உள்ளடக்கிய சுற்றுலாப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. ஒரு மகளிர் சுய உதவிக் குழு தொடங்கப்பட்டு மூலிகை நாற்றங்கால் வளர்ப்புத் தொழிலிலே ஈடுபட்டு வருகிறது. கச்சோளம், சாரகா, ஆரோக்கிய பச்சிலை, சித்திரத்தை, அமல்பொறி போன்ற தாவரங்கள் வளர்க்கப்படுகின்றன. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இதுபோன்ற அழியக்கூடிய மூலிகைகளை வனத் துறையின் மூலமாகப் பாதுகாக்கவேண்டும் என்பதற்காக, பத்து இலட்சம் ரூபாயை ஒதுக்கி, குமரி மாவட்டத்திலே இருக்கக்கூடிய அந்தக் குமரிக் கோட்டத்திற்கு ரூ.35,000 ஒதுக்கப்பட்டு இம்மூலிகைகள் தோட்டப் பகுதி, பராமரிக்கும் முறையாகவும், நாற்றங்கால் வளர்ப்பதற்காகவும் பயன்படுகிறது என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இந்தியத் திருநாட்டிலிருந்து பல ஆயிரம் கோடிகளுக்கும் அதிகமான அளவிலே வெளிநாடுகளுக்கு, நமது இந்தியத் திருநாட்டினுடைய மூலிகைகள் ஏற்றுமதியாகின்றன. குறிப்பாக, ஜப்பான், சீனா, கனடா போன்ற நாடுகளுக்கு அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதிலே நம்முடைய மாநிலத்திலே தூத்துக்குடி பகுதியிலிருந்து அதிகமாக கப்பல் மூலமாக வெளிநாடுகளுக்குச் செல்கிறது. இதிலே எந்தெந்த மூலிகைகளை அதிகமாக வெளிநாடுகளிலே விரும்பி



2005 மார்ச் 8]

வாங்குகிறார்கள் என்பதைக் கண்டறிந்து, அந்த மூலிகைகளை அதிகமாக நமது பகுதிகளிலே பயிரிடுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிவதோடு, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் குறிப்பிட்டதுபோல, பலதரப்பட்ட மூலிகைகள், இப்போது வெகுவாக அழிந்துவருகின்ற சூழ்நிலை; Patent right-களையும் வெளிநாட்டவர்கள் உரிமை கொண்டாடுகிறார்கள். மஞ்சள், வேப்பிலைக்குக்கூட வெளிநாட்டுக்காரர்கள், அமெரிக்கர்கள் எங்களுக்குத்தான் அந்த Patent right இருக்கிறது என்று சொல்லுகின்ற ஒரு துர்பாக்கியமான சூழ்நிலை. எனவே, நம்முடைய நாட்டில் இருக்கின்ற மூலிகையினுடைய தன்மைகளை அறிந்து அந்த Patent right-களை நாமே நிலைநாட்டிக் கொள்வதற்காகவும், தரமான மூலிகைகளைப் பயிரிட்டு அதிகமாக வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வதற்காகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அம்மா அவர்கள்கூட, ஓர் அருமையான திட்டத்தை, தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் என்று அறிவித்திருக்கிறார்கள். அந்தத் தரிசு நிலங்களிலேகூட விளைகின்ற மூலிகைகள் நூற்றுக்கணக்காக இருக்கின்றன. அவற்றையெல்லாம் கண்டறிந்து, அவற்றுக்கு முன்னுரிமை கொடுத்து வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வதோடு, நமது மாநிலத்திற்கு வருமானத்தை அதிகம் பெருக்கிக்கொள்கின்றவிதத்திலே, அரசு கனிவுடன் பரிசீலித்து ஆவன செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூலிகைப் பண்ணைத் திட்டத்தை, காட்டிலே வளரக்கூடிய மூலிகைகளைப் பாதுகாக்கவேண்டும் என்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 1993-1994-ல் கொண்டு வந்தார்கள். இந்தத் திட்டத்தினுடைய நோக்கமே காடு, காடு சார்ந்த இடங்களிலே இருக்கக்கூடிய மூலிகைகளைப் பாதுகாக்கவேண்டும் என்பதுதான். இந்தத் திட்டத்தை, பெங்களூரிலே இருக்கக்கூடிய ஒரு தொண்டு நிறுவனம்மூலம் சேர்ந்து, 'டேனிடா' மூலம் இப்போது தமிழகத்திலே இருக்கக்கூடிய—ஏற்கெனவே நான் கூறியதுபோல், Medicinal Plantation Consideration Area என்று கூறியதுபோல், வனப் பாதுகாப்பு என்று குறிப்பிட்ட அந்தக் கிட்டத்தட்ட—12 பகுதிகளிலும், அதற்கு மேலாக —development— வளர்ச்சியிலிருக்கக்கூடிய 8 பகுதிகளிலும், இப்போது அந்த மூலிகைகள் எல்லாம் பாதுகாக்கப்படுகின்றன.

முற்பகல் 10-55

இந்த அரசைப் பொறுத்தவரையிலே, வனத் துறையின்மூலம், அந்த மூலிகைகள் அத்தனையும் பாதுகாக்கப்படுகின்றன. ஆனால், டேனிடா-வினுடைய நிதி, இந்த ஆண்டு முடிவதால், மாண்புமிகு புரட்சித் தலைவி

அம்மா அவர்கள், இந்த 2004-2005-க்கான Part II Scheme-லே வனத் துறையின் மூலமாக, 10 இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கி, அத்தனை இடங்களிலும் இருக்கக்கூடிய மூலிகைகளைப் பாதுகாத்து வருகிறார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையிலே, அரசின் சார்பாக இருக்கக்கூடிய அந்த மூலிகைப் பண்ணைகளை—உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், திண்டுக்கல்லிலே இருக்கக்கூடிய அந்த மூலிகைப் பண்ணைகளை—பாதுகாத்து, அங்கு இருக்கக்கூடிய விவசாயிகளுக்கும், அங்கேயிருக்கக்கூடிய மருத்துவர்களுக்கும் ஆங்காங்கே இருக்கக்கூடிய வியாபாரிகளுக்கும், மற்றவர்களுக்கும் இந்த மூலிகைகளுடைய வளர்ச்சி, இந்த மூலிகைகள் எதற்காகப் பயன்படுகின்றன என்பதை வனத் துறையின் மூலமாக, இதுசம்பந்தமான கருத்தரங்குகளில் எல்லாம் கூறப்படுகின்றன. அதேபோல, ஆத்தூர், செங்கல்பட்டு, கோயம்புத்தூர், தருமபுரி, தொட்டபெட்டா, மதுரை, சேலம், வேலூர் ஆகிய இடங்களில், development area-லே இருக்கக்கூடிய அந்த மூலிகையை—development—வளர்ச்சி area-லே இருக்கக்கூடியவர்கள், அதன் நாற்றுகளை வாங்கி, மீண்டும் பயிர் செய்யலாம். அரசு மூலமாகவோ, தனியார் மூலமாகவோ அங்கே இருக்கக்கூடிய கிட்டத்தட்ட 52 தனியார் N.G.O. நிறுவனங்கள் இப்போது மூலிகைகள் பண்ணைகளைக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரையிலே Tamil Nadu Medicinal Plantation Board சார்பாகவும், அதேபோல் மத்திய அரசிலே இருக்கக்கூடிய National Medicinal Board-ன் சார்பாகவும் இதற்கான பரிந்துரைகள் எல்லாம் அனுப்பப்பட்டிருக்கின்றன. கூடியவிரைவிலே அதற்கும் பதிலை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அதற்கும் இந்த அரசைப் பொறுத்தவரையிலே நீங்கள் கூறியதைப்போல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அந்த மருந்துகளுக்கும், மூலிகைகளுக்கும் அதேபோல் இந்த patent-க்கும் கண்டிப்பாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆர். கோவிந்தசாமி.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிலே பொறுப்பேற்றிருக்கக்கூடிய எங்களது சின்னைய்யா மருத்துவர், டாக்டர் அன்புமணி அவர்கள் Medicos are not against Siddha and Mooligai Medicines என்று கூறியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே சாதாரணமாக H.I.V. போன்ற கொடிய நோய்களுக்கும், மஞ்சள் காமாலை போன்ற கொடிய நோய்களுக்கும் மூலிகைகள்மூலம் நிவாரணம் அளிக்கக்கூடிய மருத்துவ குணம் உள்ளது என்பதை





நிரூபித்திருக்கிறோம். ஆகவே, அவற்றை ஊக்கப்படுத்தும்வகையிலே மத்திய அரசு, மூலிகைப் பண்ணை அமைக்க நிதியுதவி செய்ய தயாராக இருக்கின்றது. அதை மாநில அரசு பயன்படுத்தி, மூலிகைப் பண்ணை அமைக்க நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எற்கெனவே நான் கூறியதுபோல மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்—நான் நன்றாக, தெளிவாக உங்களிடத்திலே கூறியிருக்கிறேன்—அரசைப் பொறுத்தவரையிலே, அரசு சார்பாக Tamil Nadu Medicinal Plantation Board மூலமாக நாங்கள் பரிந்துரை செய்திருக்கிறோம். நிதி வந்தவுடனே, கண்டிப்பாக அதற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலிகை மருந்துகளிலே நிரந்தரமாக நோய்களைத் தீர்க்கும் மூலிகைகள் அதிகமாக இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அதையெல்லாம் கண்டறிந்து மக்கள் பயன்படுத்துவதற்கு அரசு செயல் திட்டம் வகுக்குமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டிப்பாக அரசு அதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நீலகிரி மாவட்டத்தில் உலகப் பிரசித்தி பெற்ற நல்ல மூலிகைகள் எல்லாம் இருக்கின்றன. ஆராய்ச்சியாளர்கள் எல்லாம் சொல்வதுபோல், பல நோய்களைத் தீர்க்கும் வகையான மூலிகைகள் எல்லாம் இருக்கும்போது, நீலகிரி மாவட்டத்திலுள்ள அந்த மூலிகைகளை அரசு உபயோகித்து மக்கள் நல்வாழ்விற்கு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி

[2005 மார்ச் 8

அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரையிலே, நான் ஏற்கெனவே இதுசம்பந்தமாக தெளிவான கருத்தைச் சொல்லியிருக்கிறேன். தமிழகத்திலே Medicinal Plantation Development Area என்று வனத் துறையின் மூலமாக எட்டு இடங்களைக் கண்டறிந்திருக்கிறார்கள். அவற்றிலே தொட்டபெட்டா என்ற ஒரு இடம் இருக்கிறது. ஊட்டியைப் பொறுத்தவரை அங்கே இருக்கக்கூடிய மூலிகைகளைப் பாதுகாப்பதற்கு வனத் துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 109, திருமதி சி.எம். சூரியகலா, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**109—**

## விற்பனைப் பிரிவு

***18581—திருமதி சி.எம். சூரியகலா:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் தொகுதி, தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருட்கள் எளிதில் கிடைக்க அரசு சார்பான விற்பனைப் பிரிவு ஒன்று திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் முன்னேற்றத்திற்கு மகத்தான திட்டங்களைத் தந்து, மகளிர் வாழ்வில் ஒளியேற்றி பெண்களின் பெருமையைத் தரணிக்கு உயர்த்திக் காட்டிய அன்னையே, . . .

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கான அமைச்சரின் பதில் முடிகிறவரை, வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.



2005 மார்ச் 8]

**திருமதி சி.எம். சூரியகலா:** இமயம் தலை வணங்க, எதிரிகள் கதி கலங்க, மக்கள் சக்தி மகத்தான சக்தி, எத்தனை சக்தி எதிர் நின்றாலும், எங்கள் அன்னையின் சக்தியே அகிலத்தை வெல்லும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று நிரூபித்த எங்கள் அம்மாவை வணங்கி, குடியாத்தத்தில் சிறியதும், பெரியதுமாக, கையினால் தயாரிக்கும் தொழில் நிலையங்கள் ஏறத்தாழ 150 நிறுவனங்கள் உள்ளன. இவற்றிற்குத் தேவையான மூலப் பொருட்கள், பாஸ்பரஸ் வட இந்தியாவில் இருந்தும், குச்சிகள், கேரளா மற்றும் ஒரிசாவில் இருந்தும் வருகின்றன. தற்போது, அம்மா அவர்கள் கொண்டு வந்த புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்மூலம், தீக்குச்சி மரங்களை வளர்க்க எனது தொகுதியில் தீப்பெட்டித் தொழிற்சாலைக்கு ஒரு கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டு, அம்மா அவர்கள் ஏற்பாடு செய்துள்ளார்கள். இந்த மரங்கள் வளர்ந்து, பலன் தர நீண்ட காலம் ஆகும். அதனால் சிறிய மற்றும் நடுத்தர தீப்பெட்டித் தொழில் நிலையங்கள், இந்த மூலப் பொருட்களைப் பெறுவதில் அதிக செலவு ஏற்படுகிறது. அதனால் அம்மா அவர்கள் அரசு கதர் வாரியத்தின் மூலமோ, சிறு தொழில் மூலமோ தீப்பெட்டி மரக் குச்சிக்காக கிடங்கு ஒன்றும், பாஸ்பரஸ் போன்ற மூலப் பொருட்கள் விற்பனை செய்வதற்கு நிலையம் ஒன்றும் அமைத்து, கையினால் பீடி, தீப்பெட்டி. கைத்திறத் தொழில் செய்யும் 45 ஆயிரம் குடும்பங்களின் வாழ்க்கையை மலரச் செய்திடுமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிட்கோ நிறுவனம் கடந்த 20 ஆண்டுகளாக வேலூர் மாவட்டம், குடியாத்தத்தில் மூலப் பொருட்கள் கிடங்கு அமைத்து, அதன்மூலம் தீப்பெட்டித் தொழில்களுக்குத் தேவையான பொட்டாஷியம் குளோரைடு மற்றும் மெழுகு போன்ற மூலப் பொருட்களை விநியோகம் செய்து வந்தது. பொட்டாஷியம் குளோரைடு வாங்குவதற்கு நுகர்வோர்கள் முன்வராததால், அதன் விநியோகம் 12 ஆண்டுகளுக்கு முன்னாலேயே நிறுத்தப்பட்டது. மேலும், மெழுகு விநியோகத்தைப் பொறுத்தவரை, கடந்த 5 வருடங்களாக நுகர்வோர் சிட்கோ நிறுவனத்திடம், மெழுகு வாங்க முன்வரவில்லை. இதுதவிர 2001 ஆம் ஆண்டு, குடியாத்தம் மூலப் பொருட்கள் கிடங்கில் நடைபெற்ற மெழுகு விற்பனையில் கிடைத்த வருமானம், சிட்கோ, மூலப் பொருட்கள் கிடங்கு அமைத்து உள்ள வாடகைக் கட்டடத்திற்குச் செலுத்தவேண்டிய வாடகைக்குக்கூட ஈடாகவில்லை. சிட்கோ நிறுவனமானது, மூலப் பொருட்களை இலாப நோக்கம் இல்லாது விநியோகம் செய்து வந்தாலும், நுகர்வோர் மெழுகு வாங்க முன்வராத காரணத்தினால், குடியாத்தத்தில் உள்ள மூலப் பொருட்கள் கிடங்கு விற்பனைப் பிரிவினைத் தொடர்ந்து நடத்த

[2005 மார்ச் 8

முடியவில்லை. இதுதவிர, தீப்பெட்டித் தொழில் நிறுவனங்களுக்கு, மெழுகினை ரொக்கத்திற்குத்தான் சிட்கோ நிறுவனம் விற்பனை செய்து வருகிறது; கடனுக்குத் தருவதில்லை. ஆகவேதான், தனியார் நிறுவனங்கள், மெழுகினைக் கடன் முறையில் விநியோகம் செய்வதால், குடியாத்தத்தில் மெழுகு வாங்குவதற்கு யாரும் முன்வராத காரணத்தால், விற்பனைப் பிரிவு தொடங்க இயலாத நிலை உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. தகவல் கோரல்

### சேது சமுத்திரக் கால்வாய் திட்டம் — மத்திய நிதி அமைச்சர் கூற்று

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சரினுடைய கவனத்திற்கு ஒரு செய்தியை நான் கொண்டு வருகிறேன். இன்றைக்குக் காலையிலே நான் பத்திரிகையிலே பார்க்கிறபோது—முதலமைச்சர் அவர்கள் படித்து இருப்பார்கள் -- மத்திய நிதி அமைச்சர் அவர்கள், மத்திய பட்ஜெட்டைப் பற்றி ஒரு கூட்டத்திலே பேசுகிறபோது, "சேதுசமுத்திரத் திட்டத்தினுடைய கால்வாய்த் திட்டம் தாமதம் ஆவதற்கு, மாநில அரசு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திடமிருந்து தடையில்லா சான்றிதழ் கேட்டோம்; சென்ற ஆண்டு ஜூலையிலே கேட்டோம் இதுவரையிலே தரவில்லை; அது குறித்து Court-க்கும்போய் இருக்கிறார்கள். எனவே, சேது சமுத்திரத் திட்டம் வருவதற்குத் தடையாக இருப்பது... (குறுக்கீடு) excuse me; சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி Port Trust Chairman, இங்கே தமிழ்நாடு Pollution Control Board Chair Person-க்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கில், உயர் நீதிமன்றம் அந்த Petition-ஐத் தள்ளுபடி செய்துவிட்டது; dismiss செய்துவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2005 மார்ச் 8]

**திரு. துரைமுருகன்:** அதைத்தான் சொல்கிறேன். அவர் மாசுக் கட்டுப்பாடு வாரியத்திலிருந்து அனுப்பவில்லை என்று சொல்லியிருக்கிறார்; ஒன்று. இரண்டாவது, ஆயிரம் கோடி ரூபாய் இந்தத் தமிழ்நாட்டிற்குக் கடல் நீரைக் குடிநீராக்குவதற்குச் சென்ற ஆண்டே ஒதுக்கி இருந்தோம்; சென்ற ஜூலை மாதம், 8 ஆம் தேதி நாங்கள் இந்த அரசைக் கேட்டோம்; நிதி தருகிறோம்; தொழில்நுட்ப உதவியும் தருகிறோம்... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், என்ன? நிதிநிலை அறிக்கையில் பேசும்போது சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** இல்லை, இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நீண்ட விவாதத்திற்கு வந்து இப்போது... (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** இல்லை, இல்லை. இன்றைக்கு வந்த செய்தி....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**திரு. துரைமுருகன்:** உங்களுக்கும் தெரியும். அன்றைக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முக்கியமான பிரச்சினை என்று, அரசாங்கத்தினுடைய கவனத்தை உடனடியாக ஈர்க்கக்கூடிய ஒரு பிரச்சினையைத்தான் சொல்ல வேண்டும். மற்றவற்றை நீங்கள் நிதிநிலை அறிக்கையிலே பேசுங்கள். அவற்றிற்கு முதலமைச்சர் அவர்கள் தெளிவான விளக்கம் அளிப்பார்கள். (குறுக்கீடு) மற்றவற்றை நிதிநிலை அறிக்கையிலே நீங்கள் பேசுங்கள். உங்களுடைய உறுப்பினர் இன்றைக்குப் பேச இருக்கிறார். அவரைப் பேசச் சொல்லுங்கள்.

முற்பகல் 11-05

**திரு. துரைமுருகன்:** ஆகவே ஆயிரம் கோடி ரூபாய் திட்டம் வருவதற்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதிநிலை அறிக்கையிலே பேசச் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** குற்றச்சாட்டு அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குற்றச்சாட்டு என்பதல்ல. (குறுக்கீடு) இவையெல்லாம், நீண்ட விவாதத்திற்கு உரியவற்றை எல்லாம், உடனடியாக இப்படிக் கிளப்பக்கூடாது; இது முறையல்ல.

[2005 மார்ச் 8

## 4. கவன ஈர்ப்பு

### திண்டுக்கல் ராணி மங்கம்மாள் காலனி விட்டு வசதி வாரிய விடுகளுக்குக் கூடுதல் பணம் கட்ட வாரியம் அறிவிப்புக் கொடுத்துள்ளது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. செல்வி க. பாலபாரதி, திருவாளர்கள் ஜே. ஹேமசந்திரன், டி. மணி மற்றும் என். நன்மாறன் ஆகியோரில் ஒருவர், கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்ச் 8, உலகப் பெண்கள் தினத்திற்கான வாழ்த்துக்களையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரை வீட்டு வசதி வாரியத்தால், திண்டுக்கலில் ஆர்.எம். காலனி பகுதியில் 1979 ஆம் ஆண்டில் 150 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு E.W.S., L.I.G., H.I.G. என்ற தனி வீடுகளும், H.B…

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாலபாரதி, அதில் இருப்பதை வாசிக்க வேண்டும், அவ்வளவுதான்.

**செல்வி க. பாலபாரதி:** M.D. என அடுக்குமாடி வீடுகளும், 1984 ஆம் ஆண்டு முதல் தனிப்பட்டோருக்கும், அரசாங்க ஊழியர்களுக்கும் மற்றும் சகல பகுதி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாலபாரதி, 'கவன ஈர்ப்பு' என்பதில் கொடுக்கப்பட்டிருப்பதை வாசிக்க வேண்டும். ( குறுக்கீடு) உங்களுடைய நிகழ்ச்சி நிரலிலேயே இருக்கும் அது.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ரூபாய் 3 இலட்சம் செலுத்தி வாங்கிய வீட்டு வசதி வாரிய வீடுகளுக்கு, திண்டுக்கல் ராணி மங்கம்மாள் காலனியில் குடியிருக்கும் மக்கள், ரூபாய் 34 இலட்சம் முதல் ரூபாய் 40 இலட்சம் வரை உடனடியாகச் செலுத்த வேண்டும் என்று மதுரை வீட்டு வசதி வாரியம் அறிவிப்பு கொடுத்துள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



2005 மார்ச் 8]

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதலமைச்சர் எங்களுடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான விவர அறிக்கையை சபைக்கு அளித்துள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### அறிக்கை

திண்டுக்கல்லில் ஆர்.எம். காலனி பகுதி 1, 2, 3 என மூன்று பிரிவுகளாகக் குடியிருப்புகள் கட்டப்பட்டு பொதுமக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மூன்று பகுதிகளிலும் சேர்த்து, மொத்தம் 1981 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. இப்பகுதியில் 725 குடியிருப்புதாரர்கள் சுத்தக் கிரயப் பத்திரம் பெற்றுப் பயனடைந்துள்ளார்கள். மீதமுள்ள 1256 குடியிருப்புகளில், 353 குடியிருப்புகளுக்கு நிலத்தின் முன்னாள் நிலச் சொந்தக்காரர்கள் நில ஆர்ஜிதத்தின்போது, தங்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை போதுமானதாக இல்லை என, சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, வழக்கு நடைபெற்று வருகிறது. மேற்கண்ட வழக்குகள், திண்டுக்கல் மாவட்ட சார் ஆட்சியர் அவர்கள் அலுவலகத்தால் எதிர்கொள்ளப்பட்டு வருகின்றன. வழக்குகள் இன்னும் முடிவு பெறாத நிலையில் முன்னாள் நிலச் சொந்தக்காரர்கள் கோரியுள்ள உயர்ந்தபட்ச இழப்பீட்டுத் தொகையைக் கணக்கில் கொண்டு மேற்குறிப்பிட்ட 353 குடியிருப்புகள் அமைந்துள்ள நிலங்களுக்குமட்டும், நில வித்தியாசத் தொகை கேட்கப்பட்டுள்ளது. மேலும், முன்னாள் நிலச் சொந்தக்காரர்கள் கோரியுள்ள உயர்ந்தபட்ச இழப்பீட்டுத் தொகையைக் கணக்கில்கொண்டு, நில வித்தியாச விலை தெரிவிக்கப்பட்டு, ஒதுக்கீடுதாரர் கிரயப் பத்திரம் பெற விரும்பினால், தற்போது கேட்கப்பட்டுள்ள உயர்ந்தபட்சத் தொகையைச் செலுத்தி, கிரயப் பத்திரம் பெற்றுக்கொள்ளலாம். அல்லது, இத்திட்டப் பகுதியில் உள்ள நிலத்திற்குரிய நில எடுப்பு வழக்குகள் முடியும்வரை காத்திருந்து, தீர்ப்பின் அடிப்படையில் கணக்கிடப்படும் உரிய கிரயத் தொகையைச் செலுத்தி, கிரயப் பத்திரம் பெற்றுக்கொள்ள முன்வரலாம் என வழிவகை செய்யப்பட்டது. இத்தொகையினைக் கட்டாயம் செலுத்தி, கிரயப் பத்திரம் பெற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என வாரியம் வலியுறுத்தவில்லை. எனவே, எவ்வித பதற்றமும், அச்சமும் அடைய வேண்டிய நிலை இல்லை எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், வழக்கின் தீர்ப்பின்படி, இறுதி விலை நிர்ணயம் செய்யப்படும்போது, ஒதுக்கீடுதாரர்கள் கூடுதலாகச் செலுத்தியுள்ள

[திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்] [2005 மார்ச் 8

தொகை, அவர்களுக்குத் திரும்ப வழங்கப்படும் என வாரியம் தெரிவித்துள்ளது. கிரயப் பத்திரம் பெற விரும்புபவர்களுக்கு மட்டுமே இது பொருந்தும். மற்ற ஒதுக்கீடுதாரர்கள், கூடுதல் இழப்பீட்டுத் தொகை பெற, வழக்கு முடியும்வரை காத்திருக்கலாம் என வாரியத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. கவன ஈர்ப்பு அறிவிப்பில் கூறப்பட்டவாறு, இத்திட்டப் பகுதியில், 725 ஒதுக்கீடுதாரர்கள் சுத்தக் கிரயப் பத்திரம் பெற்றுப் பயனடைந்துள்ள நிலையில் 20 ஆண்டு காலமாக கிரயப் பத்திரம் வழங்கப்படவில்லை என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாலபாரதி, ஏதாவது ஒரு கேள்வி கேளுங்கள்.

**செல்வி க. பாலபாரதி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன். அதில் 1989-ல், 81 குடியிருப்புகள் கட்டப்பட்டிருக்கின்றன. இப்பகுதியில், 725 குடியிருப்புதாரர்கள் சுத்தக் கிரயப் பத்திரம் பெற்று பயன் அடைந்துள்ளார்கள் என்று இருக்கிறது. கடந்த 20 ஆண்டு காலமாகவே, முழுமையாகப் பணம் செலுத்தி கிடைக்கப்பட்ட பத்திரங்களுடைய எண்ணிக்கையே 725 தான். வழக்குகளில் இருக்கக்கூடிய குடியிருப்புகள், வெறும் 353 தான். மீதம் இருக்கக்கூடிய 903 பயனாளிகளுக்கு இன்னமும் சுத்தக் கிரயப் பத்திரம் வழங்கப்படவில்லை. ஆகவே வழக்குகளும் இல்லாமல், முழுமையாகப் பணமும் செலுத்தி இருக்கக்கூடிய இந்த 903 பயனாளிகளுக்கு இன்னமும் ஏன் கிரயப் பத்திரம் வழங்கப்படவில்லை? இதிலேதான் பிரச்சினையே இருக்கிறது. இரண்டாவது, நீதிமன்றத்தில் இருக்கக்கூடிய வழக்குகள் சம்பந்தமாக, அந்த வீட்டு வசதி வாரியத்தினுடைய மதுரை மாவட்ட அதிகாரிகளும் சரி, மேல் மட்ட அதிகாரிகளும் சரி, ஒரு தெளிவான முறையில் அவர்கள் கருத்துகளைச் சொல்வதே இல்லை. குழப்பமான நிலை என்பது தொடர்ந்து நீடித்துக் கொண்டே இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மட்டும் கேளுங்கள்; என்ன என்று ஒரு கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**செல்வி க. பாலபாரதி:** ஆகவே, அந்தப் பயனாளிகள் நலன் கருதி, நீதிமன்றத்தில் இருக்கக்கூடிய வழக்குகளை அரசு வழக்கறிஞர்கள் முறையாக நடத்துவதற்கு உதவியாக, பொது நலச் சங்கங்கள் சார்பாக கூடுதலாக வழக்குரைஞர்களை நியமித்துக்கொள்வதற்கு, நிர்வாகத் தரப்பிலிருந்து அனுமதி வழங்கப்பட வேண்டும். நில உடமையாளர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு வீட்டு



2005 மார்ச் 8] [செல்வி க. பாலபாரதி]

வசதித் துறையினுடைய உயர் அதிகாரிகள் தெளிவான record-களோடு முன்வருவார்களா என்பது என்னுடைய கேள்வி. அதேபோல....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான். அமைச்சர் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) அடுத்த கேள்வியை உங்கள் கட்சி நண்பர்கள் இருக்கிறார்கள்; கேட்பார்கள் மறுபடியும்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம், திண்டுக்கல் ராணி மங்கம்மாள் திட்டப் பகுதியில் சுமார் 53 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. 1976 ஆம் ஆண்டு திட்டம் தொடங்கப்பட்ட இந்தத் திட்டப் பகுதியில், பகுதி 1, பகுதி 2, பகுதி 3-ல் மொத்தம் 1981 குடியிருப்புகள் கட்டப்பட்டன. 1992 ஆம் ஆண்டு முதல் ஒதுக்கீடு செய்யப்பட்டு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டபோது, முன்னாள் நிலச் சொந்தக்காரர்களுக்கு சதுர அடிக்கு 41 பைசா வீதம் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. முன்னாள் நிலச் சொந்தக்காரர்கள், சார்பு நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்த காரணத்தினால் அதனடிப்படையில், ஒரு சதுர அடிக்கு ஒரு ரூபாய் வீதம் விலை நிர்ணயம் செய்து தீர்ப்பு வழங்கப்பட்டது. இதனை எதிர்த்து, கூடுதல் இழப்பீட்டுத் தொகை கேட்டு முன்னாள் நிலச் சொந்தக்காரர்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தனர். அதனடிப்படையில் சில வழக்குகளில் சென்னை உயர் நீதிமன்ற உத்தரவின்படி, ஒரு சதுர அடிக்கு 2 ரூபாய் வீதம் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. இந்தத் திட்டப் பகுதியில் கட்டப்பட்ட 1981 குடியிருப்புகளில் 725 குடியிருப்புகளுக்குச் சுத்தக் கிரயம் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 1256 குடியிருப்புகளுள் 353 குடியிருப்புகளுக்குரிய நிலத்தின் முன்னாள் நிலச் சொந்தக்காரர்கள், நில ஆர்ஜிதத்தின்போது தங்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை போதுமானதாக இல்லையெனக் கூறி, சதுர அடி ஒன்றுக்கு 20 ரூபாய் வீதம் இழப்பீட்டுத் தொகை கேட்டு வழக்குத் தொடர்ந்துள்ளார்கள். இதுசம்பந்தமாக, 11 வழக்குகள் சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. இதே திட்டப் பகுதியில், ஏற்கெனவே சதுர அடி ஒன்றுக்கு ரூபாய் இரண்டு வீதம் விலை நிர்ணயம் செய்து, சென்னை உயர் நீதிமன்றம் ஆணையிட்டதுபோல, இவர்களுக்கும் சதுர அடி ஒன்றுக்கு இரண்டு ரூபாய் வீதம் விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென வாரியம், உயர் நீதிமன்றத்தில் வாதாடி வருகின்றது. வழக்குகள் இன்னும் முடிவுபெறாத நிலையில், ஒதுக்கீடுதாரர்கள் கிரயப் பத்திரம் கோரும்பட்சத்தில், முன்னெச்சரிக்கையின் அடிப்படையில் முன்னாள்

[திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்] [2005 மார்ச் 8

நிலச் சொந்தக்காரர்கள் கோரும் உயர்ந்தபட்சத் தொகையான ரூபாய் 20 வீதம் கணக்கில்கொண்டு, 353 குடியிருப்புகளுக்கும் கிரயப் பத்திரம் வழங்க வாரியம் நோட்டீஸ் அனுப்பியது.

மேலும், வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில், இறுதி விலை நிர்ணயம் செய்யப்படும்போது, ஒதுக்கீடுதாரர்கள் கூடுதலாகச் செலுத்தியுள்ள தொகை, வட்டியில்லாமல் அவர்களுக்குத் திரும்ப வழங்கப்படும் என வாரியம் தெரிவித்துள்ளது. இத்தொகையினைக் கட்டாயம் செலுத்தி கிரயப் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டுமென வாரியம் வலியுறுத்தவில்லை. இவ்வாறு கிரயப் பத்திரம் பெற விருப்பம் இல்லாதவர்கள், நில எடுப்பு வழக்குகள் முடியும்வரை காத்திருந்து, தீர்ப்பின் அடிப்படையில் கிரயத் தொகையைச் செலுத்தி, கிரயப் பத்திரம் பெற்றுக்கொள்ள முன்வரலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதுபோல, கவன ஈர்ப்பில் 20 ஆண்டு காலமாக கிரயப் பத்திரம் வழங்கவில்லை எனக் கூறப்படுவது உண்மையல்ல. மேலும், 1981 குடியிருப்புகளில், 725 குடியிருப்புகளுக்குக் கிரயப் பத்திரம் வழங்கியதுபோக, வழக்கிலுள்ள 353 குடியிருப்புகள் தவிர, மீதமுள்ள 903 குடியிருப்புதாரர்கள், மீதமுள்ள தொகையைச் செலுத்தினால், அவர்களுக்குக் கிரயப் பத்திரம் வழங்க வாரியம் தயாராக உள்ளது என்பதை இந்த மாமன்றத்தின்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நீதிமன்றத்தில் வழக்கு இருந்துகொண்டிருக்கும்பொழுதே, ஏற்கெனவே நீதிமன்றம் நிச்சயித்த அந்த உயர்ந்தபட்சத் தொகையை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று அந்த Housing Board தீர்மானித்து மேல்முறையீடு செய்திருக்கக்கூடிய நேரத்தில், அந்தப் பயனாளிகளுக்கு ஒரு குறைந்தபட்சத் தொகையைச் செலுத்துங்கள் என்று நோட்டீஸ் அனுப்புவது, அந்த வழக்கை எடுத்துச் சென்ற அந்த நில உடைமையாளர்களுக்குச் சாதகமாக இருக்குமா, இருக்காதா? ஒரு நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பு வருகிறவரைக் காத்திருக்காமல், இவ்வளவு கட்ட வேண்டும், இவ்வளவு வரும் என்று எதிர்பார்க்கிறோம் என்று சொல்வது எந்த வகையில் பொருத்தமாக இருக்கும்? இதுதான் அந்தப் பகுதியில் ஒரு பதற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. 3 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலுத்திய அந்த வீட்டு உடைமையாளர்கள் . . .



2005 மார்ச் 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'ஆகவே', என்று ஒரு கேள்வியைக் கேளுங்கள். உரை நிகழ்த்தாதீர்கள். கேள்வியைக் கேளுங்கள். அமைச்சர் பதில் சொல்லுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 இலட்சம் ரூபாய் கட்டி ஏற்கெனவே வாங்கியிருக்கக்கூடிய வீடுகளுக்குக் கூடுதலாக 20 இலட்சம் ரூபாய் additional-ஆகக் கேட்கிறார்கள். அது தவறு என்பதுதான் அவருடைய வாதம். பிரச்சினை, வழக்கு மன்றத்தில் இருக்கும்போது இவ்வளவு தொகை கட்ட வேண்டுமென்று கேட்பது, எந்த வகையில் நியாயம் என்பதுதான் அவரது கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படித் தமிழிலே சொல்லுங்கள்! (சிரிப்பு) திரு. நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வித்தியாசத் தொகை இருக்கிறதே, அதை வாரியமோ அரசோ ஏற்றுக்கொண்டு, அங்கே குடியிருக்கும் மக்களுக்குப் பத்திரத்தைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாரையும் கட்டாயப்படுத்தி இந்தப் பணத்தைக் கட்ட வேண்டுமென்று சொல்லவில்லை. அவர்கள் உடனடியாக எங்களுக்கு அந்தப் பத்திரம் வேண்டுமென்று கேட்கின்ற நிலையில், வாரியம் தன்னுடைய நிலையைச் சரி செய்வதற்காக, அப்படி நீங்கள் உடனடியாக வேண்டுமென்று சொன்னால், வழக்கில் இந்தத் தொகையினைக் கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள்; அந்தத் தொகையைச் செலுத்தினால் தருகின்றோம்; அப்படி இருக்கின்ற நேரத்தில் நீங்கள், வழக்குத் தீருகின்ற நேரத்தில் வட்டியில்லாமல் உங்களுடைய பணம், செலுத்தப்படுகின்ற மீதமுள்ள பணங்களை நாங்கள் தருகின்றோம் என்றுதான் சொல்கிறதே தவிர, வேறு அல்ல. அவர்கள் எங்களுக்கு உடனடியாக வேண்டுமென்று கேட்டதனால்தான் அதுபோன்ற நிலையை எடுக்கவேண்டிய நிலை வாரியத்திற்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மறுபடியும் உங்களிடத்தில் கேட்பது இதுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இதிலே விவாதத்திற்கு இடமில்லை. (குறுக்கீடுகள்)

## 5. அறிக்கை அளித்தல்

### பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். (குறுக்கீடுகள்) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். திருமதி வளர்மதி ஜெபராஜ். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, இதிலே விவாதத்திற்கு இடமில்லை. இதையெல்லாம் நிதிநிலை அறிக்கையிலே பேசுங்கள். (குறுக்கீடு) திருமதி வளர்மதி ஜெபராஜ். (குறுக்கீடுகள்) திருமதி வளர்மதி ஜெபராஜ். (குறுக்கீடுகள்) இல்லை, இதிலே விவாதத்திற்கு இடமில்லை. திருமதி வளர்மதி ஜெபராஜ். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11-15*

***திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மங்கையரை வாழவைக்க வந்த மங்கையர்த் திலகமே, (குறுக்கீடுகள்) மங்கையராய்ப் பிறந்தவரெல்லாம் மனமகிழ்வு அடைய மகளிர் திட்டம் தீட்டும் காவல் தெய்வமே (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பேசட்டும். இதில் விவாதத்திற்கு இடம் இல்லை. (குறுக்கீடு) விவாதத்திற்கு இடம் இல்லை இதில்.

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** காவல் தெய்வமே, உலகமே மகளிர் தினத்தைக் கொண்டாடுகின்ற இந்த நல்ல திருநாளில் உலக மகளிருக்கெல்லாம் எடுத்துக்காட்டாய் விளங்கும் தங்களின் பாதம் வணங்கி. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே சொல்லிவிட்டீர்கள், முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். முடிந்துவிட்டது.

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 2003–2005 ஆம் ஆண்டிற்கான ஐம்பத்து மூன்றாவது அறிக்கையினை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். (குறுக்கீடுகள்)





## 6. வரவு–செலவுத் திட்டம், 2005–2006, பொது விவாதம்–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005-2006 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை. (குறுக்கீடுகள்) 2005-2006 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். திரு. ஞானசேகரன். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, முடியாது. நீங்கள் ஏற்கெனவே சொல்லி, முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். இனிமேல் விவாதத்திற்கு இதிலே இடமில்லை. ஏதாவது இருந்தால், உங்கள் உறுப்பினர் பேசும்போது, பேசச் சொல்லுங்கள். (குறுக்கீடு) தாங்கள் பேரவைத் தலைவர் அனுமதியில்லாமல் பேசுவது அவைக் குறிப்பிலே ஏறாது. தயவுசெய்து அமருங்கள். திரு. ஞானசேகரன். (குறுக்கீடு) உங்கள் உறுப்பினரைப் பேசச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஞானசேகரன் (குறுக்கீடுகள்) திரு. ஞானசேகரன் (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, இதுபோல திட்டமிட்டு வந்து, குழப்பம் விளைவிக்க வேண்டுமென்பதற்காகவே வந்து குழப்பம் விளைவிப்பது முறையல்ல, சரியல்ல, நியாயமல்ல. அமருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஞானசேகரன். (குறுக்கீடுகள்) திரு. ஞானசேகரன், பேசுங்கள். நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவருடைய அனுமதியில்லாமல் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. திரு. ஞானசேகரன், பேசுங்கள். (குறுக்கீடுகள்) ஞானசேகரன். (குறுக்கீடுகள்) ஞானசேகரன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, எஸ்.ஆர்.பி. எல்லாம் உங்கள் வலையில் விழமாட்டார். (குறுக்கீடுகள்) திரு. ஞானசேகரன். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005-2006 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை விவாதத்திலே கலந்து கொள்கிற வாய்ப்பினை நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

> "முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
> இறையென்று வைக்கப் படும்"

என்கின்ற குறளை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே உதாரணம் காட்டி, முதல்வர் அவர்களுடைய நல்லாசியோடு என்னுடைய பணியைத்

தொடருகிறேன் என்று அவர்கள் பட்ஜெட் உரையைத் தொடங்கினார்கள். அவர் அப்படித்தான் கூற முடியும். நாங்கள் அப்படிக் கூற முடியும் என்று யாரும் எதிர்பார்க்கவும் முடியாது. நான் நிதியமைச்சர் ஆகவும் முடியாது. அதே வள்ளுவர் கூறுகிறார்,

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானுங் கெடும்"

என்று ஆளுங்கட்சிக்காரர்களாக இருக்கக்கூடிய அமைச்சர் பெருமக்களேகூட முதலமைச்சருக்கு சில ஆலோசனைகளை அவ்வப்போது வழங்குவதற்காகத்தான், இவ்வளவு பெரிய ஒரு அமைச்சரவையை வைத்திருக்கிறோம். ஒருவேளை, சில நேரங்களிலே முதல்வர் எடுக்கக்கூடிய சில கருத்துக்கள்கூட சரியில்லை என்று சொன்னால், அவற்றை நிச்சயமாக இடித்துரைத்து இது, இது சரியில்லை என்று சொல்லக்கூடிய அமைச்சர் பெருமக்கள், ஆளுந்தரப்பிலே இருக்க வேண்டும். சரி, அவர்கள் செய்கிறார்களோ இல்லையோ, நாங்கள் அதைச் செய்யத் தயாராக இருக்கிறோம். ஆகவே, எங்களை நீங்கள் தவறாக எடுத்துக்கொண்டு, 'இடித்துரைக்க வந்திருக்கிறார்கள்; இவர்களை அனுமதிக்கக் கூடாது; இவர்கள் எதிரிகள்' என்ற நோக்கோடு எங்களைப் பார்க்காமல், எடுத்து வைத்திருக்கிற கருத்துக்களை தயவுசெய்து நீங்கள் செவிமடுக்க வேண்டும் என்று நான் பணிவுடன் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். *(குறுக்கீடுகள்)*

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம் (குறுக்கீடுகள்) திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எதற்கெடுத்தாலும் அவையிலே கலாட்டா என்ற அணுகுமுறையைத் தயவுசெய்து மேற்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நாங்கள் ஆலோசனை கூறவேண்டிய நிலையில் முதலமைச்சர் அவர்கள் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) தெளிந்த சிந்தனை உள்ளவர்கள். தொலைநோக்கு ஞானம் உள்ளவர்கள். ஆழ்ந்த அறிவு மிக்கவர்கள். ஆகவே, அந்த நிலை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இல்லை; எனவே, எங்களுக்கும் இல்லை. *(குறுக்கீடுகள்)*

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இப்போது பேசாமல்தான் உட்கார்ந்திருந்தார்கள். *(குறுக்கீடுகள்)* அவர்களுக்கு ஒரு மாதிரி, ஒரு மாதிரி,



கெட்ட எண்ணம் உருவாக்குகிற மாதிரி நிதியமைச்சர் சொல்கிறாரே அது என்ன?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சத்தம் போட்டதைத்தான் சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்) சத்தம் போட்டதைத்தான் சொல்கிறார்கள். *(குறுக்கீடுகள்).*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர்கள் பேச எழுந்தாலே, கூக்குரலிடுவது "ஓ" என்று கத்துவது என்ற அந்த முறை நல்ல முறையல்ல என்பதைத்தான் கூறினேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், நீங்கள் பேசுங்கள்.

முற்பகல் *11-20*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், ஓர் அருமையான கருத்தை இங்கே சொன்னார்கள். எல்லாமே முதல்வர்தான்; நாங்கள் அவருக்கு எந்த ஆலோசனையும் சொல்லத் தேவையில்லை என்று சொன்னார்கள். வரவேற்கிறேன். அப்படியென்றால், இவ்வளவு பெரிய அமைச்சரவை இந்த நாட்டிற்குத் தேவையா? இவ்வளவு நிதிச் சுமை தேவையா என்று நான் இங்கே கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் சில நேரங்களிலே ஆலோசனை சொல்லுவதே தவறு என்று எடுத்துக்கொள்ளாதீர்கள். யாருக்கும் எந்த மனிதர்களுக்கும் சில நேரங்களிலே சில கருத்துக்கள் சரி என்றுபடும், பிறகு அது practical-ஆகப் பார்க்கிறபோது —

**• மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் முதலமைச்சருக்கு ஆலோசனை சொல்லத் தேவையில்லை என்று சொன்னது அன்பினால், என்மீது உள்ள மரியாதையால், அவர் சொன்ன வார்த்தைகள். அது அவருடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது. அதையே திரு. ஞானசேகரன் அவர்கள் literal-ஆக எடுத்துக்கொண்டு, யாருமே எனக்கு ஆலோசனை சொல்வது இல்லை என்று எடுத்துக்கொள்ளத் தேவையில்லை. இங்கே அமைச்சர்கள் அவர்களுக்குரிய கடமைகளை செவ்வனே செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். எந்த முக்கியமான முடிவானாலும், மூத்த அமைச்சர்களைக் கலந்தாலோசித்த பின்னர்தான் எடுக்கிறேன்; அவர்களும் தேவையான ஆலோசனைகளை வழங்கிக்கொண்டுதான் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள்கூட வள்ளுவன் சொன்னதுபோல **சில ஆலோசனைகளைச் சொல்லுகிறோமேயொழிய, (குறுக்கீடுகள்)

'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானுங் கெடும்'

என்கிற காரணத்தினாலேதான்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வார்த்தைகளைப் பயன்படுத்துவதில் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல யோசனையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் சொல்லிக்கொண்டிருக்கிறார். இந்த யோசனையைக் காங்கிரஸ் கட்சிக்குச் சொல்லிக்கொண்டே இருப்பாரேயானால் அந்தக் கட்சியாவது கொஞ்சம் வளர்ந்திருக்கும். ஆகவே, அந்த யோசனையை அந்தக் கட்சிக்குச் சொல்லட்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் நா காக்க வேண்டும். அதைத்தான் நாங்கள் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. பேசுங்கள். (குறுக்கீடு) சரி.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அவையில் நடக்கக்கூடிய விவாதங்கள் சுமுகமாக இருக்க வேண்டும். இங்கு இருக்கக்கூடிய கட்சிகள், ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்பதெல்லாம் ஏதோ வெட்டி மடிவதற்காகவும், திட்டித் தீர்ப்பதற்காகவும் மட்டுமே நாம் இருக்கிறோம் என்பது அல்ல. மக்களுக்குப் பணியாற்றுவதற்காக நாம் வந்திருக்கிறோம். சகோதர உணர்வோடு, நாம் ஒரு நல்ல நாகரிகத்தைக் கடைபிடித்து, இந்த அவையிலே சுமுகமான முறையிலே நம்முடைய விவாதங்களைத் தொடுத்தால் அது நாட்டுக்கு நலம் பயப்பதாக இருக்கும் என்கிற கருத்தை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



"ஏழ்மையில் மக்களைத் தள்ளுவதோ?—இதை
இன்பமெனச் சிலர் கொள்ளுவதோ?
கூழுக்குப் பற்பலர் வாடவும் சிற்சிலர்
கொள்ளை யடிப்பதும் நீதியோ—புவி
வாழ்வதுதான் எந்தத் தேதியோ?
காண்பதெலாம் தொழி லாளிசெய் தான்அவன்
காணத் தகுந்தது வறுமையாம்—அவன்
பூணத் தகுந்ததும் பொறுமையாம்!"

என்று பாடுவான் பாரதிதாசன். ஏழ்மையிலே இன்று உழன்று கொண்டிருக்கிற வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடிய 40 சதவீத மக்களை நாம் எண்ண வேண்டும். 40 இலட்சம் இளைஞர்கள் இன்று வேலைவாய்ப்பிற்காக, வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்துவிட்டு, தங்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் கிட்டாதா என்று ஏங்கிக் கொண்டு இருக்கிற அந்த உள்ளங்களை நாம் பார்க்க வேண்டும். அதே நேரத்தில் ...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 40 சதவிகிதம் மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கிறார்கள் என்று மாண்புமிகு ஞானசேகரன் அவர்கள் எந்தப் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் சொல்கிறார் என்று தெரியவில்லை. அவருடைய தோழமைக் கட்சியான தி.மு.க. ஆட்சியில் இருந்தபோதே 1999, 2000 ஆம் ஆண்டு வாக்கிலேயே தமிழ்நாட்டில் 21 சதவிகிதம் பேர்தான் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கிறார்கள் என்று அவர்களே அப்போது அறிவித்திருக்கிறார்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அளித்திருக்கிற நிதி நிலை அறிக்கையிலேயே 1991 ஆம் ஆண்டு கணக்கெடுப்புப்படி என்று நீங்கள் அதைச் சொல்லியிருக்கிறீர்கள். அதை வைத்துத்தான் கூறுகிறேன். பிறகு வேண்டுமானால் எவ்வளவு என்று நீங்கள் சரியாகச் சொல்லுங்கள். ஏனென்றால், அந்த அதிகாரம் உங்களிடம் இருக்கிறது. நாங்கள் ஏதோ அதை ஊர் ஊராகக் கணக்கெடுப்பதில்லை. நீங்கள் சொல்லுகிற புள்ளிவிவரத்தை வைத்துத்தான் நாங்கள் கூறுகிறோம். ஆகவே இங்கே....

முற்பகல் 11-25]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, இல்லை. அது 1991-க்கு என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** அதற்குப் பிறகு இன்னும் வளரவில்லை என்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதை மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் கவனிக்கவில்லை என்று கருதுகிறேன். 1991-ல் நாங்கள் தெரிவித்த புள்ளிவிவரங்களை நீங்கள் இங்கே தெரிவிக்கிறீர்கள். நான் சொன்னது உங்கள் தோழமைக் கட்சியான தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது, 1999-2000 ஆம் ஆண்டுவாக்கில் தமிழ்நாட்டில் 21 சதவீதம் பேர்தான் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்கிறார்கள் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நிறைய வறுமை, மழை இல்லை, இப்படிப்பட்ட சூழல் வந்த பின்னால், காவிரியில் நீர் இல்லாமல் இப்போது 40 சதவீதம் பேர்கள் வறுமைக்குக் கீழே போய்விட்டிருக்கிறார்கள் என்று நான் கூறுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நான் கூறுகிறேன் என்றால் புள்ளிவிவரமா? அது என்னவென்று கேட்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** எங்களுக்குக் கிடைத்திருக்கிற தகவல். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் நிதி நெருக்கடி என்றெல்லாம் சொல்லி எவ்வளவோ பல சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதாக இந்த அவையிலே அறிவித்து பல திட்டங்களைக் கொண்டு வந்தார்கள். இங்கே மத்திய அரசு புதிதாக, இப்போது காங்கிரஸ் பேரியக்கம் மற்றும் கூட்டணிக் கட்சிகளோடு ஆட்சிக்கு வந்தவுடன், ஆயிரம் கோடி ரூபாயைக் கடல் நீரை நன்னீராக்குகிற திட்டத்திற்காக அறிவித்தார்கள். அப்படி அறிவித்ததற்குத் திட்டத்தைக் கொடுங்கள் என்று கடந்த இரண்டு மாதங்களாக மத்திய அரசினுடைய அதிகாரிகள் நம்முடைய தமிழக அரசு அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டு, இன்னும் அதற்கான திட்டத்தை அவர்கள் கொண்டுபோய்க் கொடுக்கவில்லை. நீங்கள் கொடுத்தால் எவ்வளவு பணமும் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று நிதியமைச்சர்...



**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து தவறான தகவல்கள் அடிக்கடி இந்த அவையில் தெரிவிக்கப்படுவதால், 3-3-2005 அன்று இந்த விஷயத்தைப் பற்றி விரிவான ஓர் அறிக்கையை வெளியிட்டேன். அந்த அறிக்கையை மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. துரைமுருகன் அவர்களும், திரு. ஞானசேகரன் அவர்களும் படிக்கவில்லை என்று கருதுகிறேன். முழு அறிக்கையை நான் இங்கே வாசித்துக்காட்ட விரும்பவில்லை. முக்கியமான ஒரு பகுதியை மட்டும் வாசித்துக் காண்பிக்கிறேன்:

"திரு. சிதம்பரம், சென்னையில் அமையவுள்ள கடல் நீரைக் குடிநீராக மாற்றும் நிலையத்திற்கென குறிப்பாக, 1000 கோடி ரூபாய் ஒதுக்கி அறிவித்தார் என்ற தவறான கருத்து, செய்தியாளர்கள் உட்பட பலருக்கும் உருவாகியிருக்கிறது. உண்மையில், இது சரியல்ல. 2004-2005 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், திரு. சிதம்பரம் உண்மையில் செய்த அறிவிப்பு இதுதான். சென்னை மாநகரமும், இதர மாநகரங்களும் கடும் குடிதண்ணீர்ப் பற்றாக்குறையில் சிக்கித் தவித்து வருகின்றன. மாநில அரசு வரம்பில், சென்னைக்கருகே முதலாவது பெரிய அளவிலான கடல் நீரைக் குடிநீராக மாற்றும் நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற மேலும் பல நிலையங்கள் கிழக்குக் கடற்கரை நெடுகவும் அமைக்கப்படும். நாளொன்றுக்கு 300 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட, கடல் நீரைக் குடிநீராக மாற்றும் நிலையம் ஒன்றிற்கு 1000 கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது."

'1000 கோடி ரூபாய் செலவிடப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது' என்றுதான் திரு. சிதம்பரம் கூறியிருக்கிறாரே தவிர, 1000 கோடி ரூபாய் ஒதுக்குவதாக அறிவிக்கவில்லை. மேலும், திரு. சிதம்பரம் கூறியது:

"இது தவிர, அனுப்புகைக் குழாய்கள் மற்றும் சுய தேவைக்கான மின் உற்பத்தி நிலையம் அமைத்தல் போன்ற இதர செலவுகளும் உள்ளன. இந்தத் திட்டம் பொதுத் துறை, தனியார் துறை கூட்டு முயற்சியின்கீழ் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது." (குறுக்கீடு)

இங்கே கவனியுங்கள், திரு. ஞானசேகரன் அவர்கள். உங்களுக்காகத்தான் அதை வாசித்துக்கொண்டிருக்கிறேன்:

"தற்போது இந்த நிலையம் அமைப்பதற்காக, மத்திய அரசு 1000 கோடி ரூபாய் அளிக்க முன்வந்ததைப்போல ஒரு பாசாங்கு செய்யப்படுகிறது. மத்திய வரவு-செலவுத் திட்ட அறிக்கையில், 2004 செப்டம்பரில் தாக்கல் செய்யப்பட்ட முதலாவது துணை மதிப்பீடுகளின்படி, வெறும் 5 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்ததாகத் தெரிகிறது. மத்திய அரசு,

1000 கோடி ரூபாய் அளிக்க முன்வந்ததைப் போலவும், மாநில அரசு அதைப் பெற்றுக்கொள்ளவில்லை என்பது போலவும், நீட்டி முழக்கும் இதுபோன்ற நாடகத்தை உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வாறு கூறுவது உண்மைக்கு முற்றிலும் மாறானதாகும்" என்று (மேசையைத் தட்டும் ஒலி) 3 ஆம் தேதியே அறிக்கை வெளியிட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-30*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு மத்திய அரசுக்கு டிசம்பர் மாதம் கடிதம் எழுதியிருக்கிறது. டிசம்பர் 15 ஆம் தேதி அது மத்திய அரசிலே கிடைத்திருக்கிறது. அந்தக் கடிதத்தின்படி, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டிருக்கின்றன, இந்தத் திட்டம் design, build, own, operate and transfer என்கிற அடிப்படையில் நாங்கள் கேட்டிருக்கிறோம்.

ஒப்பந்தப்புள்ளிகள் வந்ததும், ஒப்பந்தப்புள்ளிகளில் கோரப்பட்ட புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதும், அதற்கு எவ்வளவு செலவாகும் என்பதை நாங்கள் விரைவாகவும் விரிவாகவும், மத்திய அரசுக்குத் தெரிவிக்கிறோம், அந்தக் காலகட்டத்தில் நிதி ஒதுக்க வேண்டுமென்று நீங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். பிறகு மீண்டும் அதை டிசம்பர் என்பது ஜனவரிக்குத் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறீர்கள். அதற்குப் பிறகு மீண்டும் அது பிப்ரவரிக்குப் போய் விட்டது என்று தெரிவித்திருக்கிறீர்கள். பிப்ரவரி மாதம் 24 ஆம் தேதி வரை காத்திருந்துவிட்டு இப்போது அவசரச் செலவுக்கு என்று 5 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். நீங்கள் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி ஏற்றுக்கொள்ளப்பட்டதற்குப் பின்னால் எவ்வளவு செலவாகும்; அதனுடைய வடிவம் என்ன என்பதைத் தெரிவித்தால், முழு நிதி ஒதுக்கப்படுமென்று உறுதியளிக்கப்பட்டிருக்கிறது. அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமே தவிர, மீண்டும், மீண்டும் மத்திய அரசோடு மோதல் என்கின்ற போக்கைக் கடைப்பிடிப்பது, அரசுக்கும் நல்லதல்ல; மக்களுக்கும் நல்லதல்ல.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும், மீண்டும் மத்திய அரசுடன் மோதுகின்ற போக்கை நாங்கள் கடைப்பிடிக்கவில்லை. மீண்டும் மீண்டும் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் இந்தத் திட்டம் குறித்து, தவறான தகவல்களை இந்த அவையில் தெரிவித்துக்கொண்டேயிருப்பதால், நாங்கள் பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்படுகிறோம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன் (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** எங்களுக்கு என்ன தெரியும்? நீங்கள் மாண்புமிகு முதலமைச்சர் இருக்கிற materials-ஐ சொல்கிறார்கள். ஆனால், ஒரு மாண்புமிகு மத்திய அமைச்சர் வந்து சொல்கிறார்; இவ்வளவும் கேட்டு, 8 ஆம் தேதி letter எழுதிப் போட்டு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், அதற்கு ஏற்கெனவே அவர்கள் வெளியிட்ட அறிக்கையை வாசித்துக் காட்டியிருக்கிறார்கள். திரு. ஞானசேகரன், பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதும் ஒன்றும் கெட்டுவிடவில்லை. நாம் மோதுகின்ற போக்கை விடவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்வதைவிட, இங்கே நாம் உடனடியாக நீங்கள் அமைச்சரவையிலிருந்து யாராவது வாருங்கள். நாங்களும் வருகிறோம். சென்று, நாம் இவ்வளவு பணம் வேண்டுமென்று போய்க் கேட்டால், கொடுக்கத் தயாராக இருக்கிறது, மத்திய அரசு. சிதம்பரம் நேற்றுகூட உறுதியளித்திருக்கிறார்; போய் வாங்கி வரலாம். ஆகவே, திட்டத்திற்கான tender-ஐ நீங்கள் எப்போது finalise பண்ணுகிறீர்கள் என்று சொல்லுங்கள்; திட்ட மதிப்பீட்டைக் கொடுங்கள். சென்று வாங்கி வரலாமென்பதுதான் எங்களுடைய கருத்து.

அடுத்து சுனாமியினுடைய தாக்குதலுக்கு, மத்திய அரசு ஏற்கெனவே ரூபாய் 250 கோடியைக் கொடுத்தது. பிறகு, சென்ற 5 ஆம் தேதி, 367 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறது என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். முதலில், இந்த விவாதம் சூடுபிடிப்பதற்கு முந்தி 4 ஆம் தேதி பார்க்கிறபோது பார்த்தால் சிதம்பரத்திற்கு நாணயம் இல்லை வக்கில்லை என்றெல்லாம் சொல்லி, பிறகு மறுநாள் நிதி வந்தவுடன், இது முதலமைச்சருக்குக் கிடைத்திருக்கிற வெற்றி என்று 110 அறிக்கையிலேயே நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பணம் கொடுக்காதபோது, சிதம்பரம் வக்கு இல்லாதவர்; பணம் வந்த பின்னால், அது முதலமைச்சருடைய வெற்றி என்று சொல்வது–நிச்சயமாக தமிழக அரசுக்கு வக்கு இல்லாத காரணத்தாலேதான் நாம் அங்கே போய்க் கேட்கிறோம். -- அதை விட்டுவிட்டு நாம்....

***மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர் அவர்கள், தமிழக அரசுக்கு வக்கில்லை என்கிற வார்த்தையைப் பயன்படுத்துகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் அம்மா

[திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்] [2005 மார்ச் 8

அவர்கள், எந்தச் சூழ்நிலையிலும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தன்னுடைய அரசு செய்யவேண்டிய பணிகளைத் தானே முன்னின்று செய்வதாக, இதே அவையில் அறிவித்திருக்கிறார் என்பதைச் சொல்லி அமர்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** செய்தாலுங்கூட நான் சொல்ல வருவதெல்லாம், இதில் வாதப் பிரதிவாதங்கள்....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ மாநில அரசுக்கு வக்கு இல்லாத நிலையில் மைய அரசை அணுகி சுனாமிக்கு உதவ வேண்டுமென்று கேட்பதுபோல் மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறார்; அது தவறு. சுனாமியைப் பொறுத்தவரைக்கும் அது மைய அரசினுடைய பொறுப்பு. கடற்கரையில் சுனாமி தாக்கல் வருவதை முன்கூட்டியே அறியக்கூடிய கருவிகளை மைய அரசு ஏற்கெனவே நிறுவியிருந்தால், உயிர்ச்சேதங்களையேனும் தடுத்திருக்கலாம். அந்தக் கடமையிலிருந்தும் மைய அரசு தவறிவிட்டது. அந்தப் பாதிப்புக்கு, முறைப்படி, விதிப்படி, நடைமுறைப்படி, முழு நிவாரணத்தையும் தரவேண்டிய பொறுப்பு, கடப்பாடு, மைய அரசுக்குத்தான் உள்ளது.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள், 4800 கோடி ரூபாய்க்குச் சேதங்கள் மற்றும் மறுவாழ்வுக்கு ஒரு proposal-ஐ அனுப்பி வைத்திருக்கிறார்கள். அதேபோன்று 5000 கோடி ரூபாய்க்குத் தடுப்புச் சுவர் போன்ற நீண்ட காலப் பயன்கள் எல்லாம் மீனவர்களுக்குக் கிடைக்கப்பட வேண்டுமென்கிற வகையிலே, proposal மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இதுவரையில், 1826 கோடி ரூபாய் மத்திய அரசு கொடுப்பதாக ஒப்புக்கொண்டு, நேற்றைக்கு 2 தவணைகளில் 250 கோடி ரூபாயும், 367 கோடி ரூபாயும் கொடுத்திருக்கிறார்கள். எனவே, நீங்கள் அங்கே சென்று மீதிப் பணத்தை வாங்கிக் கொடுத்தால், நிச்சயமாக உங்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், அதை வாங்கிக் கொடுப்பதற்கு வக்கில்லை, திராணியில்லை, தெம்பில்லை, தைரியமில்லை என்றுதான் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு திட்டங்களைச் சமர்ப்பிக்கின்ற நேரத்தில், முழுமையான தொகை ஒதுக்கப்படுமென்று பிரதமரும், உறுதியளித்திருக்கிறார்; நிதியமைச்சரும் உறுதியளித்திருக்கிறார். எனவே,



2005 மார்ச் 8] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

திட்டங்களை சமர்ப்பியுங்கள்; நிச்சயமாகப் பணம் வரும். நீங்கள் பேசிக் கொண்டேயிருக்கிறீர்களே தவிர, (குறுக்கீடு) இல்லை தெளிவாக, முன்பே சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் எவ்வளவு மானியமாகக் கொடுக்கப்படும், எவ்வளவு கடனாகக் கொடுக்கப்படும், எந்த வகையிலே கொடுக்கப்படும்; தமிழக அரசுக்கு எவ்வளவு ஒதுக்கப்படும் என்று தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் அதிகமாக இந்த ஆண்டு ஒதுக்கியிருக்கிறார்கள். எனவே, திட்டங்களை....

முற்பகல் 11-35

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமி நிவாரணப் பணிகளுக்காக என்னென்ன திட்டங்களைச் சமர்ப்பிக்க வேண்டுமோ, அத்தனைத் திட்டங்களையும் தீட்டி, மத்திய அரசுக்கு ஏற்கெனவே சமர்ப்பித்துவிட்டோம். மத்திய அரசுதான் இன்னும் முழுமையாக நிதியை அறிவிக்கவில்லை. அறிவிப்பில்கூட, பகுதிப் பகுதியாகத்தான் அறிவித்திருக்கிறார்கள். Relief and rehabilitation என்று அறிவித்திருக்கிறார்கள். படகுகளை வாங்குவதற்கும், பழுதுபார்ப்பதற்கும் என்று அறிவித்திருக்கிறார்கள். Housing component என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால், சுனாமியால் உப்பு நீரால், கடல் நீரால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களுக்கு ஈடு கொடுக்க வேண்டும்; நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும், அதற்கு இவ்வள ; நிதி வேண்டும் என்று கேட்டதற்கு இன்னும் ஒதுக்கீடு செய்யவில்லை. முதலில் அனுப்பிய அரசாணையில்கூட, இதற்கு நிதி பின்னர் அறிவிக்கப்படும் என்றுதான் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, பல இனங்களில் நாங்கள் திட்டங்களைக் கொடுத்தாகிவிட்டது. ஆனால், மத்திய அரசுதான் இன்னும் இதற்கு எவ்வளவு ஒதுக்கீடு என்று அறிவிக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்டவர்களுடைய பட்டியலை நீங்கள் கொடுத்தால், உடனடியாகக் கடனும், மானியமும் வரும் என்று மீண்டும், மீண்டும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் கொடுத்தது...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படியாவது மாநில அரசைக் குறை கூறவேண்டும் என்று மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் பகீரதப் பிரயத்தனம் செய்துகொண்டிருக்கிறார். ஆனால், அது நடக்காது. ஏனென்றால், எங்கள் கடமையை நாங்கள் செவ்வனே செய்துவிட்டோம். என்னென்ன விவரங்களை மத்திய அரசுக்குச் சமர்ப்பிக்க வேண்டுமோ, (மேசையைத்

தட்டும் ஒலி) அத்தனையையும் சமர்ப்பித்து முடித்துவிட்டோம். தாமதம் என்பது, மத்திய அரசு தரப்பில்தான் இருக்கிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்திற்குக்கூட tender-ஐ finalise செய்து, நீங்கள் அந்த technicians, அவர்களுடைய...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்தும் ஏற்கெனவே நான் வெளியிட்ட அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். திரு. ஞானசேகரன் அவர்கள் அதைப் படிக்கவில்லை என்றால், ஒரு நகலை அவருக்கு அனுப்பி வைக்கிறேன். இப்படி ஒரு global tender விட்டபிறகு, bids வந்தபிறகு, அதை evaluate செய்வதற்கு, மதிப்பீடு செய்வதற்கு குறைந்தபட்சம் 60 நாட்கள் தேவை. அந்த 60 நாட்கள் இன்னும் முடியவில்லை. இரண்டு வாரங்கள்கூட ஆகவில்லை. ஆகவே, அந்த, வந்த bids, evaluate செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அது முடிந்த பிறகுதான், மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முடியும்.

**திரு. சி. ஞானசேகரன்:** தமிழக அரசேகூட, 'ஏப்ரல் 28 ஆம் தேதிதான் எங்களுடைய அந்த tender-ஐப் பற்றி நாங்கள் அறிக்கை கொடுப்போம்' என்று நீங்கள் பதில் கொடுத்ததாகக்கூட சிதம்பரம் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, நான் இப்போது தெரிவித்துக்கொள்வது எல்லாம், நம்முடைய ஆளும் கட்சி, அமைச்சரவையிலிருந்து யாராவது ஒருவர்--சர்வகட்சி எம்.எல்.ஏ.-க்கள் குழுவைக்கூட போடுங்கள்--சென்று நாம்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 ஆம் தேதி இதுகுறித்து நான் வெளியிட்ட அறிக்கையிலிருந்து, இதற்குத் தொடர்புள்ள ஒரு பகுதியை வாசிக்கிறேன்:

"தற்போது திரு. சிதம்பரம், 2005-2006 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் பற்றியும், சென்னையில் அமைக்கப்படும் கடல் நீரைக் குடிநீராக மாற்றும் நிலையத் திட்டத்திற்குத் தன்னால் ஏன் நிதி எதுவும் ஒதுக்கப்படவில்லை என்பது பற்றியும் பேசும்போது, 16-2-2005 அன்று திறக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி குறித்து மாநில அரசு, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் முடிவிற்காக, தான் காத்திருந்ததாகவும், 25-2-2005 வரை தகவல் எதுவும் வராததால், தன்னால் நிதி ஒதுக்கம் எதுவும் செய்ய முடியவில்லை எனவும், தற்போது



விந்தையான ஒரு காரணத்தைத் தெரிவித்திருக்கிறார். இது ஒரு திகைப்பூட்டுகின்ற விளக்கம் என்பதோடு, பிரச்சினையிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கான ஒரு அப்பட்டமான முயற்சியும் ஆகும். ஒரு பெரிய ஒப்பந்தம் தொடர்பான ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்பட்ட பின், அதுபற்றிய மதிப்பீடுகளை 10 நாட்களுக்குள் முடித்துவிடலாம் என்பது திரு. சிதம்பரம் அவர்களின் வாதம் ஆகும். ஒரு ஆலோசகர், தற்போது ஒப்பந்தப்புள்ளி தொடர்பான தொழில்நுட்ப மதிப்பீட்டுப் பணியை மேற்கொண்டு வருகிறார். இதுபோன்ற ஒரு பெரிய திட்டத்தில் விரிவான தொழில்நுட்ப மதிப்பீடு மேற்கொள்ள எவ்வளவு காலம் பிடிக்கும் என்பது நிச்சயமாக திரு. சிதம்பரம் அவர்களுக்கும் தெரியும். இந்தத் தொழில்நுட்ப மதிப்பீட்டைச் செய்து முடிக்க குறைந்தபட்சம் 60 நாட்கள் தேவைப்படும். நிலைமை இப்படி இருக்க, மத்திய நிதிநிலை அறிக்கையில், நிதி ஒதுக்கப்படாததற்கு திரு. சிதம்பரம் இதை ஒரு காரணமாகக் கூறுவது அற்பத்தனமானது ஆகும்."

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்தக் கட்டத்தில் எவ்வளவு நிதி தேவை என்ற விவரத்தைத் தமிழக அரசு சொல்லுமேயானால், நிச்சயமாக நிதி ஒதுக்கப்படும் என்று உறுதி அளித்திருக்கிறார்கள். இதுபோன்ற சொற்களைப் பயன்படுத்துவது முறையாக இருக்காது என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், உரையை முடியுங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஏற்கெனவே வெளியிடப்பட்ட அறிக்கை. அதிலிருந்து ஒரு பகுதியை இப்போது வாசித்தேன்.

*முற்பகல் 11-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் -- ஒழுங்குப் பிரச்சினைக்கு வருகிறேன். தமிழகத்திலே கூலிப் படைகளுடைய ஆதிக்கம் கொஞ்சம் அதிகமாகி விட்டதாகவே நான் கருதுகிறேன். Walking போன இரண்டு முன்னாள் அமைச்சர்கள் திரு. தா. கிருட்டிணன் அவர்களும், திரு. ஆலடி அருணா அவர்களும் நம்முடைய தமிழகத்திலே கொல்லப்பட்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

[திரு. சி. ஞானசேகரன்] [2005 மார்ச் 8

சட்டமன்றத்திலே அமைச்சராக இருந்து, ஆளுங்கட்சியினுடைய எம்எல்ஏ.-வாக இருந்த திரு. சுதர்சனம் அவர்களைக்கூட, கொள்ளையடித்த கும்பல் அவரது வீட்டிலேயே கொலை செய்திருக்கிறது.

அதேபோல, 28-03-2005 அன்று, நம்முடைய சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. சந்திரமோகன்கூட, நக்சலைட்டுகள் தன்னைக் கொல்ல வருவதாக, ஒரு காவல் நிலையத்திலே அவர் புகார் கொடுத்து, அவரை இரண்டு இலட்சம் ரூபாய் கேட்டுக் கொடுத்திருப்பதாகவும் பத்திரிகைகளிலே செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அதைவிட, நேற்றைய 'தினகரன்' பத்திரிகையைப் பார்த்தால், headlines-ஐப் பார்த்தால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு ஸ்டாலின் அவர்களைக் கொல்லுவதற்கே பேனா என்ற அந்த bomb-ஐ வைத்துக் கொண்டு, சில பேர் துப்பாக்கியை வைத்துக்கொண்டு, கொலை செய்வதற்கு முயற்சித்து, கூலிப் படை ஏவி விடப்பட்டிருக்கிறது என்று மத்தியப் புலனாய்வுத் துறை, ஓர் அறிக்கையை மத்திய அரசுக்கு அனுப்பியதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. இப்படி ஆங்காங்கே.... (குறுக்கீடுகள்) இதில் சிரிப்பதற்கு ஒன்றும் இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எல்லோருக்கும் பாதுகாப்புக் கொடுக்கவேண்டும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஸ்டாலினைக் கொல்லுவதற்கு ஒரு முயற்சி நடந்ததாக இப்போதுதான் கேள்விப்படுகிறோம். அவரை யார், ஏன் கொலை செய்யவேண்டும்? அவர்தான் பாவம், யாரையும், எதுவும் சொல்வதே கிடையாது. அவரை ஏன், யாரும் எதுவும் செய்யப்போகிறார்கள்?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் செய்தி கடந்த இரண்டு நாட்களாகப் பத்திரிகைகளிலே வந்து கொண்டிருக்கிறது. இது ஒரு வேடிக்கையான செய்தியாக இருக்கும் என்று நான் கருதவில்லை. நிச்சயமாக, சட்டப் பேரவை உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் பாதுகாப்புக் கொடுக்கவேண்டிய கடமையும், பொறுப்பும் தமிழக அரசுக்கு உண்டு. ஏற்கெனவே, முன்னாள் அமைச்சர்கள் மூன்று பேர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். எனவே, இதைக் கேலி பேசுகின்ற பொருளாகக் கருதாமல், அது என்ன என்று முழுவதுமாக விசாரித்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை உங்களிடம் காண்பித்திருக்கிறேன்.



2005 மார்ச் 8]

(உறுப்பினர், 'தினகரன்' பத்திரிகையை, மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் காண்பித்தார்.)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு பதிலைத் தந்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, 'தினகரன்' பத்திரிகையிலேயிருந்து வருவது வேண்டாம்.

**திரு. சி. ஞானசேகரன்:** அதுவும் ஒரு பத்திரிகைதானே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சரி. என்ன விஷயம் சொல்லுங்கள்?

**திரு. சி. ஞானசேகரன்:** நான் மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருவதெல்லாம்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், ஒரு மஞ்சள் பத்திரிகையை இங்கே காண்பிப்பது முறையா? இது என்ன Government gazette-ஆ? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லையென்று சொல்லவில்லை, முதலிலே இங்கே நீங்கள் கேட்டு அனுமதி வாங்கியிருக்கலாம். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவருடைய அனுமதி பெற்றுப் படிக்கவேண்டும் என்பதிலே, எனக்கு மாறுபட்ட கருத்து அல்ல. ஆனால், ஒரு பத்திரிகையை மாண்புமிகு முதலமைச்சர், அவருடைய நிலைக்கு வந்து, அது ஒரு மஞ்சள் பத்திரிகை என்று சொல்வது அவைக்குறிப்பிலே இருக்கலாமா என்றுதான் நான் கேட்கிறேன். 'தினகரன்' ஒன்றும் மஞ்சள் பத்திரிகை அல்ல. கோடானு கோடி தமிழர்கள் மத்தியிலே படிக்கப்படுகிற பத்திரிகை; ஆனால், உங்கள் ஆட்சியினுடைய முகமூடியைக் கிழிக்கிற பத்திரிகை. ஆகையினாலே, அதை மஞ்சள் பத்திரிகை என்கிறீர்கள், அவ்வளவுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, திரு. ஞானசேகரன், சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியப் புலனாய்வுப் பிரிவான I.B., Intelligence Bureau அப்படி ஒரு report-ஐ அனுப்பியிருக்கிறது. இங்கே இருக்கக்கூடிய தமிழகத்தினுடைய உளவுத் துறையும், அதை சரி...

[2005 மார்ச் 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், 15 மணித்துளிகள் நீங்கள் கேட்டீர்கள், கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் ஐந்து மணித்துளிகளில் முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, நான் அதிகமாகக் கேட்டேன். எங்களுடைய தரப்பிலேயிருந்து இன்னும் யாரும் பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுக்கீடுகளையெல்லாம் கழித்துவிட்டுச் சொல்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** எங்களுடைய காங்கிரஸ் கட்சி, இதுவரை தன்னுடைய கருத்துகளை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எப்போதும் குறுக்கீடுகளைக் கழித்துவிட்டுத்தான் சொல்கிறேன். (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், குறுக்கீடுகளையெல்லாம் கழித்து, நீங்கள் பேசியதைமட்டும்தான் கணக்கிலே வைத்துச் சொல்கிறேன். இன்னும் ஓர் ஐந்து மணித் துளிகளில் முடியுங்கள். (குறுக்கீடு)

**திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தினகரன்' பத்திரிகைச் செய்தியைப் பற்றி உறுப்பினர் குறிப்பிட்டார்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், உட்காருங்கள். என்ன, திரு. ராஜாங்கம், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. ராஜாங்கம், என்ன? (குறுக்கீடுகள்)

**டாக்டர் க. பொன்முடி:** அவரை மட்டும் ஏன் பேச விடுகிறீர்கள்? அவரை எப்படிப் பேச விடுகிறீர்கள்? நாங்கள் பேசும்போது மட்டும் பேசக்கூடாது என்று சொல்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, திரு. ராஜாங்கம், என்ன சொல்லுங்கள்? (குறுக்கீடுகள்) யாரை அனுமதிப்பது என்பது பேரவைத் தலைவருடைய அதிகாரம். (குறுக்கீடுகள்) யாரை அனுமதிப்பது, எப்படி அனுமதிப்பது என்பது பேரவைத் தலைவருடைய அதிகாரம். பேரவைத் தலைவரை நீங்கள் ஒன்றும் இயக்க முடியாது. (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவரை இயக்குவதற்கு நீர் ஆள் அல்ல. பேரவைத் தலைவர்



2005 மார்ச் 8] [பேரவைத் தலைவர்]

யாரை அனுமதிக்கிறாரோ அவர் பேச முடியும். பேரவைத் தலைவர், நான் அனுமதிக்கிறேன், திரு. ராஜாங்கம், பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. ராஜாங்கம், பேசுங்கள். அவர் point of order கேட்கிறார். நீங்கள் பேசுங்கள்.

**திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதி.மு.க.-விலேயிருந்து, அந்தப் பத்திரிகை தி.மு.க.-வைப் பற்றி எவ்வளவு விமர்சனம் செய்திருந்தது? அதுவும் 'தினகரன்' பத்திரிகைதானே? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜாங்கம் பேசுங்கள், திரு. ஞானசேகரன், உட்காருங்கள், உட்காருங்கள். 5 மணித் துளிகள் அதிகமாகத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.

முற்பகல் 11-45

**திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ம.தி.மு.க.-வை அந்தப் பத்திரிகை சார்ந்து இருந்தபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி எவ்வளவு விமர்சனப்படுத்தியிருந்தது? அது 'தினகரன்' பத்திரிகைதான். அந்தத் 'தினகரன்' பத்திரிகையை, மு.க. அழகிரி மதுரையில் கண்டித்து, தெருத் தெருவாக wall-poster அடித்து ஒட்டியவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்கள். இன்று அந்த 'தினகரன்' பத்திரிகைக்காரர்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. ஞானசேரகன், பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், எங்களுடைய வேலூரிலே, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே, நாகா ஜுவல்லரி என்கிற நகைக் கடையிலே, பட்டப் பகலிலே, இருவரைக் கொலை செய்துவிட்டுப்போன அந்தக் கொலைப் படையை, இதுவரை தமிழகப் போலீஸ் பிடிக்க முடியாதது ஏன் என்று எனக்கு இன்னும் புரியவில்லை. அதுகுறித்து, என்ன என்பதையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, திருக்கோயிலூரில் போன 11-வது மாதம், முன்னாள் நகர மன்ற உறுப்பினர் திரு. அப்துல் கரீம் அவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார். கொலை செய்த, அந்தக் கொலையாளிகளை இதுவரைப் பிடிக்க முடியவில்லை. இப்படி ஆங்காங்கே கொலை,

[திரு. சி. ஞானசேகரன்] [2005 மார்ச் 8

அதேபோல, சில கொள்ளைகள் என்று அதிகமாக வந்துகொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழலில், நம்முடைய போலீஸ் இன்னும் கொஞ்சம் தீவிரமாகச் செயல்பட்டுக் குற்றங்களைத் தடுக்கவேண்டும் என்கிற நல்லெண்ணத்தில்தான், இந்தக் கருத்தை நான் சொல்கிறேன்.

இப்பொழுது பார்த்தால், சங்கரமடத்தில் நடந்த கொலைக்கு நிறைய பேர் மேலே குண்டர் சட்டத்தைப் போடுகிறீர்கள். குண்டர்கள் மீது, நீங்கள் குண்டர்கள் சட்டத்தைப் போடுங்கள். இவ்வளவு தவறு செய்தவர்கள், எப்படி இவ்வளவு நாள் காவல் துறையால் கண்டுபிடிக்கப்படாமல் இருந்தார்கள்? உளவுத் துறை இதுவரை செயல்படாமல் இருந்ததா என்பதுதான் எனக்கு விந்தையாக இருக்கிறது. நம்முடைய வரிப் பணத்தையெல்லாம் வைத்துக்கொண்டு உளவுத் துறையை வைத்திருக்கிறோம். அந்த உளவுத் துறையினர், எங்கெங்கே என்ன நடக்கிறது என்பதைத் துல்லியமாகக் கண்டுபிடித்து, முதலமைச்சர் அவர்களுக்கும், Home Secretary போன்றவர்களுக்கெல்லாம் தகவல்களை அனுப்பியிருப்பார்களேயானால், ஒரேநேரத்தில் 8 பேர் மீது, 9 பேர் மீது குண்டர் சட்டம் போடவேண்டிய ஓர் அவசியம் வந்திருக்காது. Base case, உங்களுக்கு முதலிலேயே கிடைத்திருக்கும். அந்த Base case-லேயே நீங்கள், அவர்களை வேரறுத்திருக்கலாம். இப்படி உளவுத் துறையினர், சில நேரங்களிலே தங்களுடைய கடமையிலிருந்து தவறிவிட்டார்களோ என்று நான் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இனியாவது, நம்முடைய உளவுத் துறை, தீவிரமாகச் செயல்பட்டு ஆங்காங்குள்ள குற்றங்களைக் களைய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றுகூட பார்த்தீர்கள் என்றால், நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடைய தொகுதியிலேயே, அணைக்கட்டிலே, சாராயம் விற்கிற ஒரு கும்பல், அல்லேறு என்ற மலையில்--தீஞ்சமலை என்று எங்கள் பக்கம் சொல்வார்கள்; அந்த தீஞ்சமலையிலே--அல்லேறு கிராமத்திலே சாராயம் விற்கிற கும்பல், துப்பாக்கியை வைத்துக்கொண்டு, கேள்விகேட்ட ராமன் என்கிறவனை, ஒரு நல்லவனைச் சுட்டுவிட்டது. இன்னொருத்தன் பாஸ்கரன் என்கிறவன் குண்டடிப்பட்டு, இப்போது அவன் சிகிச்சை பெற்று வருகிறான். இந்தத் துப்பாக்கிக் கலாச்சாரம் நம்முடைய தமிழகத்திலே இருக்கிறது. சாராயம் காய்ச்சுகிறவனிடம் எப்படி துப்பாக்கி இருக்கிறது? எப்படி அவன் இன்னொருவனைச் சுட்டுக் கொலை செய்கிறான்? இந்த அளவுக்கு இதுகூட தெரியாமல், நம்முடைய காவல் துறை எப்படி இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த இடத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2005 மார்ச் 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஐந்து நிமிடங்களுக்குள் முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** அதேபோல, திருவண்ணாமலை மாவட்டத்தில் பார்த்தீர்கள் என்று சொன்னால், பாலசுப்பிரமணியம் தியேட்டரிலே 3-3-2005-லே, Time Bomb—Time Bomb வைத்துவிட்டு பெரிய பரபரப்பு உருவாகி இருக்கிறது. இப்போது கூத்தங்குழி, அதேபோல கூடங்குளம் ஏரியாவிலே இரண்டு வாரங்களுக்கு முன்னால், 34 country bombs-ஐ ஒரு நாளும், 72 country bombs-ஐ ஒரு நாளும் போலீஸ் seize பண்ணியிருக்கிறது. நேற்றுகூட பார்த்தீர்கள் என்றால், country bombs தயாரிக்கிற இடத்திலே ஒருவர் காயம்பட்டு, அதை டி.வி.யிலே நேற்று நான் பார்த்தேன். இப்படி எங்குப் பார்த்தாலும் வெடிகுண்டு கலாச்சாரம். இப்பொழுதுகூட தயாரிக்கிறார்கள். பெங்களூரில் இருந்து இன்றைக்கு ஒருவனைப் பிடித்து இருக்கிறார்கள். பிருந்தாவன் எக்ஸ்பிரஸிலிருந்து இறங்கினவன், சென்னையிலிருந்து அந்த வெடிகுண்டுகளை கடத்தி வந்ததாக, அங்கே அவர்கள் தகவலைக் கொடுத்திருக்கிறார்கள், இன்று வந்திருக்கிற செய்தியிலே. இப்படி வெடிகுண்டு கலாச்சாரம். இன்று ஆங்காங்கே கூலிப்படையினுடைய அராஜகமும், வெடிகுண்டு கலாச்சாரமும் தலைதூக்கி நின்றுகொண்டிருக்கிற இந்தக் காலக்கட்டத்தில் (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன், முடித்துவிடுகிறேன். இன்னும் நான் கோரிக்கைக்கே வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கைக்கு எல்லாம் நேரமில்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** இரண்டு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதிலே தீவிர கவனம் செலுத்தி, காவல் துறையைக் கொஞ்சம் முடுக்கிவிட்டு, குற்றங்களைக் குறைக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ரேஷன் அரிசி. நேற்றுகூட பார்த்தீர்களானால், திருநெல்வேலி கிடங்கிலிருந்து, நாங்குநேரிக்குப் போகிறபோது, ஐந்து Andhra registration லாரிகளிலே, 82.270 மெட்ரிக் டன் ரேஷன் அரிசி கடத்தியிருக்கிறார்கள். இப்படி ஆங்காங்கே, ரேஷன் அரிசி கடத்தல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதையும் நீங்கள் கட்டுப்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள், மொத்தமாக ஏதோ ஒரு குற்றச்சாட்டைச் சொல்லவேண்டும்

என்பதற்காகக் குறிப்பிட்டுச் சொல்கிறார்கள். திருநெல்வேலி குடோனிலிருந்து சென்ற அரிசி, ரேஷன் அரிசி அல்ல. அது முழுக்க முழுக்க, raw rice; அதாவது பச்சரிசி. S.G.R.Y.-க்காக ஒதுக்கப்பட்ட அரிசி. திருநெல்வேலியிலிருந்து நாங்குநேரி குடோனுக்குக் கொண்டு சென்று, எடுத்துச் செல்லப்படவேண்டிய அரிசிதான், வேற்றுப் பாதையில் சென்றதாகத்தான் குற்றச்சாட்டு இருக்கிறதே தவிர, கடத்தப்பட்டதாகக் குற்றச்சாட்டு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பத்திரிகையிலே வந்ததை மட்டும் வைத்துக்கொண்டு பேசக் கூடாது.

*முற்பகல் 11-50*

**திரு. சி. ஞானசேகரன்:** இந்தத் துறையினுடைய அதிகாரியே complaint கொடுத்து, அந்த complaint பேரில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, ஏழு பேர் குற்றவாளிகளாக இருக்கிறபோது, அது எப்படி வேறு வழியிலே போகும்?

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** திருநெல்வேலியிலிருந்து நாங்குநேரிக்குச் செல்ல வேண்டிய அரிசி, நாங்குநேரி குடோனுக்குச் சென்று கொடுக்கப்பட்டிருக்க வேண்டிய, விநியோகிக்கப்பட்டிருக்க வேண்டிய அரிசி நாங்குநேரிக்குச் செல்லாமல் - பத்திரிகைகள் என்றால், அது எப்படிப்பட்ட பத்திரிகைகள் என்பது குறித்து எடுத்துக்கொள்ள வேண்டும் - நாங்குநேரி குடோனுக்குச் செல்லாமல் நேராக எடுத்துச் சென்றுவிட்டார்கள். அதற்குத்தான் வழக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. முறைகேடாகச் சென்றுவிட்டார்கள் என்பதற்காகத்தானே தவிர, கடத்தல் செய்யப்பட்டதற்காக அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், ஒரு மணித் துளியில் பேசி முடியுங்கள். (குறுக்கீடு)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கொண்டு செல்ல வேண்டிய இடத்திற்குக் கொண்டு செல்லாமல், வேறு எங்கோ கொண்டு சென்றுவிட்டார்கள் என்று இங்கே சொல்கிறார்கள். அதை முறைகேடாகக் கொண்டு சென்றுவிட்டார்கள் என்று அவர்கள் விளக்கம் சொல்கிறார்கள். அது கடத்தல் அல்ல... (குறுக்கீடுகள்) இந்தக் கடத்தலுக்கும் முறைகேடாகக் கொண்டு போவதற்கும் இடையிலே என்ன வித்தியாசம் என்பதை அமைச்சர் விளக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வார்த்தை ஜாலங்களில் ஒன்றும் பெரிய



வித்தியாசம் இல்லை. திருநெல்வேலியிலிருந்து புறப்பட்டு, நாங்குநேரிக்குச் செல்ல வேண்டிய அரிசி நேராக பணி செய்கின்ற இடத்திற்கு -- S.G.R.Y. - பணியாளர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிற இடத்திற்கு -- கொண்டுச் செல்லப்பட்டு விநியோகிப்பதற்காக எடுத்துச் சென்றுவிட்டார்கள். குடோனுக்கு வர வேண்டிய அரிசி, வராமல் சென்றுவிட்டது என்றுதான் புகாராகக் கொடுத்திருக்கிறார். இதுதான் குற்றச்சாட்டு. இதுபற்றி விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதில் கடத்தல் என்பதற்கான எந்தவிதமான முகாந்திரமும் இல்லை. நேரடியாக குடோனுக்கு வராமல், S.G.R.Y.-இல் பணியாற்றக்கூடிய இடங்களுக்கு, வேலைக்கு உணவுத் திட்டத்தில் பணியாற்றுகின்ற இடத்திற்குத்தான், அந்த அரிசி கொண்டு செல்லப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், இன்னும் ஒரு மணித் துளியில் பேசி முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தினமணி பத்திரிகையிலே வந்திருக்கிற செய்தி. அதாவது நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சம்பந்தப்பட்ட துறை அமைச்சர், ஒரு விளக்கம் சொல்கிறார்.

**திரு. சி. ஞானசேகரன்:** துறை அமைச்சர் தவறான ஒரு தகவலை இந்த அவைக்குத் தந்து கொண்டிருப்பதை எப்படி நாங்கள் கேட்டுக்கொண்டிருப்பது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சம்பந்தப்பட்ட துறை அமைச்சர், ஒரு விளக்கம் சொல்கிறார்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 200 டன் அரிசி, தவறான இடத்திற்கா போய்விட்டது? 200 டன் அரிசி போய் இருக்கிறது. புகார் தாக்கலாகி இருக்கிறது. புகாரைத் தாக்கல் செய்தவர், அரசு ஊழியர்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான இடத்திற்குப் போகவில்லை. குடோனுக்குச் செல்ல வேண்டிய அரிசி, குடோனுக்குச் செல்லாமல், நேரடியாக விநியோக மையத்திற்குச் சென்றுவிட்டது என்றுதான் குறிப்பிட்டிருக்கிறேன். இதில் ஒன்றும் பெரிய வார்த்தை ஜாலங்களுக்கான இடமில்லை. கடத்தலுக்கான முகாந்திரமும் இல்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித் துளிக்குள் பேசி முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கைக்கு வந்துவிடுகிறேன். எங்களுடைய மாவட்டத்தில் குடிநீர்ப் பஞ்சம் கோரத் தாண்டவம் ஆடிக்கொண்டிருக்கிற காரணத்தாலே-- மாண்புமிகு முதல்வர் அவர்கள், வேலூர் மாவட்டத்திற்கும், நான்தான் முதல்வர் என்று சொன்னார்; நாங்கள் எல்லாம் மகிழ்ச்சியடைந்தோம்-- உடனடியாக ஒரு கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார். அது போதவில்லை, லாரியிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்கு. நீர் ஆதாரத்திற்கான ground water study-யை, thorough-வாகச் செய்து, 50 கோடி ரூபாய்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், தினந்தோறும் இந்தக் குடிநீர்ப் பிரச்சினையைப் பற்றி இந்த அவையில் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஏற்கெனவே வாக்குறுதி அளித்தேன். நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நேற்றுகூட, இதுசம்பந்தமாக, பொதுப் பணித் துறை அமைச்சர் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. இன்றும் இன்னொரு கூட்டம் நடைபெற உள்ளது. வேலூர் நகரத்தைப் பொறுத்தவரையில், குடிநீர்ப் பற்றாக்குறை இல்லை. ஏனென்றால், பொன்னையாறு நதியிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு, வேலூர் நகரத்திற்கு வழங்கப்படுகின்ற குடிநீர் supply இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால், வெளியிலே இருக்கின்ற சில town panchayat-களுக்கும், சில கிராமங்களுக்கும், குறிப்பாக வாணியம்பாடி போன்ற பகுதிகளுக்கு எல்லாம், குடிநீர்த் தட்டுப்பாடு இருக்கிறது. அதற்காக என்ன செய்ய வேண்டுமோ, அதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்போது, வேலூர் நகரத்திலிருந்து அங்கே உபரி தண்ணீர் இருப்பதால், ஓரத்தில் இருக்கின்ற, வெளியே இருக்கின்ற, புறநகரில் இருக்கிற, town panchayat-களுக்கும், கிராமங்களுக்கும் அங்கிருந்து லாரியில் விநியோகம் செய்ய வேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளது. அதைப்போலவே, எங்கெல்லாம் அந்த மாவட்டத்தில் குடிநீர்ப் பற்றாக்குறை இருக்கிறதோ, அதைப் போர்க்கால அடிப்படையில் நிவர்த்தி செய்ய வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** இன்னும் ஒன்று, முடித்துவிடுகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, ஏற்கெனவே இருபது, இருபத்தைந்து மணித் துளிகளுக்கு மேலாகிவிட்டன. திரு. ஐ. கணேசன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஞானசேகரன் அவர்கள் பேசுகின்றபோது சொன்ன வேறு ஒரு கருத்துக்குப் பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு நான் ஆளாக்கப்பட்டிருக்கிறேன். ஏதோ தமிழகத்தில் வெடிகுண்டு கலாச்சாரம் பரவிக் கொண்டிருப்பது போலவும், காவல் துறை ஏதோ மெத்தனமாக இருப்பது போலவும், காவல் துறையை முதலமைச்சர் முடுக்கிவிட வேண்டும் என்றெல்லாம் இங்கே பேசினார். இந்தியாவிலேயே மிகச் சிறந்த காவல் துறை நம்முடைய தமிழ்நாட்டுக் காவல் துறைதான். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே சட்டம்-ஒழுங்கு மிக நன்றாகப் பராமரிக்கப்பட்டுவரும் மாநிலம் தமிழ்நாடு மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-55

திரு. ஞானசேகரன் அவர்கள் சார்ந்திருக்கின்ற காங்கிரஸ் கட்சி ஆட்சிதான், ஆந்திராவில் நடைபெறுகிறது; கர்நாடகத்தில் நடைபெறுகிறது. அங்குள்ள நிலைமை, திரு. ஞானசேகரன் அவர்களுக்குத் தெரியுமா என்று தெரியவில்லை. நக்சலைட்டுகளைப் பற்றி இங்கே பேசினார். நக்சலைட்டுகளை, இங்கே தமிழ்நாட்டில், நான் தடை செய்திருக்கிறேன். ஆனால், ஆந்திர மாநிலத்திலோ, காங்கிரஸ் ஆட்சியில், நக்சலைட்டுகள்மீது இருந்த தடையை அவர்கள் எடுத்துவிட்டார்கள். இப்போது நக்சலைட்டுகள் சுதந்திரமாக அங்கே உலா வருகிறார்கள். தினந்தோறும் நக்சலைட்டுகள் அங்கே காவல் துறையினரையும், பொது மக்களையும், அப்பாவி மக்களையும் கொன்று குவித்துக் கொண்டிருக்கிறார்கள், ஆந்திர மாநிலத்தில். அங்கே ஒரு மாவட்டத்தில் District S.P. ஆக இருந்தவர், நக்சலைட்டு தலைவர்கள்மீது நடவடிக்கை எடுத்து, முக்கியமான ஒரு நக்சலைட் தலைவரை அண்மையில் சுட்டுக் கொன்றார். அதற்காக, வேண்டாதவர்களோடு காங்கிரஸ் கூட்டணி அமைத்துக் கொண்டிருப்பதால், அவர்கள் டெல்லியிலே உங்கள் மேலிடத்திற்குப் புகார் செய்து, மேலிடத்திலிருந்து உத்தரவு வந்து, அந்தக் காவல் துறை அதிகாரி இப்போது suspend செய்யப்பட்டிருக்கிறார். அவர் மாற்றப்பட்டிருக்கிறார். அவர் compulsory wait-ல் போடப்பட்டிருக்கிறார். ஆகவே, அங்கே காவல் துறையினர் சோர்வடைந்திருக்கிறார்கள். அங்கே மக்கள் பீதியடைந்திருக்கிறார்கள்.

கர்நாடகத்திலும், நக்சலைட்டுகளின் தொல்லை நாளுக்கு நாள் பரவிக் கொண்டிருக்கிறது. அங்கேயும் நக்சலைட்டுகள் பரவிக் கொண்டிருக்கிறார்கள். அங்கேயும் காங்கிரஸ் ஆட்சிதான். ஆகவே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, நீங்கள் தமிழ்நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் கொடுத்து வைத்தவர் என்பதை மறந்துவிடாதீர்கள் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன். (குறுக்கீடு)

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, (குறுக்கீடு) தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. முடிந்துவிட்டது. 25, 30 நிமிடங்களுக்கு மேலாகிவிட்டது. ஒரேயொரு மணித் துளியில் பேசி முடியுங்கள். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** நான் yield ஆகவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கே கொடுக்கிற நேரம் கொஞ்சம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர், திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தைக் குறித்து மாண்புமிகு முதல்வருடைய கவனத்திற்கு நான் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவருடைய கோரிக்கை நிறைவேறியதற்குச் சொல்கிறார் என்று நினைக்கிறேன்.

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரிலிருந்து ஒரு தொழிலதிபரின் மூன்று வயதுக் குழந்தையை ஒரு கும்பல் கடத்தி வந்தபோது, அந்தக் குழந்தையை ஆரணியிலே காவல் துறையினர் மூன்றே மணி நேரத்தில் மீட்டு வந்து, பெற்றோர்களிடத்திலே அந்தக் குழந்தையை ஒப்படைத்தது தமிழ்நாடு போலீஸ்தான் என்பதை மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் ஒருமுறை எதிர்க் கட்சி உறுப்பினர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். உங்களுக்கு எங்கள்மீது எவ்வளவோ கோபம் இருக்கலாம்; இந்த ஆட்சியை உங்களுக்குப் பிடிக்காமல் இருக்கலாம்; எங்கள்மீது உங்கள் கோபத்தை வேண்டுமானால் காட்டுங்கள். ஆனால்,



நம்முடைய காவல் துறைமீது அந்தக் கோபத்தைக் காட்டாதீர்கள். இப்போது, நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டியதுபோல், அண்டை மாநிலங்களான ஆந்திரப்பிரதேசத்திலும், கர்நாடகத்திலும் சட்டம்-ஒழுங்கு நிலைமை மிகவும் மோசமாகப் போய்க்கொண்டிருக்கிறது. இத்தனை மாநிலங்களுக்கிடையே, தமிழ்நாடு மட்டும்தான் அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது. ஆனால், ஆந்திரத்திலிருந்தும், கர்நாடகத்திலிருந்தும் நக்சலைட்டுகள் ஊடுருவி இங்கே வந்துவிடக் கூடாது என்பதற்காக ஆந்திராவுடன் இருக்கின்ற எல்லைப் பகுதியில், கர்நாடகத்துடன் இருக்கிற எல்லைப் பகுதியில் காவலை நாங்கள் அதிகப்படுத்த வேண்டிய ஒரு சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். ஆகவே, மீண்டும் சொல்கிறேன். தமிழ்நாட்டில் வாழ்பவர்கள், நல்ல சட்டம்-ஒழுங்கு இருக்கின்ற மாநிலத்தில் வாழ்பவர்கள்; அவர்கள் கொடுத்து வைத்தவர்கள் என்பதை மறந்துவிடாதீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், ஒரு மணித் துளியில் பேசி முடித்து விடுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் திருவள்ளுவர் பல்கலைக்கழகத்திற்கு இன்னும் Registrar, Controller of Examinations ஆகியோரைப் போடவில்லை. இரண்டரை ஆண்டுக்காலம் முடிந்துவிட்டது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்கு நடவடிக்கை எடுத்து, ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. (குறுக்கீடு) ஞானசேகரன், நீங்கள் பேசி முடித்துவிடுங்கள், முடித்துவிடுங்கள். அதோடு வாக்கியத்தை முடித்துவிடுங்கள். வாக்கியத்தை முடியுங்கள், அதோடு. அமைச்சரைப் பதில் சொல்லச் சொல்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** Registrar, Controller of Examinations ஆகியோரைப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 3 கோடி ரூபாய் நிதியிருக்கிறது. இதுவரை Financial Statement அவர்கள் கொடுக்கவில்லை. Section 8-ன்படி நீங்கள் ஒரு விசாரணை கமிஷன் அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, வேலூரில் ஒரு சட்டக் கல்லூரியை 2000 ஆம் ஆண்டு இங்கே இந்த அவையிலே சொல்லப்பட்டதுபோல, வேலூருக்கு அரசு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதையெல்லாம் அன்றாடம் பேசுகிறீர்கள். உட்காருங்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் விளக்கம் சொல்லுங்கள். அடுத்து, திரு. ஐ. கணேசன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் பல்கலைக்கழகத்திற்கு Controller of Examinations மற்றும் காலியாக இருக்கின்ற அனைத்துப் பேராசிரியர் பணியிடங்களுக்குமான நேர்முகத் தேர்வு அழைக்கப்பட்டிருக்கின்றது. அடுத்த வாரத்திலிருந்து அந்தப் பணிகளுக்கானத் தேர்வு நடைபெற இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன். (குறுக்கீடு)

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறைக்குப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய தமிழக முதல்வரை நான் மனதாரப் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. திரு. ஐ. கணேசன். (குறுக்கீடு) உங்கள் கட்சி நண்பர்தான் பேசவேண்டும். உட்காருங்கள், உட்காருங்கள். திரு. ஐ. கணேசன், பேசுங்கள்.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** அவர்களைப் பாராட்டத்தான் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன். பேசுங்கள்.

*நண்பகல் 12-00*

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005-2006 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலே என்னைப் பேச அழைத்த தங்களுக்கு என்னுடைய மனப்பூர்வமான நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல பாட்டாளி மக்கள் கட்சியினுடைய குலவிளக்காகத் திகழக்கூடிய எங்களுடைய தமிழினப் போராளி டாக்டர் ஐயா அவர்களுக்கும், இந்த நேரத்திலே நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்... (குறுக்கீடுகள்) ஏனப்பா ?.. ஏன் ?.. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேறு ஒன்றுமில்லை. மருத்துவர் என்று சொல்லாமல், டாக்டர் என்று சொல்கிறீர்களே என்று சொல்கிறார்கள்.

**திரு. ஐ. கணேசன்:** எங்களுடைய மருத்துவர் ஐயா அவர்களுக்கு...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்க்குடித் தாங்கிகளாகிய பாட்டாளி மக்கள் கட்சியினர், செந்தமிழில், சுத்தத் தமிழில் பேச வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்; தவறா ?



**திரு. ஐ. கணேசன்:** முதலமைச்சர் அவர்கள், எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் மருத்துவர் ஐயா எண்ணக்கூடிய எண்ணத்தை நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அதற்காக ஐயா அவர்களின் சார்பாகவும், எங்களுடைய சார்பாகவும் உங்களுக்கு நன்றி சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும்போது, முன்னாள் மத்திய-மாநில அமைச்சராகவும், மேதகு ஆளுநராகவும் பணியாற்றிய திரு. சி. சுப்ரமணியம் அவர்கள் சொன்னதுதான் எனது நினைவிற்கு வருகிறது. 'அரசாங்க இயந்திரம் ஒரு குதிரையைப் போன்றது. அதில் சரியாக சவாரி செய்ய ஒரு திறமையான குதிரையோட்டி தேவை. அப்போதுதான் குறிப்பிட்ட எல்லைக்குச் செல்ல முடியும். ஓட்டுநர் சரியாக இல்லையென்றால், குதிரை குழிபறிக்கும், ஓட்டுநரையும் கீழே தள்ளிவிடும் என்பது உண்மை. அதுபோலத்தான், இன்றைய தமிழகத்தில் சரியாக ஓட்டுநர் இல்லையோ என்ற ஓர் அச்சம் எங்களுக்கு ஏற்படுகிறது. இந்த நிதிநிலை அறிக்கையிலே பக்கம் 56-ல், பத்தி 103-லே, சிறப்பு அம்சமாக, வேலைவாய்ப்பிற்காகப் பதிவு செய்துள்ள நபர்களின் மொத்த எண்ணிக்கை 2003 ஆம் ஆண்டு, 48.76 இலட்சம் என்றும், அது 2004 ஆம் ஆண்டு 41.51 இலட்சமாக, 7.2 சதவிகிதம்...

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில், பதிவாளர்கள், தங்கள் இருப்பிடத்திற்கு ஆதாரமாகக் குடும்ப அட்டையும், மாவட்டத்திற்குள் முகவரி மாற்றுவதற்குக் குடும்ப அட்டையும், பதிவினை வேறு மாவட்டத்திற்கு மாற்றுவதற்கு, மாறிச்செல்லும் மாவட்டத்திற்குரிய முகவரியுடன்கூடிய குடும்ப அட்டையும், வட்டாட்சியர் வழங்கிய குடிபெயர்ச்சி சான்றும் பெற்று வேலைவாய்ப்பு அலுவலகத்தில் அளிக்கவேண்டுமென வலியுறுத்தப்பட்டது. இதன் காரணமாக, பதிவு செய்துகொள்ளலில், மேலும் முறைப்படுத்தப்பட்டதனால், பதிவு எண்ணிக்கை இறங்குமுகமாகியது. எனினும், 2003 ஆம் ஆண்டில் பணி வாய்ப்பு அதிகம் கிடைத்துள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனையின்பேரில், அனைத்து மாவட்டங்களிலும் வேலைவாய்ப்பு அலுவலக விவரங்கள் கணினிமயமாக்கப்பட்டது முழுமையடைந்துள்ளது. இந்த உயிர்ப் பதிவில் இருப்பதற்காகக் கணக்கிடப்பட்டு வந்த பதிவுகளும், இருப்புப் பதிவில் தொடர்ந்து இருக்கத் தகுதியற்றவர்களின் பதிவுகளும் களையப்பட்டன. மேலும், புதுப்பித்தல் சரிசெய்யப்பட்டது. இந்த முறையால், உயிர்ப் பதிவில் உள்ள எண்ணிக்கை, 41,51,120 ஆக, 31-12-2004-இல் கணினிமயமாக்கப்பட்டதனால் குறையப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நிதிநிலை அறிக்கையிலே கொடுத்த, அந்தப் பக்கத்திலே இருக்கக்கூடிய வாசகத்தை மட்டும்தான் சொன்னேன். அமைச்சர் அவர்கள் இவ்வளவு பெரிய விளக்கம், குடிபெயர்ந்ததனால் எண்ணிக்கை விடுபட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். அது இந்த விளக்கத்திற்குப் பொருத்தமானதாக இல்லை. நான் கூறுவதைக் கேட்டு, நிதி அமைச்சர் பதில் சொல்லும்போது, தெளிவாக அவர் பதில் சொல்ல வேண்டும் என்று நானும், தமிழகமும், இளைஞர் சமுதாயமும் எண்ணிக் கொண்டிருக்கிறோம் என்பதனை தயவுசெய்து உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். 2003-ல் 7.2 இலட்சம் படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு பதிவு அலுவலகத்தில் பதிவு செய்து, அவர்களுக்கு எந்தெந்த மாவட்டத்தில் எவ்வளவு பேருக்கு வேலைகள் கொடுக்கப்பட்டன என்பதனை நிதி அமைச்சர் அவர்கள் பதிலுரையிலே தெளிவாகச் சொல்ல வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, சட்டியில் இருக்கும் சோறு மற்றும் குழம்பு எவ்வளவு சுவையாக, சுத்தமாக இருந்தாலும், அதைப் பரிமாறுவதற்கு ஒரு கரண்டி தேவை. சபாநாயகர் அவர்களே, ஒரு கரண்டி தேவை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியா? (சிரிப்பு)

**திரு. ஐ. கணேசன்:** அதுபோல, அரசின் திட்டங்கள் மக்களைச் சென்றடைய-

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புதிய புதிய கருத்தை எல்லாம் சொல்கிறீர்கள்! (சிரிப்பு)

**திரு. ஐ. கணேசன்:** அன்றைக்கு அமைச்சர் அவர்கள் கேட்டார்கள் என்பதற்காகச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சரி. சொல்லுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** அரசின் திட்டங்கள் மக்களைச் சென்றடைய வேண்டுமானால், அரசு ஊழியர்கள் ஊக்கமும், ஆக்கமும் உடையவர்களாக இருக்க வேண்டும். அரசு ஊழியர்களுக்கு அகவிலைப் படி 9 மாத காலத் தவணைக்குப்பின் அறிவிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சர் அவர்களும், முதல்வரும் 9 மாத காலத் தவணைக்குபின் கொடுக்காமல், அதை உடனடியாக முன்தேதியிட்டு வழங்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். முன்பு, அரசு ஊழியர்களுக்கு முழு ஓய்வூதியம் பெற 30 ஆண்டுகளே இருந்தது.



இப்பொழுது அண்ணா தி.மு.க. ஆட்சியிலே அது 33 ஆண்டுகளாக ஆக்கப்பட்டுள்ளது. இதனால், அரசு ஊழியர்கள் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். தயவுசெய்து, இந்த அரசு, மீண்டும் ஓய்வூதியப் பணிக் காலத்தை 30 ஆண்டுகளாக மாற்றவேண்டுமென்று பணிவோடு உங்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

போராட்டத்தில் ஈடுபட்ட அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள்போல, பணிநீக்கம் செய்யப்பட்ட 1003 அரசு ஊழியர்களுக்கும் சலுகைகள் முழுமையாகக் கிடைக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தமிழகத்திலே, பல கிராமப்புறங்களில் உள்ள பள்ளிகளில்--நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள்--9333 இடங்கள் இன்னும் நிரப்பப்பட வேண்டும் என்று சொன்னார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறத்தில் இருக்கக்கூடிய குழந்தைகளினுடைய கல்வித் தரம் மிக மிகக் குறைந்து இருக்கிறது. கிராமப்புறம் வளர்ச்சி அடைந்தால்தான், நாடு வளர முடியும். கிராமப்புறம் இந்த நாட்டினுடைய ஒரு அச்சாணி என்று உலக உத்தமர் மகாத்மா காந்தி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அந்தவகையிலே, கிராமப்புற மக்களினுடைய வளர்ச்சியிலே, குழந்தைகளினுடைய வளர்ச்சியிலே, இந்த அரசு அக்கறைகொண்டு, உடனடியாக நல்ல ஆசிரியர்களை நியமிக்க அரசு முன்வர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 9333 ஆசிரியர்கள், ஏற்கெனவே தேர்வு செய்யப்பட்டுவிட்டார்கள். தேர்வு செய்யப்பட்ட ஆசிரியர்களுடைய சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்னும் 20, 25 நாட்களுக்குள்ளாக அந்த ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன்னேன். விரைவாக நீங்கள் நியமித்து, அந்தக் கிராமப்புற மக்களுக்கு, அந்தக் குழந்தைகளுக்குக் கல்வி அறிவைப் புகட்ட வேண்டுமென்று சொன்னேன்.

அதேபோல, தமிழகத்தில் காலியாக உள்ள இலட்சக்கணக்கான அரசு ஊழியர்களின் அந்தப் பணியிடங்களை நிரப்ப வேண்டும்.

தனியார்த் துறையிலும், இட ஒதுக்கீட்டை வழங்க வேண்டும். இதற்காக மகாராஷ்டிரா அரசு தனிச் சட்டம் கொண்டு வந்ததைப்போல,

[திரு. ஐ. கணேசன்] [2005 மார்ச் 8

தமிழகத்திலும் இந்த அரசு, தனியார்த் துறையிலும் இட ஒதுக்கீட்டை வழங்கிட ஒரு சட்டம் கொண்டுவர வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு மாதம் குறைந்தது 500 ரூபாயாவது இந்த அரசாங்கம் உதவித் தொகையாக வழங்க வேண்டும்.

சுய வேலைவாய்ப்புகளை உருவாக்க தனி வாரியம் அமைத்து, அதற்குண்டான நிதியையும் நிதி அமைச்சர் அவர்கள் ஒதுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். வேலைவாய்ப்புக்காக விதிக்கப்பட்டுள்ள இந்த தடைச் சட்டத்தை, கறுப்புச் சட்டத்தை இந்த அரசு விலக்கி, படித்த இளைஞர்களுக்கு உடனடியாக வேலை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*பிற்பகல் 12-10*

அதேபோல, மீண்டும் மக்கள் நலப் பணியாளர்களுக்கு வேலை கிடைக்க, இந்த அரசு முயற்சிக்க வேண்டுமென்று பணிவோடு உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

சாலைப் பணியாளர்கள், சுமார் 10,000-க்கும் மேற்பட்டவர்கள், இன்று வேலையில்லாமல் அவதிப்படுகிறார்கள். உயர் நீதிமன்றம் உத்தரவு வழங்கியும், இந்த அரசு இன்னும் அவர்களுக்கு வேலை கொடுக்கவில்லை. இதை எண்ணும்போது மிக வேதனையாக இருக்கிறது. இந்தச் சாலைப் பணியாளர்களுடைய குடும்ப நிலை மிக மிக வருந்தக்கூடியதாக இருக்கிறது. கிட்டத்தட்ட 45 சாலைப் பணியாளர்கள், குடும்பத்தைக் காப்பாற்ற முடியாமல் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அரசு உணர்ந்து, அந்தப் பரிதாபத்திற்குரிய சாலைப் பணியாளர்களின் குடும்பத்தைக் கருத்திலேகொண்டு, முதல்வர் அவர்களும், நிதி அமைச்சர் அவர்களும்-- முந்தைய அரசு நியமித்தது என்ற ஒரே காரணத்திற்காக அவர்களுக்கு வேலை வழங்கப்படவில்லையோ என்று மக்கள் எண்ணுகிறார்கள்; அந்த ஐயப்பாட்டை, அந்தச் சந்தேகத்தை நீக்குவதற்காகவாவது—இந்தப் பரிதாபத்திற்குரிய சாலைப் பணியாளர்களுக்கு மீண்டும் வேலை வழங்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தின்மூலமாக பணிவோடு நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

2004-2005 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே பக்கம் 14, பத்தி 26-லே "சென்னை மக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கு, கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் ஒன்றுதான் விடிவு" என்று அன்றைய நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருந்தார்கள்.



2005 மார்ச் 8] [திரு. ஐ. கணேசன்]

இந்த நிதிநிலை அறிக்கையிலே, 2005-2006 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையிலே 'வீராணம் திட்டம், புதிய வீராணம் விரிவாக்கத் திட்டம்தான் நிரந்தரத் தீர்வு' என்று சொல்கிறார்கள். ஆகையாலே, நான் உங்கள் மூலமாக அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம், தெலுங்கு கங்கைத் திட்டத்திற்காக, ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்தது; அதேபோல, வீராணம், புதிய வீராணம் திட்டத்திற்காக இந்த அரசு, ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலே செலவு செய்து கொண்டிருக்கிறது. அப்படியிருந்தும், சென்னை மக்களுக்கு நான்கில் ஒரு பங்குகூட குடிநீர் கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. சென்னைக்குத் தேவையான குடிநீர், நாள் ஒன்றுக்கு 840 மில்லியன் லிட்டராகும். தற்போது, 205 மில்லியன் லிட்டர் குடிநீர்தான் வழங்கப்படுகிறது என்று இந்த நிதிநிலை அறிக்கை சொல்கிறது. முழுமையாக, சென்னை மக்களுக்குக் குடிநீர் வழங்க வேண்டுமானால், கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் என்ற மத்திய அரசு அறிவித்த திட்டத்திற்கு, தமிழகத்திலே எத்தனை கோடி ரூபாய் தேவை என்று தெளிவான ஒரு திட்டத்தைத் தயார் செய்து, ஒப்பந்தக்காரர்களை நியமித்து, உடனடியாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்; நிறைவேற்ற வேண்டும். அப்போதுதான் சென்னை மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினை ஓரளவுக்குத் தீரும் என்று நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, சேது சமுத்திரத் திட்டம். பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு நன்றாகத் தெரியும், சேது சமுத்திரத் திட்டம் பேரறிஞர் பெருந்தகை, அறிவுலக மேதை, அறிவுக் கடல் அறிஞர் அண்ணா கனவுகண்ட திட்டம். அந்தத் திட்டத்தை, இந்த அரசு வெற்றிகரமாக நடத்துவதற்காக நம்முடைய முதல்வர், இன்றைய முதல்வர் அவர்களும் பலமுறை சொல்லியிருக்கிறார்கள். நான் இந்த இடத்திலே சொல்வது, நம்முடைய அரசாங்கம் கௌரவத்தைப் பார்க்காமல், இந்தச் சேது சமுத்திரத் திட்டம் ஒன்று இல்லாமல், திராவிட இனத்தினுடைய வாழ்க்கை வளராது என்பதை உணர்ந்து, சேது சமுத்திரத் திட்டத்தை இந்த அரசு உடனடியாக நிறைவேற்ற, பல நல்ல ஆலோசனைகளைச் சொல்ல, மத்திய அரசுடன் ஒத்து, இந்தத் திட்டத்தை விரைவிலே நிறைவேற்றிக் கொடுப்பது, பேரறிஞர் அண்ணாவிற்கு நாம் செய்யக்கூடிய கடமை என்று நான் பணிவோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல விவசாயிகள், விவசாயிகளுடைய பிரச்சினை. ஒரு நல்ல விளக்கிற்கு வெளிச்சம் எப்படியோ, ஒரு நல்ல வயலுக்கு விளைச்சல் அப்படியே.

*(உறுப்பினர், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரைப் பார்த்துப் பேசினார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கணேசன், சபாநாயகர் இங்கே இருக்கிறார். *(சிரிப்பு)*

**திரு. ஐ. கணேசன்:** இல்லை. அவர் எழுந்து விடுவார், விவசாயம் என்றால் அவர் எழுந்து விடுவார். நீங்கள் 'டப்' என்று மணி அடித்து விடுவீர்கள், அதனால்தான், வேறொன்றும் இல்லை. *(சிரிப்பு)* நான் மறுபடியும் சொல்கிறேன். 'நல்ல விளக்கிற்கு வெளிச்சம் எப்படியோ, தலைவர் அவர்களே, நல்ல வயலுக்கு விளைச்சல் அப்படியே; அப்படியேதான் நல்ல ஆட்சியில் மக்களுக்கு நிம்மதி வேண்டும்' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால், இன்று நாட்டின் முதுகெலும்பாக இருக்கும் விவசாயிகள் நிம்மதியாக இல்லை. நெற்றி வியர்வை நிலத்தில் விழ, படாதபாடுபட்டு அவன் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு மூட்டை நெல்லின் விலை 350 ரூபாய் என்று எங்கள் பகுதியில் விற்கப்படுகிறது. 3.50 ரூபாய் என்பது கட்டுப்படியான விலை இல்லை என்பதையும் உணர்ந்து, அந்த விவசாயி 350 ரூபாய்க்கு நெல்லை விற்றுவிட்டு...

*பிற்பகல் 12-15*

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் பெருமக்கள் உற்பத்தி செய்கின்ற விளைபொருட்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்க வேண்டுமென்ற தொலைநோக்குப் பார்வையோடு, விளைபொருட்கள் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களாக உருவாக்கப்பட வேண்டும் என்பதற்காக, இந்தியத் துணைக் கண்டத்திலேயே எந்த ஒரு முதலமைச்சரும் செய்ய முடியாத, தொலைநோக்குத் திட்டமாக, புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உருவாக்கியிருக்கின்றார்கள் என்பதை நான் இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குப் பணிவோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்த அடிப்படையிலேதான், வேளாண் பெருமக்கள் உற்பத்தி செய்கின்ற விளைபொருட்களுக்கு கட்டுப்படியாகக்கூடிய விலை கிடைக்க வேண்டும்; அந்த விளைபொருட்கள், மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களாக உருவாக்கப்பட வேண்டும் என்பதற்காக, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுடைய திருப்பெயராலே புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கின்றது என்பதையும், இந்தியத் துணைக் கண்டத்திலேயே எந்த ஒரு மாநிலத்திலும் கொடுக்கப்படாத சலுகையாக,



அப்படி உருவாக்கப்படுகின்ற அந்தப் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்குத் தளவாடங்கள் மற்றும் இயந்திரங்கள் வாங்குவதற்காக 15 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கிக் கொண்டிருக்கின்றது அம்மா அவர்களுடைய அரசு என்பதையும், அவர்களுக்கு மின்னாக்கி வாங்குவதற்காக, 5 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும், தங்குதடையின்றி அந்தத் தொழிற்சாலையிலே பணிபுரிகின்றபோது, பெண்கள் 50-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் அங்கே பணிபுரிவதாக இருந்தால், 5 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படுகின்ற ஒரு சலுகை, அந்தத் தொழிற்சாலையிலே முதலாண்டு உபயோகிக்கப்படுகின்ற மின்சாரத்திற்கு 30 சதவிகிதம் மானியம், இரண்டாவது வருடத்திற்கு 20 சதவிகிதம் மானியம், 3-வது வருடத்திற்கு 10 சதவிகிதம் மானியம் என்கின்ற அடிப்படையிலே வேளாண் விளைபொருட்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்க வேண்டும் என்பதற்காக மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களாக உருவாக்கப்பட வேண்டுமென்பதற்காக, இந்தச் சலுகைகளை எல்லாம் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கிக் கொண்டு வருகின்றார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நான்கு ஆண்டுக் காலமாக வருண பகவான், கருணையால் மழை பொழியவில்லை என்கின்றபோதிலும்கூட, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விவசாயிகளுடைய கஷ்டத்தைப் போக்குவதற்காக, இந்தியத் துணைக் கண்டத்திலேயே, தமிழகத்திலே இருக்கின்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே பெறப்பட்ட கடனுக்குக் கூட்டு வட்டியாக, அபராத வட்டியாக இருந்த ரூ. 310.50 கோடியைத் தள்ளுபடி செய்த தாய், எங்கள் தாய் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதோடு மட்டுமல்ல, 2002 ஆம் ஆண்டு கடும் வறட்சியின் காரணமாக, ரூ. 60.50 கோடியை தள்ளுபடி செய்த பெருமை, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு. 2003 ஆம் ஆண்டு ரூ. 62 கோடியை விவசாயப் பெருமக்களுக்காக கூட்டு வட்டி, அபராத வட்டியைத் தள்ளுபடி செய்த பெருமை, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு என்பதை இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்டி, இப்படி எண்ணிலடங்கா சலுகைகளை வாரி வழங்கிக் கொண்டிருக்கின்ற எங்கள் தாயினுடைய ஆட்சி, விவசாயிகளுடைய ஆட்சி; விவசாயிகளுடைய அரசு என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

[2005 மார்ச் 8

**திரு. ஐ. கணேசன்:** கேட்காமலேயே விட்டிருக்கலாம்! (சிரிப்பு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பகுதியிலே, நாங்கள் உற்பத்தி செய்து, விற்கக்கூடிய ஒரு மூட்டை, 75 கிலோ நெல்லின் விலை 350 ரூபாய். ஆனால் திரு. சந்தானம் அவர்கள், அவருடைய பகுதியிலே 300 ரூபாய்க்குத்தான் விற்கப்படுகிறது, பரவாயில்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் மூலமாக நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். முதலமைச்சர் அவர்கள், நிச்சயமாக இதன்மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். 75 கிலோ, ஒரு மூட்டை நெல்லின் விலை 300, 350 ரூபாய். ஆனால், அவன் வளர்க்கும் ஆடு, மாடு, எருமைகளுக்கு, அந்த விவசாயி கடைக்குச் சென்று தவிடு வாங்கும்போது, 75 கிலோ தவிட்டின் விலை என்னவென்று அமைச்சருக்குத் தெரியுமா? 450 ரூபாய் ஐயா, 450 ரூபாய். ...

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** தவிட்டினுடைய விலையும் தெரியும்; பிண்ணாக்கினுடைய விலையும் தெரியும்! (சிரிப்பு)

**திரு. ஐ. கணேசன்:** தயவுசெய்து தவிட்டினுடைய விலையை அவர் சொல்லட்டும்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** எங்களுடைய மாவட்டத்திலே நான்கரை சேர் என்று சொல்லக்கூடிய ஒரு மரக்கால் தவிடு, ஐந்து ரூபாய்க்குக் கிடைக்கின்றது. (குறுக்கீடு)

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** பச்சரிசித் தவிடு ஐந்து ரூபாய்க்கும், புழுங்கல் அரிசி தவிடு நான்கரை ரூபாய்க்கும் கிடைக்கின்றது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொண்டு, உங்களுக்கு எவ்வளவு தவிடு வேண்டுமானாலும் நான் விலைக்கு அனுப்பி வைக்கின்றேன் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-20

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல் கொள்முதலைப் பொறுத்தவரை, அண்ணன் ஐ.ஜி அவர்கள் தவறானத் தகவலை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தில் எந்த ஆண்டும் இல்லாத வகையில், இந்த ஆண்டு சிறந்த முறையில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவுப்படி, தமிழகம் முழுவதும் எங்கெல்லாம் நெல் விளைச்சல் அதிகமாக உள்ளதோ, எங்கெல்லாம் விவசாயிகளிடமிருந்து கோரிக்கைகள் வந்திருக்கின்றனவோ அங்கெல்லாம் அந்த மாவட்ட ஆட்சித் தலைவருடைய



2005 மார்ச் 8] [திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்]

ஆலோசனையின்பேரில் 992 நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, இதுவரையில் 7,63,615 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியைச் சொல்லி, Grade A அதாவது முதல் ரகமான நெல், ஒரு குவிண்டால் ரூ. 590 என்றும், common அதாவது பொது ரகமான நெல், ஒரு குவிண்டால் ரூ. 560 என்றும் தமிழக அரசின் சார்பாகக் கொள்முதல் செய்யப்படுகிறது என்று குறிப்பிட்டு, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினருடைய பகுதியிலே, நெல் விளைச்சல் அதிகமாக இருக்கும் என்றால், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கோரிக்கை வைக்கப்படுமானால், அங்கேயும் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் சார்பாக இங்கே குறிப்பிட்டு அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கூறியதைப்போல, மதுரை மாவட்டத்திலே, நெல்லினுடைய விலை மிக வீழ்ச்சியாக இருந்த நிலையை அறிந்து சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே, அங்கு அரசின் சார்பிலே கொள்முதல் நிலையங்கள் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க, அந்த மாவட்டத்திலே, ஏறக்குறைய 10 நெல் கொள்முதல் நிலையங்கள் தொடங்கப்பட்டதன் காரணமாக, இப்பொழுது நெல் விலைச் சரிவிலிருந்து விவசாயிகள் காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், இன்னும் 5 மணித் துளிகள்.

**திரு. ஐ. கணேசன்:** இப்பொழுதுதான் ஆரம்பித்திருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் தவிடு விலையும் தெரியும், பிண்ணாக்கு விலையும் தெரியும், பருத்திக் கொட்டை விலையும் தெரியும் என்று சொன்னார்கள். நான் எங்களுடைய பகுதியிலே என்னுடைய ஊரிலே விற்கக்கூடிய நிலையைத்தான் சொன்னேன். நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், 'உடனடியாக அரசுக்கு, கலெக்டருக்குத் தெரிவியுங்கள், அங்கே ஒரு கொள்முதல் நிலையத்தை நாங்கள் ஏற்பாடு செய்து கொடுக்கிறோம்' என்று சொன்னார்கள். அவர்களுக்கு நான் பணிவோடு சொல்லிக்கொள்கின்றேன், இதை நான் கவன ஈர்ப்பாகவே கொடுத்திருக்கின்றேன். மேட்டூர் கிழக்குக் கரை வாய்க்காலில் தண்ணீர் வந்தபோது, நெல் உற்பத்தி மிக அதிகமாக இருந்திருக்கிறது; ஆனால், அதற்கு விவசாயிகளுக்குப் போதுமான அளவு கட்டுப்படியான விலை

கிடைக்கவில்லை என்று நான் தெளிவாகக் கொடுத்திருக்கின்றேன். அந்த விவசாயிக்கு, அவன் உற்பத்தி செய்த அந்தப் பொருளுக்கு, அவனால் விலை நிர்ணயிக்க முடியவில்லை. ஒரு குண்டூசி உற்பத்தி செய்யக்கூடிய ஒரு முதலாளி, ஒரு குண்டூசிக்கு விலையை நிர்ணயிக்கிறான். படாதபாடு பட்டு, நெற்றி வியர்வை நிலத்தில் விழ விழ, இரத்தத்தை வியர்வையாக்கி உழைக்கக்கூடிய அந்த விவசாயி உற்பத்தி செய்யக்கூடிய பொருளுக்கு விலை நிர்ணயிக்க முடிகிறதா? சபாநாயகர் அவர்களே, நீங்களே சொல்லுங்கள். இந்த நாட்டு விவசாயிகளுடைய பரிதாப நிலையை, இந்த அமைச்சரவர்கள் "அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலமாக நிறைவேற்றப்படுகிறது என்றால், விவசாயிகளுடைய வாழ்வு நிறைவேறியதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, ** என்பதெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அமைச்சர் அவர்கள், நீங்கள் சொன்னதற்கு உரிய பதிலைச் சொல்ல வேண்டுமென்று அவ்வளவு கவனம் எடுத்துக்கொண்டு அவர்கள் முறையான புள்ளி விவரத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இதுபோன்ற பதங்களைத் தவிர்ப்பது நல்லது. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல் மிகக் குறைந்த விலைக்கு விற்பதாக மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் இங்கே குறிப்பிட்டார். நான் அதற்குப் பதிலாக, இதுவரை எந்த ஆண்டும் இல்லாதவகையில், 7,63,615 டன் நெல், தரம் ஒன்று 100 கிலோ நெல், 590 ரூபாய்க்குக் கொள்முதல் செய்யப்படுகிறது; common அதாவது பொது ரக நெல், 560 ரூபாய்க்குக் கொள்முதல் செய்யப்படுகிறது என்ற தகவலை இங்கே குறிப்பிட்டிருக்கிறேன். உங்கள் பகுதியில், நெல் விளைச்சல் அதிகமாக இருக்குமானால், எந்தப் பகுதியில் நெல் கொள்முதல் நிலையம் தொடங்க வேண்டுமென்று சொன்னால், அங்கே திறப்பதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அதற்குத் தயாராக இருக்கிறது என்ற கருத்தைச் சொல்லி, அதற்கு நீங்கள் விவசாயிகளுக்காக அக்கறையோடு கோரிக்கை மனுவை வைத்தால், உடனடியாக ஏற்பாடு செய்ய இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னது, 75 கிலோ ஒரு மூட்டை நெல், சாக்கோடு சேர்த்து 76 கிலோதான் என்னுடைய பகுதியில் விற்கிறார்கள், அது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். மேட்டூர், கிழக்குக் கரை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





வாய்க்காலில் கிட்டத்தட்ட 20 ஆயிரம் ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டு கொள்முதல் செய்திருக்கிறார்கள்.

அதுபோலவே, பேரவைத் தலைவர் அவர்களே, பருத்தியின் விலையும் சென்ற ஆண்டு ஒரு கிலோ பருத்தி விலை 27 ரூபாயிலிருந்து 30 ரூபாய் வரைக்கும் விற்றது. ஆனால், இந்த ஆண்டு இப்போது ஒரு கிலோ பருத்தியின் விலை 11 ரூபாயிலிருந்து மிக அதிகபட்சமாக 15 ரூபாய்க்குதான் விற்கப்படுகிறது. பருத்தி உற்பத்தி செய்யக்கூடிய அந்த ஏழை விவசாயிகள் எல்லாம் பல இன்னல்களுக்கு ஆட்பட்டு, பல கஷ்டங்களை அனுபவித்து, கடனாளிகளாக ஆகிக் கொண்டிருக்கிறார்கள். அவன் இறப்பதைத் தவிர, தற்கொலை செய்துகொள்வதைத் தவிர வேறு வழியில்லாமல், விலை நிர்ணயம் இல்லாமல் இருக்கிறது. எப்படி அமைச்சர் அவர்கள் சொன்னாரோ, நெல்லுக்குக் கொள்முதல் விலை, அடிப்படை விலை நிர்ணயித்ததுபோல், இந்தப் பருத்திக்கும் அடிப்படை விலையை நிர்ணயிக்க இந்த அரசு முன்வர வேண்டும். பருத்தி விவசாயிகளுக்கு ஒரு நல்ல தகவலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே இப்போது அறிவிப்பார் என்று எண்ணுகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவர் அறிவிப்பார். நீங்கள் இன்னும் இரண்டு மணித் துளிகளில் பேசி முடித்துவிடுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பருத்தி சாகுபடி செய்கின்ற விவசாயப் பெருமக்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்க வேண்டும்; அந்த விவசாயிகளுக்கு உறுதி செய்யப்பட்ட விலை நிர்ணயிக்கப்பட வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையோடு, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பருத்தி உற்பத்தி செய்கின்ற விவசாயிகளை, ஒப்பந்த அடிப்படையிலே ஏற்பாடு செய்து, இப்போது பல்வேறு தொழில் நிறுவனங்களையும் அதிலே ஈடுபடுத்தியிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அடிப்படையிலே Apache Care என்கின்ற பொள்ளாச்சியிலே இருக்கின்ற நிறுவனத்தையும், கோயம்புத்தூரில் இருக்கின்ற Super Spinning Mills என்கின்ற நிறுவனத்தையும், பண்ணை ஒப்பந்த அடிப்படையிலே அதற்கான ஏற்பாட்டைச் செய்து விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற, அந்தப் பருத்திக்குத் தேவையான இடுபொருட்களையும், தேவையான கடன் உதவியையும், அதற்கு ஏற்றாற்போன்று அவர்கள் உற்பத்தி செய்கின்ற ஒட்டுமொத்தப் பருத்தியையும், உரிய அடிப்படையிலே, உரிய விலையிலே

கொள்முதல் செய்வதற்கு, பண்ணை ஒப்பந்த அடிப்படையிலே, ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்பதையும், அதனுடைய முன்னோடியாகத்தான் இந்த நிறுவனங்கள் அதிலே ஈடுபடுத்தப்பட்டு இருக்கின்றன என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அடிப்படையிலே கடந்த ஆண்டு மட்டும் ஏறக்குறைய பயன்பெற்ற விவசாயிகள் 1,540-க்கு மேல் இருக்கிறார்கள் என்பதையும், இந்த ஆண்டு ஒரு குவிண்டால் பருத்தி 1,850 ரூபாய்க்குக் கொள்முதல் செய்வதற்குண்டான ஒப்பந்தத்தையும் அந்த நிறுவனங்களோடு இன்றைக்கு இப்போது ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதையும் நான் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஐ. கணேசன் அவர்கள் குறிப்பிடுகின்ற நேரத்திலே, அது நெல்லாக இருந்தாலும், பருத்தியாக இருந்தாலும், விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய எந்தப் பொருளுக்கும் கட்டுப்படியான விலை கிடைப்பதில்லை. இது விவசாயிகளுடைய நீண்ட நாளைய கோரிக்கை. அப்படி விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலை கிடைப்பதில்லை என்றார்கள். அதேநேரத்திலே, சந்தைக்குச் செல்கிற நேரத்திலே, நுகர்வோருக்கு ஒரு கூடுதலான விலையிலே அந்தப் பொருள் கிடைக்கிறது. ஆகவே, விவசாயிகளுக்கு விலை கட்டுப்படியாகவில்லை. வாங்கும் நுகர்வோருக்குக் கூடுதலான விலையிலே அதே பொருள் விற்கப்படுகிறது. ஆகவே, இதையெல்லாம் சீரமைப்பதற்காக, விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருளுக்கு கட்டுப்படியாகக்கூடிய விலை கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தவகையிலே, பிற மாநிலங்களிலேகூட விற்பனைத் துறையிலே அங்கே தனியாக ஒரு துறையை அமைத்து, வேளாண் விற்பனைத் துறை என்ற ஒரு துறையை அமைத்து, அமைச்சரை நியமித்து, அதற்கான நடவடிக்கை எல்லாம் எடுக்கப்பட்டு வருகிறது. அந்தவகையிலே, இந்த அரசு செய்ய வேண்டும் என்பதுதான் எங்கள் கோரிக்கை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, மாண்புமிகு... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றைத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலும் வேளாண் விற்பனைக் கூட்டுறவு அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. இதில் முக்கியப் பிரச்சினை நெல்லைப் பொறுத்தவரைக்கும், நெல் கொள்முதலை நாம் நேரடியாகச் செய்வதில்லை.



மைய அரசின் சார்பில், we are acting only as agents for Central Government. அந்த விலையை நிர்ணயம் செய்கிறபோது. அது 590 ரூபாய் சிறப்பு இரகத்திற்கும், 560 ரூபாய் பொது இரகத்திற்கும் (குறுக்கீடு) இல்லை, மைய அரசு, 100 கிலோ -- மைய அரசு, அந்த விலையை நிர்ணயம் செய்திருக்கிறது. மைய அரசு அந்த விலையைக் கட்டாயம் உயர்த்தித் தந்தால்தான் விவசாயிகளுக்குக் கட்டும் என்பது நடைமுறை உண்மை. மைய அரசை வற்புறுத்தி, விலையை, நெல்லுக்கு விலையை உயர்த்தித் தர வேண்டும் என்ற கோரிக்கையை நாம் அனைவரும் சேர்ந்து வலியுறுத்த வேண்டும். முக்கியமாக நீங்கள், அதை டெல்லியிலே வலியுறுத்த வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். கரும்பைப் பொறுத்தவரைக்கும், பருத்தியைப் பொறுத்தவரைக்கும், மைய அரசு WTO என்ற அடிப்படையில் ஒரு தவறான அணுகுமுறையைக் கடைப்பிடித்து வருகிறது. மில் அதிபர்கள் எல்லாம் கேட்கிறார்கள் என்பதற்காக பஞ்சு இறக்குமதியை மைய அரசு பருத்தி விளைகின்ற நாடுகளிலிருந்து தாராளமாக இறக்குமதி செய்வதால், நமது இந்திய நாட்டினுடைய பருத்தி உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் பெரிதும் பாதிப்புக்குட்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா முதலமைச்சர் அவர்கள், WTO என்ற அடிப்படையில் விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலை இல்லாத நிலையை உருவாக்குகின்ற இறக்குமதியைத் தடுக்க வேண்டும்; இறக்குமதிக்கு அதிக வரியைப் போட வேண்டும் என்று மைய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள்.

பிற்பகல் 12-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், பேசி முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் நிறைய பேர் பேச வேண்டும்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த மாமன்றத்தின் மூலமாக வேண்டுகோள் வைப்பதெல்லாம், வேளாண் பெருமக்களுக்கு வேண்டுகோள் வைப்பதெல்லாம், பருத்தி உற்பத்தி செய்கின்ற அந்த வேளாண் பெருமக்கள் ஒப்பந்தப் பண்ணை அடிப்படையிலே தங்களை ஈடுபடுத்திக்கொண்டால், அந்த அடிப்படையிலே அவர்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைப்பதற்குண்டான ஒரு ஒப்பந்தத்தை நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ளும் என்பதையும், அப்படி நிறுவனங்கள் ஏற்றுக்கொள்வதோடு, அதற்கும் மேலாக இந்தியப் பருத்திக் கழகம் மூலமாகவும் கட்டுப்படியான விலைக்குக்

[திரு. கே. பாண்டுரங்கன்] [2005 மார்ச் 8

கொள்முதல் செய்வதற்குண்டான வாய்ப்புகள் இருக்கின்றன என்பதையும் நான் பணிவோடு தெரிவித்துக்கொண்டு, நான் மீண்டும் வேண்டுகோள் வைப்பதெல்லாம், ஒப்பந்தப் பண்ணை அடிப்படையிலே வேளாண் பெருமக்கள் சாகுபடி செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்க இந்த நேரத்திலே நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் நெல் கொள்முதல் விலையைப் பற்றிச் சொன்னார்கள். அதேபோல, நெல் மட்டுமல்ல; ராகியாக இருந்தாலும், சோளம், கம்பு, வேறு எந்த உற்பத்திப் பொருட்களாக இருந்தாலும்கூட, இதைக்கூட கடந்த ஆட்சிக் காலத்திலே - அரசியல் பேசுவதற்காகச் சொல்லவில்லை - கடந்த ஆட்சிக் காலத்திலே, நாங்களே இதே அவையில் பேசி, அன்றைய முதலமைச்சராக இருந்த... (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு விஷயம், தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசும்போது பேசுங்கள். திரு. கணேசன் பேசி முடிக்கட்டும்.

**திரு. ஜி.கே. மணி:** நல்ல நோக்கத்தோடுதான் சொல்கிறேன். தவறாகச் சொல்லவில்லை. நல்ல நோக்கத்தோடுதான் சொல்கிறேன். ஆகவே, அதைப் பேசி பிற மாநிலங்களில் இருப்பதைக் கண்டறிவதற்காக, அன்றைய முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், என்னை எல்லாம் உள்ளடக்கிய, ஓர் உயர்மட்டக் குழுவை, இந்தியா முழுவதும் அனுப்பினார்கள். பிற மாநிலங்களுக்குச் சென்று பார்த்து விட்டு வந்து இங்கே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீண்ட விவாதத்திற்குரியது. திரு. கணேசன், பேசி முடியுங்கள். (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** அடுத்த நாள் காலையிலே பத்திரிகைகளிலே பார்த்த செய்தி 100 இடங்களிலே உழவர் சந்தை திறக்கப்படும் என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், கணேசன், பேசி முடியுங்கள். (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** அது மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கக்கூடிய அந்த நல்ல நிலையை நீங்கள் உருவாக்க வேண்டும் என்பதுதான் எங்கள் கோரிக்கை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தவறானத் தகவலைச் சொல்கிறார்.



2005 மார்ச் 8] [திரு. சி. பொன்னையன்]

விவசாய விளைபொருள்களின் விலையை உழவர்களுக்குக் கட்டுப்படியாகக்கூடிய அளவுக்கு நிர்ணயம் செய்ய மைய அரசுதான் முன்வர வேண்டும். கேழ்வரகு இங்கும் விளைகிறது; அண்டை மாநிலத்திலும் விளைகிறது. நெல் பல மாநிலங்களில் விளைகிறது, பருத்தியும் அப்படித்தான். இந்த மாநிலத்தில், நீங்கள் ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவில்லையென்றால், அடுத்த மாநிலத்தினுடைய பொருள்கள் இங்கே வந்துவிடுகின்றன. மைய அரசினுடைய பொறுப்புதான் அது. விவசாயிகளுக்கு, அந்த primary sector என்று சொல்லக்கூடிய விவசாயத் துறைக்குப் பாதுகாப்புக் கிட்டவேண்டுமென்றால், 'உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குகூட மிஞ்சாது' என்று சொல்லக்கூடிய அளவுக்கு இந்திய விவசாயிகள், தமிழகத்து விவசாயிகள் இருக்கிறார்கள் என்றால், உழவர்களுக்குக் கட்டுப்படியாகக்கூடிய minimum support price கொடுப்பதற்கு மைய அரசுதான் நடவடிக்கை எடுக்கவேண்டும். மைய அரசுதான் முன்வர வேண்டும். சட்ட ரீதியாக அதுதான் முடியக்கூடிய ஒன்று. அதை நீங்கள் முயற்சி செய்து, டெல்லியிலிருந்து பெற்றுத் தரவேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை மணி, இது பொதுப் பிரச்சினை. திரு. கணேசன், பேசி முடியுங்கள். (குறுக்கீடு) பேசி முடியுங்கள். (குறுக்கீடு) அவையினுடைய நேரத்தை வீணாக்காதீர்கள். திரு. கணேசன், ஒரு மணித் துளியிலே பேசி முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் சொல்லும்போது...(குறுக்கீடு)

**திரு. கே.ஆர். இராமசாமி:** Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், என்ன இராமசாமி? சொல்லுங்கள்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யக்கூடிய விலை, போதாது என்று விவசாயிகள் கருதுகிறார்கள். அதேநேரத்திலே மத்திய அரசுதான் இந்த விலையை நிர்ணயிக்க வேண்டும் என்று நமது அரசு சொல்கிறது. மாநில அரசு, நமது மாமன்றத்தின் வழியாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அதை மத்திய அரசிற்கு அனுப்புவதற்குத் தயாராக இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை நீங்களே சொல்ல வேண்டியதுதானே? எதற்குத் தலையைச் சுற்றி மூக்கைத் தொட வேண்டும்?

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியிலே Price Fixation Committee என்கிற ஒரு அமைப்பிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மாவினுடைய ஆணையின்படி, நெல்லுக்குக் கொடுக்கின்ற விலை கட்டுப்படியாகாது; கூடுதலான விலை கொடுக்கப்பட வேண்டுமென்று, 8-வது மாதம் முதல் தொடர்ந்து 3 முறை கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. அந்தக் கடிதத்திற்கு இன்றுவரை, எந்தவகையான பதிலும் வராமல் நிலுவையிலே இருக்கிற நிலையிலே, (மேசையைத் தட்டும் ஒலி) உடனடியாக அந்தக் கடிதத்தைப் பரிசீலித்து, விவசாயிகளுக்குப் போதுமான அளவுக்கு நெல்லுக்கு விலை கிடைப்பதற்காக, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அங்கம் வகிக்கிற மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், முடியுங்கள். கடைசி வாக்கியத்தோடு முடியுங்கள். (குறுக்கீடு)

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பருத்தி வியாபாரி, என்ன ஆயிற்று? சொல்லுங்கள்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பருத்தியினுடைய ஆதார விலை குறைவாக இருப்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்திலே, அதற்குச் சரியான விளக்கம் சொல்லவில்லை. ஆந்திராவிலே விவசாயிகள் எல்லாம் தற்கொலை செய்துகொள்கிறார்கள் என்று சொல்லி, இரண்டு மாத காலமாக—Cotton Corporation of India —தினசரி கொள்முதல் செய்து கொண்டு, விலையை நிர்ணயம் செய்து, ஓரளவுக்கு அங்கே market steady-ஆக இருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டிலே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, 1,100-லிருந்து 1,200 ரூபாய்க்குத்தான் பருத்தியை விற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மத்திய அரசாங்கத்திடம் சொல்லி, Cotton Corporation of India மூலமாக இங்கே கொள்முதல் செய்தால்தான், அந்த விலை கூடுமேயொழிய, நாம் சாதாரணமாக அதைக் கூட்ட முடியாது.



*பிற்பகல் 12-35*

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான் நாங்கள் ஒரு வேண்டுகோளை வைத்திருக்கின்றோம். பண்ணை ஒப்பந்த அடிப்படையிலே (குறுக்கீடு) நான் சொல்வதைப் பொறுமையாக, தயவுசெய்து கேட்டுக்கொள்ளுங்கள், தயவுசெய்து கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) இருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர், சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** பண்ணை ஒப்பந்த அடிப்படையிலே முன்னோடியாக தமிழகத்திலே, பொள்ளாச்சியிலே இருக்கின்ற Apache Care பருத்தி நிறுவனத்தினோடும், அதேபோன்று ஈரோட்டிலே இருக்கின்ற ஒரு நிறுவனத்தோடும் ஒப்பந்தம் செய்துகொண்டு, விவசாயப் பெருமக்கள் உற்பத்தி செய்வதற்கு முன்பாகவே, ஓர் அடிப்படை விலை நிர்ணயிக்கப்படுகிறது. அந்த அடிப்படையில், அது விளைகின்றபோது குறைவாக இருந்தாலுங்கூட, அந்த அடிப்படை விலைக்கே அந்த நிறுவனங்கள் கொள்முதல் செய்யவேண்டுமென்ற நிலைப்பாட்டை உருவாக்கியிருக்கின்றோம். இது ஒரு முன்னோடித் திட்டம். ஆக, அந்த அடிப்படையிலேதான், பண்ணை ஒப்பந்த அடிப்படையிலே, வேளாண் பெருமக்கள் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டுமென்ற ஒரு கருத்தை நான் வலியுறுத்தியிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கணேசன், ஒரு மணித் துளி. (குறுக்கீடு) இல்லை, இல்லை. இன்னும் ஆறு, ஏழு பேர் பேசவேண்டும். 25 நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. (குறுக்கீடு) இல்லை, இல்லை. உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரமான பதினைந்து மணித் துளிகளுக்குமேல் ஆகிவிட்டது. நீங்கள் பேசி முடியுங்கள். வாக்கியத்தை முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** ஒரே ஒரு நிமிடம். ஒரு second. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். கூறியதைப்போல மைய அரசுதான் முன்வந்து விவசாய விளைபொருள்களுக்கு நல்ல விலை விவசாயிகளுக்குக் கிட்ட வழிவகை செய்திட வேண்டும். அதற்கு, இங்கேயிருக்கின்ற உறுப்பினர்களுடைய கட்சி, டெல்லியிலே உள்ள ஆட்சியிலே, அங்கம் பெற்றிருக்கின்ற காரணத்தினால், தயவுசெய்து... (குறுக்கீடு) இருங்கள், இப்படித்தான் கத்தவேண்டாம் என்று சொல்கிறேன். இது, it is the reality, you are viewing this matter very lightly. Primary sector-ஐப் பொறுத்தவரை,

விவசாயிகளுக்கு—மைய அரசு தற்போது அறிவித்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையில்கூட, பல்லாயிரக்கணக்கான, பல இலட்சம் விவசாயிகளுக்கு—அதிகப்படியான நிதியினை, தேவையான நிதியினை ஒதுக்கவில்லை. விவசாயத் துறை சீரழிந்தால், நாடே சீரழிந்துவிடும் என்பதனை மைய அரசு ஆட்சி நிர்வாகம் உணரவேண்டும். அதை உணர்த்துகிற பொறுப்பு, இங்கே இருக்கின்ற மக்களின் வாக்குகளைப் பெற்று, டெல்லியிலே அமைச்சர்களாக இருக்கின்ற நமது நாட்டைச் சேர்ந்த, தமிழகத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இருக்கின்றது. இதை ஏளனமாக எண்ணுவதில் பொருள் இல்லை. டெல்லியை வற்புறுத்தி, உழவர் பெருமக்களுக்கு, அரசியலுக்கு அப்பாற்பட்டு, நல்ல விலை கிட்டவேண்டுமென்றால், மைய அரசு இதற்குச் சாத்தியக்கூறான உடனடியான நிவாரணத்தைத் தரவேண்டும். இதற்கு நீங்கள் அனைவரும் வற்புறுத்த வேண்டும். கே.கே.எஸ்.எஸ்.ஆர். கூறிய கருத்தை நீங்கள் அனைவருமே ஏற்று டெல்லி அரசை வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதி அமைச்சர் ஒரு நல்ல விளக்கத்தைச் சொல்லியிருக்கிறார். விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வாழ்வளிக்கக்கூடிய ஒரு தீர்வாக இருந்தபோதிலும், நம்முடைய தமிழக அரசு இந்த மாமன்றத்திலேயே--விவசாயி சீரழிந்தால், நாடு சீரழிந்து விடும்; விவசாயி வாழ்வை உயர்த்துவதற்காக, இந்த மாமன்றத்தின் மூலமாக--ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, மத்திய அரசுக்கு அனுப்பவேண்டுமென்று இந்தப் பேரவையில் உங்கள் வாயிலாகக் கேட்டுக்கொண்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு. (குறுக்கீடு) அவ்வளவுதான், திரு. எ.வ. வேலு.

**திரு. ஐ. கணேசன்:** இரண்டு நிமிடங்களில் பேசி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித் துளியிலே பேசி முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துக்கொள்கிறேன். சுனாமி; சுனாமியிலே—எம்.ஜி.ஆர். சொன்னதைச் சொல்லிவிடுகிறேன்: 'தரைமேல் பிறக்க வைத்தான், எங்களை தண்ணீரில் பிழைக்க வைத்தான்' என்று படகோட்டிஎன்னும் திரைப்படத்தில். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாடினார்கள். அதே வரிக்கு ஒப்பாக சுனாமி என்ற பேரழிவு, தமிழகத்தில் 2004 டிசம்பர் 26-ல், 8,018 உயிர்களை



இழக்கச் செய்து, பல இலட்சம் மக்களின் உடைமைகளைக் கொள்ளையடித்துச் சென்றது. மீனவர்களுடைய வாழ்க்கை அடியோடு நாசம் செய்யப்பட்டது. பாதிக்கப்பட்ட மக்களின் உள்ளம் நிம்மதி என்ற பெருமூச்சு விடவேண்டுமானால், அவர்களுடைய உள்ளத்திலே, இந்த தமிழ்ச் சமுதாயம் நம்மைக் கைவிடவில்லையென்று எண்ணக்கூடியவகையிலே, நிவாரணப் பணி அமைய வேண்டும். அதைவிடுத்து, நெல்லுக்குப் பாயும் தண்ணீர், நெல்லுக்குப் பாயவேண்டிய தண்ணீர், புல்லுக்குப் பாய்ந்துவிடக் கூடாதவகையிலே, அரசு முழு எச்சரிக்கையாக கவனமாக நிவாரணப் பணியை மேற்கொள்ளவேண்டுமென்று நான் பணிவோடு சொல்லிக்கொண்டு.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு.

**திரு. ஐ. கணேசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு. (குறுக்கீடு) இல்லை, இன்னும் இரண்டு, மூன்று பேர் பேச வேண்டும். ஐந்தாறு பேர் பேச வேண்டும்.

**திரு. ஐ. கணேசன்:** ஒரே ஒரு நிமிடம். முடித்து விடுகிறேன். எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த டாக்டர் ஐயா அவர்கள், நம்முடைய தமிழக (குறுக்கீடுகள்) எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த மருத்துவர் ஐயா அவர்கள், ஜனவரி 2005-லே பொதுக் குழுவைக் கூட்டி, தமிழக அரசு, இந்த முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்ட தொகை பூராவையும் மத்திய அரசு வழங்க வேண்டுமென்று, பொதுக் குழுவிலே கோ.க. மணி முன்மொழிய, அதை நான் வழிமொழிந்து, மத்திய அரசுக்கு ஐயா மூலமாக அனுப்பி வைத்திருக்கிறோம். தமிழக அரசு கேட்டுக்கொண்ட 4,800 கோடி ரூபாயையும் முழுமையாக நிவாரண நிதிக்கு வழங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக... (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம். ஒரே ஒரு நிமிடம்.

*பிற்பகல் 12-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கருத்தைச் சொல்லிவிட்டீர்கள்.

**திரு. ஐ. கணேசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம். மீதி எல்லாவற்றையும் விட்டுவிட்டேன். என் தொகுதியைப்

பற்றி விட்டுவிட்டேன்; நாட்டைப் பற்றி விட்டுவிட்டேன்; எல்லாவற்றையும் விட்டுவிட்டேன்; இந்த நிதிநிலை அறிக்கை பற்றி ஒரே ஒரு நிமிடம். இந்த நிதிநிலை அறிக்கை ஒரு கானல் நீர் மட்டுமல்ல; ஒரு பொய் மான். இது ஒரு பொய் மான். ஜெட் வேகத்தில் செல்ல வேண்டிய நிதிநிலை அறிக்கை, ஒரு கட்டை வண்டியில் பயணம் செய்ய வேண்டுமென்று எண்ணி, அந்தக் கட்டை வண்டிக்குக் கடையாணியும் இல்லை, காளை மாடும் இல்லாத கட்டை வண்டிப் பயணமாக, இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறது என்று சொல்லி, பேச வாய்ப்பளித்த உங்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றியைச் சொல்லி விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு.

***திரு. எ.வ. வேலு:** பெருமதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களுக்கு, இந்த நிதிநிலை அறிக்கையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகக் கருத்துகளை எடுத்து வைப்பதற்கு அனுமதித்ததற்காக எனது நன்றி கலந்த வணக்கத்தை நான் முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒட்டுமொத்தமாக, இந்த நிதிநிலை அறிக்கையைப் படிக்கிறபோது எனக்கு ஒரு மெகா தொடரைக் காணுகிற ஒரு எண்ணம்தான் தோன்றுகிறதேயொழிய, இதில் வேறு ஒன்றுமில்லை. காரணம், மெகா தொடரிலே பார்த்தால், தினமும் பார்த்துக்கொண்டே இருந்தால், ஒரு பாட்டு போட்டுக்கொண்டிருப்பார்கள். ஒரே ஒரு கருத்தைச் சொல்லிக்கொண்டிருப்பார்கள். அரை மணி நேரம் அது தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கும். இரண்டு நாள் சென்று பார்த்தால்கூட, திரும்பவும் அவ்வளவுதான் இருக்கும். அதில் வேறு ஒன்றும் இருக்காது. அதைப் போல, இந்த நான்கு ஆண்டு காலமாக இந்த நிதிநிலை அறிக்கையைப் படித்துப் படித்துப் பார்க்கிறோம். இதிலும் ஒன்றுமில்லை..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேலு, மெகா தொரிடரிலே ஒன்றுமே இருக்காது என்று சொல்கிறீர்கள். மெகா தொடர் பார்ப்பது வீண், அதிலே ஒன்றுமே இருக்காது என்று சொல்கிறீர்களா?

**திரு. எ.வ. வேலு:** இல்லை. மெகா தொடரைப் பொறுத்தளவிலே, one line script என்று சொல்வார்கள். One line script என்று உங்களுக்குத் தெரியும். ஒரு வரிதான் கதையே சொல்லியிருப்பார்கள். அரை மணி நேரம் பார்த்தால் ஒரு வரிதான் கதை இருக்கும். மீதியெல்லாம் தொடர்ந்து காட்சிப் பொருள்கள், அலங்காரமான வார்த்தைகள், வசனங்கள் இப்படித்தான் இருக்கும். ஆனால், கருத்து ஒன்றுதான்



இருக்கும். அதைப்போலத்தான், இந்த நான்கு ஆண்டு காலமாக தொடர்ந்து இந்த நிதிநிலை அறிக்கையைப் படிக்கிறபோது ஒரு மெகா தொடரைப் பார்ப்பதைப் போல, ஓர் அர்த்தமில்லாமல், வார்த்தை ஜாலங்கள்தான் இருந்துகொண்டிருக்கின்றனவேயொழிய, கருத்துகள் என்பது மிக மிகக் குறைவு. குறிப்பாக, 2001 ஆம் ஆண்டு, நீங்கள் முதன்முதலாக, இந்த நிதிநிலை அறிக்கையை வாசிக்கிறபோது 60 பக்கங்கள் போட்டீர்கள். அப்புறம் 60, 75, 80, இப்போது 100 பக்கங்கள். 60-லிருந்து ஆரம்பித்து 100 பக்கங்கள் வரை வந்திருக்கிறதேயொழிய, ஏதாவது திட்டங்கள் உண்டா? அதிலும், நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக, மிகச் சாமார்த்தியமாக எப்படியாவது முதலமைச்சரை cool-ஆக வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக, அவரைப் பற்றிய வார்த்தை ஜோடனைகளைத்தான் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கிறாரேயொழிய, இதில் வேறு ஏதாவது கருத்து இருக்கிறதா?

2001 ஆம் ஆண்டு அறிக்கையிலே பார்க்கிறபோது, முதலமைச்சரின் பெயரை எட்டு இடங்களிலே குறிப்பிட்டீர்கள். அதற்குப் பின்னால், 30 இடங்களிலே குறிப்பிட்டீர்கள். இந்த ஆண்டு படித்துப் பார்க்கிறபோது 85 இடங்களிலே அவரைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அது உங்களுக்குண்டான உரிமை. அதை நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. 85 இடங்களிலே முதலமைச்சரைக் குறிப்பிட்டிருப்பவர்கள், ஏதாவது திட்டங்களை 85 இடங்களிலே சொல்லியிருக்கிறீர்களா? இந்த நாட்டு மக்களுக்காக ஏதாவது திட்டங்களைச் சொல்லியிருக்கிறீர்களா? ஒன்றுமில்லை. ஆனால், என்ன சொல்லியிருக்கிறீர்கள்? பக்கம் 99-லே, 182-வது பாராவில் "இந்த வரவு-செலவுத் திட்டம், வரி விதிப்புகளே இல்லாத ஒரு வரவு-செலவுத் திட்டம் என்பதை அறிவதில் மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் பெருமகிழ்ச்சியடைவார்கள் என நம்புகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளீர்கள். வரியே இல்லையா? 2001 ஆம் ஆண்டு 135.38 கோடி ரூபாய் வரிச் சீரமைப்பு செய்தீர்கள். 2002-ல் 690 கோடி ரூபாய் வரி போட்டீர்கள். 2003-ல் 430 கோடி ரூபாய் வரி போட்டிருக்கிறீர்கள். ஆக... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12-45

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, வரியில்லா பட்ஜெட், இந்த ஆண்டு பட்ஜெட் என்றுதான் கூறியிருக்கிறேன். கடந்த காலத்தை இதோடு ஒப்பிடுவது முறையற்றது.

[2005 மார்ச் 8

**திரு. எ.வ. வேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, அது என்ன வரி போட்டு இருக்கிறோம் என்று சொன்னால், புதிய வரிகள் இந்த ஆண்டு நாங்கள் போடவில்லை என்கிறீர்கள். ஆக, வரிபோட்டு இருக்கிறீர்கள். வரிபோட்டதால்தான்- 1255 கோடி ரூபாய் ஏற்கெனவே வரி போட்டு இருக்கிறீர்கள். அதை நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். உங்களுடைய வரவு-செலவுத் திட்ட வெளியீடு 57 - பட்ஜெட். அதிலே, சென்ற ஆண்டு, 2004-2005-ல் வரவு 24,792 கோடி. அதாவது சுமார் 24 ஆயிரம் கோடி ரூபாய், சென்ற ஆண்டு வரவு வருவாயிலே, அதாவது, வருவாய்க் கணக்கிலே, வரவு சுமார் 24,000 கோடி, சென்ற ஆண்டு. இந்த ஆண்டு, சுமார் 30,000 கோடி. நீங்களே சொல்லி இருக்கிறீர்கள். சென்ற ஆண்டுக்கும், இந்த ஆண்டுக்கும் வரி வருவாய் வரவு 6 ஆயிரம் கோடி வருவாய் வந்து இருக்கிறது. ஆனால் வரியே போடவில்லை என்று எப்படிச் சொல்கிறீர்கள்?.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு வருகின்ற வரி வருவாய், மற்ற வருவாய் எல்லாம், ஏதோ அறவே இல்லாத ஒரு நிலை என்பதுபோல் பேசுகிறார். சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து, தமிழக அரசு போட்டு வருகிற அனைத்து வகை வரிகளும் உள்ளடக்கிய ஒட்டுமொத்த வரிதான் அந்த வரி என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

**திரு. எ.வ. வேலு:** அடுத்து, வரி வருவாயிலே 6 ஆயிரம் கோடி இந்த வருடம் increase பண்ணி இருக்கிறீர்கள். ஆனால் போடுகிற திட்டங்களுக்கு ஏதாவது அதிகமாகப் பணம் கொடுத்து இருக்கிறீர்களா? ஒன்றும் கிடையாது.

அடுத்து, குடிநீர். ஒரு மனிதனுக்குக் குடிநீர் என்பது நாட்டிலே, கிராமத்திலே, டவுனிலே சென்னை பட்டணத்திலே முக்கியம். ஆனால் குடிநீர், எங்குப் பார்த்தாலும் தண்ணீர் நாங்கள் திறந்து விட்டுவிடுகிறோம்.; எங்கே பார்த்தாலும் தண்ணீர் திறந்துவிடுகிறோம் என்று வாய்கிழிய பேசுகிறீர்களேயொழிய, திட்டத்திலே என்ன? சென்ற ஆண்டு, 2004-2005-லே, 403 கோடி ரூபாய் நீங்கள் பணம் ஒதுக்கி இருக்கிறீர்கள். ஆனால் இந்த வருடம் 384 கோடி ரூபாய். 19 கோடி ரூபாயைக் குறைத்துவிட்டீர்களே! குடிநீர் வடிகால் வாரியத்தைப் பொறுத்த அளவில்— கிராமத்திலே தண்ணீர் கொடுக்கிறோம் என்று சொல்லி, எங்கே பார்த்தாலும் தண்ணீர் விடுகிறோம் என்று சொல்லி, இப்போது இந்த ஆண்டு, குடிநீர் வடிகால் வாரியத்தைப் பொறுத்த அளவில்— ரூ.19 கோடி குறைத்து இருக்கிறீர்கள்.



2005 மார்ச் 8]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அரசு மூலமாக நாம் ஒதுக்குகின்ற நிதி என்பது ஒன்று. Water Board is an autonomous body. அது தனிப்பட்ட முறையிலே, நிதி நிறுவனங்கள் மூலமாக நிதியைப் பெற்று, பல அமைப்புகளிடமிருந்து நிதியைப் பெற்று, திட்டங்களை ஈடேற்றி வருவதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த அவையின் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள, விரும்புகிறேன்.

**திரு. எ.வ. வேலு:** பட்ஜெட் புத்தகத்தில் வரி வருவாய்க் கணக்கில் முக்கிய செலவினங்கள் என்று ஒரு தலைப்பு கொடுத்து பணத்தை நீங்கள் ஒதுக்கியிருக்கின்றீர்கள். நாங்கள் ஒன்றும் தனிப்பட்ட முறையில், எங்களுடைய எண்ணங்களையோ அல்லது எங்களுடைய புள்ளி விவரங்களையோ சொல்லவில்லை. இது கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதைப்போல, நாட்டிலே விவசாயத்திற்குப் பாசனம் என்பது முக்கியம். பாசனத்திற்கு சென்ற ஆண்டு 2004-2005-ல், 607 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறீர்கள். ஆனால் இந்த ஆண்டு 2005-2006-ல் 535 கோடி ரூபாய். 72 கோடி ரூபாய் பாசனத்திற்குக் குறைத்து இருக்கிறீர்கள்.

அதேபோல ஊரக வளர்ச்சி. கிராமப்புறங்கள் எல்லாம் வளரவேண்டும் என்று சொன்னால், ஊரக வளர்ச்சி வேண்டும். அப்போதுதான் கிராமப்புறங்கள் எல்லாம் வளர முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டும் ஒன்றுதான், ஊரகம் என்றாலும் ஒன்றுதான், கிராமம் என்றாலும் ஒன்றுதான்! (சிரிப்பு)

**திரு. எ.வ. வேலு:** அதாவது, சிலர் Bag - பை என்று சொல்லவில்லையா? பெங்களூருக்குப் போய் வந்தால் Bag - பை என்று சொல்வார்கள், சிலர் புரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக. ஆங்கிலம் தெரிந்தவர்களுக்கு ஆங்கிலம் புரியட்டும். தமிழ் தெரிந்தவர்களுக்குத் தமிழ் புரியட்டும் என்பதற்காகச் சொல்கிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் இதற்கெல்லாம் ஒட்டுமொத்தமாகப் பதிலைச் சொல்லிவிட்டேன். நபார்டு போன்ற அமைப்புகளில் இருந்து வருகின்ற ஒதுக்கீடுகளெல்லாம், நாங்கள் ஒதுக்குகிற ஒதுக்கீடுகள் எல்லாம், இந்த நிதிநிலை அறிக்கையிலே இடம் பெறாது என்பது சாதாரண, எல்லோருக்கும் தெரிய வேண்டிய விஷயம். மாண்புமிகு உறுப்பினர்கள் அதைக் கருத்தில்கொள்ள வேண்டும்.

**திரு. எ.வ. வேலு:** அப்போது Budget Allocation-ல் சொல்லியிருக்கலாம் இல்லையா, அதை மத்திய அரசாங்கத்திடமிருந்து இவ்வளவு நிதி நாங்கள்-

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குதான் அந்தந்த மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன. அந்தந்த மானியக் கோரிக்கையில் இதையெல்லாம் எழுப்புங்கள். புள்ளி விவரத்தோடு விவரங்களை அந்தந்தத் துறை அமைச்சர்கள் விளக்குவார்கள்.

**திரு. எ.வ. வேலு:** ஆக, எந்த வகையில் எடுத்துக்கொண்டாலும், சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு முக்கியமாக, சிறைத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, காவல் துறை அதேபோன்று வேளாண்மைத் துறை ஆகிய துறைகளுக்கெல்லாம் குறைந்த அளவில்தான் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதேயொழிய, வேறு ஒன்றும் அல்ல.

*பிற்பகல் 12-50*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரெக்கார்டில் தவறானக் குறிப்புகள் பதிவு பெறக்கூடாது. காவல் துறைக்கு, இதுகாறும் வரலாற்றிலே இல்லாத அளவுக்கு record outlay என்ற முறையில், 1,339.33 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்ட ஆண்டு இந்த ஆண்டுதான், இந்த நிதிநிலை அறிக்கையில்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டு மேம்பாட்டுக்காக—சென்ற முறை இதே அவையில் என்ன சொன்னீர்கள்? 2004-2005 நிதிநிலை அறிக்கையில், 48.14 கோடி ரூபாய் பணம் ஒதுக்கினீர்கள். "இளைஞர் நலம்"—விளையாட்டுக்கு, இளைஞர்களை எல்லாம் ஊக்குவிக்கிறோம்; விளையாடுவதன் மூலமாக, நல்ல திடப் பயிற்சியை மக்கள் செய்து, இளைஞர்கள் எல்லாம் உருவாவார்கள்" என்றெல்லாம் சொல்லிவிட்டு, சென்ற ஆண்டு 48.14 கோடி ரூபாய் ஒதுக்கினீர்கள். இந்த ஆண்டு 33.97 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள்.

அதோடுமட்டுமல்ல, சென்ற ஆண்டு இதே அவையில், இதே நிதி அமைச்சர், நிதிநிலை அறிக்கையைப் படிக்கிறபோது என்ன சொன்னார் என்றால்—பழைய நிதிநிலை அறிக்கை பக்கம் 45—அதாவது, "இளைஞர்களுக்காக தனிப் பல்கலைக்கழகத்தை இங்கே நாங்கள் உருவாக்க இருக்கிறோம்; கல்வி மற்றும் விளையாட்டுக்கென தனிப் பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என அறிவிக்கிறேன்" என்று நீங்கள் அறிவித்தீர்கள். பல்கலைக்கழகத்தை உருவாக்கிவிட்டீர்களா? சென்ற ஆண்டு சொன்னீர்கள். நான் மெகா தொடர் என்று சொன்னதில் என்ன தவறு?



**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டுத் துறைக்காகத் தனியாக ஒரு பல்கலைக்கழகம் உருவாக்க வேண்டும் என்பதற்காக, மாண்புமிகு அம்மா அவர்கள், இந்த அவையிலே அந்தப் பல்கலைக்கழகம் ஆரம்பிப்பதற்கான ஒரு சட்டமுன்வடிவை நிறைவேற்றி, நம்முடைய இந்திய நாட்டினுடைய ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டபோது, அங்கே இருக்கிற மத்திய அமைச்சர், சட்டத் துறை அமைச்சர் குறிப்பு கேட்டிருக்கிறார். அந்தக் குறிப்பு இப்போது மீண்டும் திருத்தி அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கு விரைவிலே ஜனாதிபதி அவர்கள் ஒப்புதல் அளித்தவுடன், அது ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எ.வ. வேலு:** ஒரு வருடமாகவா? ஒரு வருடமாகவா பல்கலைக்கழகத்தை உருவாக்குகிறீர்கள்?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது எங்களுடைய தவறு அல்ல. மத்தியில் ஆளுகின்ற உங்கள் மத்திய சட்டத் துறை அமைச்சருடைய தவறு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எ.வ. வேலு:** பல்கலைக்கழகம் உருவாக்குவது எல்லாம் மானியக் குழுவிற்குப் போய், மானியக் குழு பரிந்துரை செய்து ஜனாதிபதிக்குப் போக வேண்டும். இதையெல்லாம் Cabinet-ல் வைப்பதில்லை. பல்கலைக்கழகத்தை உருவாக்குவது எல்லாம் டெல்லியில்—எங்களுக்கும் தெரியும்—Cabinet-ல் வைத்து pass செய்வதில்லை.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும். நான் சொன்னதை நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். விளையாட்டுத் துறைக்காக தனியாக ஒரு பல்கலைக்கழகம் ஆரம்பிக்க வேண்டுமென்று இங்கே சட்டம் நிறைவேற்றி மத்தியில் இருக்கின்ற சட்டத் துறை அமைச்சர் மூலமாகத்தான் ஜனாதிபதிக்குச் செல்லுமே தவிர, நான் ஒன்றும் மத்தியில் இருக்கின்ற Cabinet Meeting-ல் வைக்க வேண்டுமென்று சொல்லவில்லை. மத்தியில் இருக்கின்ற சட்டத் துறை அமைச்சர் ஒப்புதல் அளித்தால்தான், ஜனாதிபதி அவர்கள் கையெழுத்திட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் ஆளுகின்ற, மத்தியிலே இருக்கின்ற அமைச்சர் காலம் தாழ்த்தி, அதில் ஒருசில கேள்விகளை எழுப்பி திருப்பி அனுப்பியிருக்கிறார். மீண்டும் அந்தக் கேள்விகளுக்குப் பதில் வைக்கப்பட்டு, திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எ.வ. வேலு:** அப்போது, முறையாக அனுப்பவில்லை என்று அர்த்தம். போகும்போதே முறையாக அனுப்பவில்லை என்று அர்த்தம்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** வேண்டுமென்றே, (குறுக்கீடு) நீங்கள் வேண்டுமென்றே—நாங்கள் ஒன்றும் குற்றம் சொல்லவில்லை—நீங்களாகவே உங்கள் மேலே ஒரு குற்றத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். அவர் கேட்ட கேள்விக்கு நாங்கள் பதில் அனுப்பியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டாண்டு, நிதிநிலை அறிக்கையைப் படிக்கிறபோது, தமிழ் வளர்ச்சிக்காகவும், இந்து சமய அறநிலையத் துறைக்காகவும் அறிக்கைகளைப் படிப்பதுண்டு. சென்ற ஆண்டு படிக்கிறபோதுகூட, தமிழ் வளர்ச்சி மற்றும் இந்து சமய அறநிலையத் துறையைப் பொறுத்தவரைக்கும் சொல்லுகிறபோது, "நாங்கள் ஆன்மீகத்திலே இருப்பவர்களை எல்லாம் மதிக்கிறோம்; தமிழ் வளர்ச்சியை நாங்கள் மதிக்கிறோம்; எனவே அவர்களுடைய திருப்பெயரால் நாங்கள் விருதுகளை எல்லாம் வழங்கவிருக்கிறோம்" என்று இந்த மாமன்றத்தில் நிதி அமைச்சர் படித்தார். நான்கூட சொன்னேன்; "அருணகிரிநாதர் பெயரிலே நீங்கள் கொடுக்கப்போவதாகச் சொல்கிறீர்கள்; அருணகிரிநாதர் பிறந்த ஊர், எங்கள் ஊர் திருவண்ணாமலை; எனக்கு ஆன்மீகத்தின்மேல் பற்றில்லை என்றாலும், எங்கள் ஊர்க்காரர் என்ற பற்று எனக்கு இருக்கிறது. அதனால், நீங்கள் கொடுப்பதை நான் வரவேற்கிறேன்" என்றுகூட அந்த வார்த்தையை நான் பயன்படுத்தினேன். ஆனால், ஆன்மீகத்தின்மேல் நம்பிக்கையுள்ள நீங்கள், வள்ளலார் பெயரில், காரைக்கால் அம்மையார் பெயரில், அருணகிரிநாதர் பெயரில், தேவாரம் பாடிய மூவர் பெயரில், ஆழ்வார்கள் பெயரில் விருதுகள் வழங்குவதாகச் சொன்னீர்களேயொழிய, அது ஏட்டளவில் இருக்கிறதேயொழிய, இதுவரை அது கொடுக்கப்படவில்லை. மெகா தொடர் என்று சொல்லாமல், வேறு என்ன சொல்ல வேண்டும்? பேரவைத் தலைவர் விளக்கம் சொன்னார்கள், மெகா தொடர் என்று சொல்லாமல் இதை வேறு என்ன சொல்ல முடியும்? எனவே, அது நடைபெறவில்லை. ஏட்டளவில்தான் இருக்கிறது. ஆக, எந்தக் காரியமும் நடைபெறவில்லை. இந்த நிலையில்தான் இருக்கிறது.

அதோடுமட்டுமல்ல, விவசாயத்தைப் பொறுத்தவரைக்கும் இங்கே பேசுகிறபோது, வேளாண்மையைப் பற்றிச் சொல்கிறபோது, என்ன சொல்லியிருக்கிறீர்கள் என்றால், "புத்துயிர்பெற்ற முதன்மைத் துறையை நோக்கி வேளாண்மை சென்றுகொண்டிருக்கிறது. பக்கம் 22-லே புத்துயிர்பெற்ற முதன்மைத் துறையை நோக்கி வேளாண்மைத் துறை



போய்க்கொண்டிருக்கிறது" என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், ஆட்சிக்கு வந்தபோது முதன் முதலாக என்ன சொன்னீர்கள்? ஆயிரம்...(குறுக்கீடுகள்)

*பிற்பகல் 12-55*

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பதில் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புத்துயிர் பெற்று, வேளாண்மைத் துறை முதன்மை இடமாக... (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நீங்கள் சொன்னதைத்தான் சொல்கிறார்கள். அதற்குப் பதில் சொல்கிறார்கள், கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புத்துயிர் பெற்று, வேளாண்மைத் துறை வளர்ச்சி அடைந்திருக்கிறது என்பதற்கு ஆதாரமாக ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால், இன்றைக்கு சோளம் உற்பத்தியிலே இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகம்தான் முதலிடத்திலே இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கம்பு உற்பத்தியிலே இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலேயே ஒரு ஹெக்டேர் உற்பத்தித் திறனிலே, முதலிடத்திலே இருக்கிறது. மொத்த எண்ணெய் வித்துக்களைப் பொறுத்தவரை இந்தியத் துணைக் கண்டத்திலேயே, ஒரு ஹெக்டேர் உற்பத்தித் திறனிலே முதலிடம் வகிக்கிறது. அதேபோன்று, இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகம்தான் கரும்பு உற்பத்தித் திறனிலே முதலிடம் வகித்து இன்றைக்கு முதன்மைத் துறையாக (மேசையைத் தட்டும் ஒலி) வளர்ந்து வருகிறது, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அறிவுரையாலே என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் எதிர்க் கட்சியிலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்கும் கேள்வியை முழுவதுமாகக் கேட்டு, அமைச்சர்கள் பதில் சொன்னால், அது நல்ல பதிலாக இருந்தால் நாங்கள் பாராட்டப் போகிறோம், நன்றி சொல்லப் போகிறோம். இல்லையென்றால் தெளிவு கேட்கப் போகிறோம்; ஒரு point of order கேட்கப் போகிறோம். கேள்வியைக் கேட்பதற்கு

முன்னாலேயே, இப்போது நேரடியாகவே அவர் பதில் சொல்லிவிட்டாரே, பதிலை எந்த அடிப்படையிலே சொல்கிறார்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை விட்டு அடுத்ததற்குப் போங்கள்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதன்மைத் துறை என்பதற்கு ஆதாரமாக இந்த விளக்கத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

**திரு. எ.வ. வேலு:** பக்கம் 22-லே, 'இது வேளாண்மைத் துறை முதன்மைத் துறையை நோக்கி' என்பதற்கு நான் சொல்ல வருகிறேன். 4 ஆண்டுக் காலத்திற்கு முன்னால் ஆட்சிக்கு வந்தபோது, 'நாங்கள் கரும்புக்கு 1,000 ரூபாய் கொடுப்போம், என்று சொன்னீர்கள். எங்களுடைய பகுதியிலே இன்றைக்குவரை 1,000 ரூபாய் பணம் கிடைக்கவில்லை. 1,000 ரூபாய் பணம் இன்றையவரைக்கும் கிடைக்கவில்லை. நான் ஒரு விவசாயி. எனக்கு 125 share இருக்கிறது. நான் கரும்பு போடுகிறேன். வேண்டுமானால், பில் கொண்டுவந்து மாண்புமிகு நிதியமைச்சரிடம் நான் ஒப்படைக்கத் தயாராக இருக்கிறேன். அதாவது மத்திய அரசாங்கம் 8.5 பிழிதிறன் கொண்ட கரும்பிற்கு 750 ரூபாய் விலை நிர்ணயம் பண்ணினார்கள். அதற்கு மேலே, இந்த மாநில அரசாங்கம் கொடுக்கவில்லை. பொதுவாக மாநில அரசாங்கம், State Appraisal Price, அதாவது SAP என்ற ஊக்கத் தொகை தருவார்கள். இதுவரைக்கும் கொடுக்கவில்லை. ஆனால், கழகத் தலைவர் கலைஞர் ஆட்சியிலிருந்தபோது, ஒரு டன்னுக்கு 150 ரூபாய் SAP கொடுத்தார்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்புக்கு மாநில அரசு கொடுக்க வேண்டுமென்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்கள். கரும்புக்கு விலையை நிர்ணயித்திருப்பது, SMP 730 ரூபாய் என்று மைய அரசு நிர்ணயித்திருக்கிறது. மைய அரசு அந்த 730-ஐ, ஆயிரம் ரூபாய் என்று நிர்ணயித்துவிட்டால், எல்லா மாநில அரசுகளும் ஆயிரம் ரூபாய் தந்துவிடும். மைய அரசு உழவர்களின் நலனில் அக்கறையோடு அந்த SMP-ஐ உயர்த்த வேண்டும். அதற்கு நீங்கள் பாடுபட வேண்டும்.

**திரு. எ.வ. வேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஆட்சியை நடத்துகிறபோதுகூட இப்படித்தான் அவர்கள் நிர்ணயம் பண்ணுவார்கள். விவசாயிகளுக்காக நாங்கள் ஊக்கத் தொகை தருவோம்; SAP நாங்கள் ஊக்கத் தொகை தருவோம்; அதைத்தான் சொன்னோம்; தொடர்ந்து நாங்கள் கொடுத்தோம்.



**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்கள் ஆட்சிப் பொறுப்பைவிட்டுப் போகின்ற நேரத்திலே, கரும்பு விவசாயிகளுக்கு கரும்பு அரைவை ஆலைகளுக்கு supply செய்தவகையிலே, பாக்கி வைத்துவிட்டுப் போன தொகை மட்டும், 200 கோடி ரூபாய்க்கு மேலாக இருந்தது என்பதையும், அதை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள்தான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, விவசாயிகளுக்குச் சீராக விநியோகித்தார்கள் என்பதையும் பணிவோடு சொல்லி அமர்கிறேன்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நிதியமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். அவரும் ஒரு விவசாயி. அவருக்குப் பண்ணை இருக்கிறது எனக்குத் தெரியும். நான் சொல்வது, மத்திய அரசாங்கம் கரும்புக்கு விலையை நிர்ணயம் செய்தாலும்கூட, மாநில அரசாங்கம் எப்போதுமே SAP—அவர்கள் ஊக்கத் தொகை—கொடுக்கிற பழக்கம் உண்டு. நாங்கள் கழக ஆட்சியிலே கொடுத்தோம். அதை நீங்கள் கொடுத்தீர்கள் என்றால், அது ஆயிரம் ரூபாய்க்கு மேலே போகும். நீங்கள் கொடுக்கவில்லை, 4 வருடங்களாக. அதைத்தான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழக ஆட்சி, உங்களுடைய ஆட்சி நடைபெற்றபோது, நீங்கள் கொடுப்பதாக அறிவித்துவிட்டுப்போன தொகை எல்லாம், ஒட்டுமொத்தமாக 200 கோடி ரூபாய்க்கு மேலாக, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் கணக்குத் தீர்த்து பட்டுவாடா செய்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலு, இரண்டு மணித் துளிகளிலே உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** நாங்கள் எவ்வளவு நேரம் பேசினோம்? அதற்குள்ளே இரண்டு மணித் துளிகளிலே எல்லாம் முடிக்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்குரிய நேரம் தந்திருக்கிறோம். உங்களுக்கு உரிய நேரத்தைக் கொடுத்திருக்கிறோம்.

**திரு. எ.வ. வேலு:** நாங்கள் பேசவேயில்லை. எதிர்க் கட்சியிலேயிருந்து நாங்கள் பேசவில்லை. பிரதான எதிர்க் கட்சிக்காரர்கள் நாங்கள் பேசவேயில்லை. பேசுகிறபோது ஒரு ஆரோக்கியமாகத்தான் பேசுகிறோம். வேறு என்ன ஏதாவது குற்றச்சாட்டு சொல்கிறோமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித் துளிகளிலே பேசி முடியுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** நாங்கள் பேசியது, இரண்டு நிமிஷம்தான் பேசியிருக்கிறோம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலைப் பகுதியைப் பொறுத்தளவிற்கு, ஒரு தனியார் மில், அருணா சர்க்கரை ஆலை என்ற ஒரு நிர்வாகம். ஓராண்டு காலமாயிற்று, 4.5 கோடி ரூபாய் பணம் விவசாயிகளுக்கு இதுவரைக்கும் போய்ச் சேரவில்லை. பரவாயில்லை பின்னாலே வாங்கிக்கொள்ளலாம் என்று சொன்னால், இந்த வருஷம் கரும்பு வைத்திருக்கிறோம். அந்தக் கரும்பை எந்த ஆலையிலே கொண்டு பதிவு செய்வது? விவசாயிக்கு ஒன்றுமே புரியவில்லை. எங்கே போய் பண்ணுவது என்று தெரியாமல் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். அதுவும் ஒரு தனியார் மில். எனவே, அந்த விவசாயிகளுக்கு வழிவகுக்கின்ற வகையில், இந்த அரசாங்கம் ஒரு நல்ல முடிவு எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்திலே, "உழவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்க அவர்களுக்கு முறையான அடிப்படையில், புதிய அங்காடி வசதிகள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டியது அவசியமாகிறது" என்று சொல்லியிருக்கிறீர்கள். நாங்கள், ஏற்கெனவே புதிய அங்காடிதானே உழவர் சந்தை திறந்து வைத்தோமே! ஆனால், அந்த உழவர் சந்தையை இன்றைக்குச் சீரழித்துவிட்டீர்கள். அதை ஒழுங்காக, முறையாக நீங்கள் பார்க்கவில்லையே! இன்றைக்கு...

*பிற்பகல் 1-00*

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயப் பெருமக்கள் உற்பத்தி செய்கின்ற விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கவேண்டும் என்பதற்காக, தமிழகம் முழுவதும், 20 மாவட்ட விற்பனைக் குழுக்களை உருவாக்கியிருக்கின்றோம். அந்த விற்பனைக் குழுக்களுக்குத் தேவையான அடிப்படை உள் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்காகத்தான், அந்த நிலையை உருவாக்கியிருக்கிறோம். 1996 ஆம் ஆண்டிலிருந்து 2001 ஆம் ஆண்டு வரை, உங்களுடைய ஆட்சியிலே அந்த விற்பனைக் குழுக்களுடைய அடிப்படை வசதிகள் செய்ய இயலாத நிலையிலே நீங்கள் இருந்தபோது, 2001 ஆம் ஆண்டிலிருந்து 2004 ஆம் ஆண்டு வரை, இன்றைக்கு 5 மடங்குக்கு மேலாக அந்த உள் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கித் தந்திருக்கிறோம். வேளாண் பெருமக்கள் உற்பத்தி செய்கின்ற



அந்த விளைபொருட்களுக்கு, நல்ல விலை கிடைக்க வேண்டுமென்பதற்காக உள் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தந்திருக்கிறோம்.

குறிப்பாக, பல்வேறு விற்பனைக் குழுக்களுக்கு, கிடங்குகளை ஏற்படுத்தித் தந்திருக்கின்றோம். அந்த விற்பனைக் குழுக்களுக்கு எடை மேடை அமைத்துத் தந்திருக்கின்றோம். அந்த விற்பனைக் குழுக்களிலே, வேளாண் பெருமக்கள் உடனடியாக, விவசாயப் பொருள்களை விற்பனை செய்யவில்லை என்றால், குறைந்தபட்ச வட்டித் தொகையாக 9 சதவிகிதம் வட்டிக்கு அந்தக் கிடங்குகளிலேயே அவர்கள் 6 மாத காலம் அந்த விளைபொருட்களை இருப்பு வைப்பதற்குண்டான ஒரு வாய்ப்பையும் இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகத்திலே மட்டும்தான், வேளாண் விற்பனை வாரியம் செய்து இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் மகிழ்ச்சியோடு கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடுமட்டுமல்ல, இன்றைக்கு அந்த 9 சதவிகித வட்டியைக்கூட குறைக்க வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள், அறிவுரை ஆணையும் வழங்கியிருக்கின்றார்கள். அதையும் குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை, வேளாண் விற்பனைக் குழுவும், வேளாண் விற்பனை வாரியமும் செயல்படுத்தி வருகின்றன என்பதனை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order; Point of Order. ஒரேயொரு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உட்காருங்கள், வேலு பேசுகிறார், நீங்கள் உட்காருங்கள். வேலு, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) 2 மணித் துளிகளுக்குள் பேசி முடியுங்கள். இதிலே Point of Order ஒன்றுமில்லை. (குறுக்கீடுகள்) அவருக்கு என்ன? அவருக்கும் விவசாயத்திற்கும் சம்பந்தமேயில்லை.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம். இந்த அவையில், எதிர்க் கட்சி உறுப்பினர்கள் நாங்கள் பேசுகின்றபோது, அமைச்சர்கள் பதில் சொல்வது ஏற்றுக்கொள்ளக் கூடியதுதான். மாண்புமிகு சபாநாயகர் அவர்கள், அமைச்சர்களின் பதிலுரைகளைச் சுருக்கமாகச் சொல்வதற்கு ஒரு பயிற்சி அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், எங்களால் தாங்க முடியவில்லை, புது உறுப்பினர்களாலே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் [illegible] விடையை அளிப்பார்கள். கேள்வி [illegible]

53-9—9

D V21,3,005 005.701

226632
சென்னை-600 008

பெரியதாகத்தான் இருக்கும். வேலு, நீங்கள் பேசி முடியுங்கள். 2 மணித் துளிகளில் பேசி முடியுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அவர்கள், பக்கம் 45— இதிலே, புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், ஊரகத் தொழில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேலு, இரண்டு மணித் துளிகளுக்குள் பேசி முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** எவ்வளவு விரிவாகச் சொன்னாலும், உங்களாலே புரிந்துகொள்ள முடியவில்லை. அதற்காகத்தான் மேலும் மேலும் விரிவாகச் சொல்ல வேண்டிய காலத்திற்குத் தள்ளப்பட்டிருக்கின்றீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கம் 45— "புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், ஊரகத் தொழில்மயமாக்கல் புத்துயிரூட்டுவதில் பெரிதும் உதவியுள்ளது; இதுவரையில், 138.43 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறோம்" என்று சொல்லியிருக்கிறீர்கள். இதே நிதியமைச்சர் அவர்கள், 3 ஆண்டு காலத்திற்கு முன்னால் - நான் சொன்னேன்: "இந்தமாதிரி நாங்கள் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்று ஒன்று வைத்திருக்கிறோமே, 4 ஆண்டு காலம் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலே, கலைஞருடைய ஆட்சியிலே 692 கோடி ரூபாய் செலவு செய்து, 74,810 பணிகள் நாங்கள் செய்து முடித்திருக்கிறோம், அதைத் தொடருங்களேன்" என்று கேட்டேன். நான், "அண்ணாவை மறந்துவிட்டீர்களா?" என்று கேட்டேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்: "நாங்கள் அண்ணாவையெல்லாம் மறக்கவில்லை; அண்ணாவை நினைவு வைத்திருக்கிறோம்; அது புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற திட்டத்தின்மூலமாக வருகிறது" என்று அவர்கள் சொன்னார்கள். நிதியமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், ஒரு ஒரு கோடி ரூபாய், ஒரு ஒரு ஒன்றியத்திற்குத் தரப்போகிறோம்; நீங்கள் தொகுதிக்குத்தான்— நீங்கள் ஒரு தொகுதிக்கு ஒரு அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்— எடுத்தீர்கள். 385 ஒன்றியங்களுக்கு...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு கோடி ரூபாய் தரப்போகிறோம் என்று சொல்லவில்லை. தமிழகத்திலுள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும், அதாவது 385 ஒன்றியங்களிலும் குறைந்தபட்சம் ஒரு



கோடி ரூபாய் மதிப்புள்ள ஒரு தொழில் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்வோம் என்றுதான் அறிவித்தோம். அது நிறைவேற்றப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலு, பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் ஒரு தொகுதிக்கு ஒரு கோடி ரூபாய் கொடுத்தார்கள் என்று சொல்லவில்லை. எங்களுடைய ஆட்சியிலே, ஒரு தொகுதிக்கு ஒரு கோடி ரூபாய் சராசரி செலவு செய்து, 692 கோடி ரூபாய் நாங்கள் செலவு செய்திருக்கிறோம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலே. நான் சொல்வது...

பிற்பகல் 1-05

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான கருத்தை மாண்புமிகு உறுப்பினர் இந்த அவையிலே சொல்லிக்கொண்டிருக்கிறார், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு நீங்கள் அறிவித்திருந்தீர்கள். (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அவர்களே, ஆனால், நீங்கள் அறிவித்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், அறிவித்திருந்தீர்கள்; செயல்படுத்தினீர்களா என்றால், நிச்சயமாக அது இல்லை. அதை முறைப்படுத்தி, நவீனப்படுத்தி, ஒன்றியத்திற்கு ஒன்று என்று... (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் கொடுத்த பணம் என்பது வளர்ச்சிப் பணிக்காகக் கொடுத்த பணம். ஆனால், ஒரு ஒன்றியத்திற்கு ஒரு தொழிற்சாலை என்று இது தொழில் வளர்ச்சிக்காகக் கொடுக்கப்பட்ட பணம். இதுதானே தவிர, "இதிலே இவர்கள் நாங்கள் பணம் தந்திருக்கிறோம்" என்று அவ்வாறு சொல்வது சுத்தமான, வடிகட்டின, தவறான கொள்கை என்று தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்ற, புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்மூலமாக, 213 திட்டங்கள், 138.43 கோடி ரூபாய் முதலீட்டில், 8,335 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய விதத்திலே, தொழில் தொடங்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அவர் பேசி முடிக்கட்டும். அவருக்கு நேரம் இல்லை (குறுக்கீடு) நேரம் இல்லை. வேலு, பேசி முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir, I am on a point of order.

[2005 மார்ச் 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் சொல்கிறேன். புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்பதை... (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேட்டதற்கு அமைச்சர் அவர்கள் உரிய விளக்கத்தைச் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், என்ன ? சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தவறான தகவலை அவைக்குத் தந்துகொண்டிருக்கிறார்கள். முன்பு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், அண்ணா மறுமலர்ச்சி என்று கொண்டு வந்திருக்கிற திட்டம், ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஒரு தொகுதிக்கு, ஒரு ஆண்டுக்கு, ஒரு கிராமத்தை எடுத்து, அதில் ஒரு கோடியோ அல்லது 80 இலட்சம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் சொன்னார்கள். (குறுக்கீடுகள்) அதற்குக் கொடுக்கப்பட்ட தலைப்பு என்பது வேறு; இதற்குக் கொடுக்கப்பட்டிருக்கிற தலைப்பு என்பது வேறு என்று விளக்கம் சொன்னார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நான் விளக்கம் சொல்கிறேன் (குறுக்கீடு) நான் விளக்கம் சொல்கிறேன் (குறுக்கீடு) முடியாது; நான் விளக்கம் சொல்கிறேன் (குறுக்கீடு)...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் சொல்லிவிடட்டும்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** அதைத்தான் நானும் சொல்கிறேன் இப்போது. ஊரகப் பகுதிகளிலே, வளர்ச்சிப் பணிகளுக்காக நீங்கள் கொடுத்தீர்கள். அதைக்கூட ஒழுங்காகச் செய்யவில்லை; அது இரண்டாவது பிரச்சினை. இது, தொழில் துறையில் முன்னேறி வரவேண்டும் என்பதற்காக, புதிய தொழில் வசதியைப் பெருக்குவதற்காக... (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள்; புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், தொழில் வளர்ச்சியைப் பெருக்குவதற்காக ஒன்றியத்திற்கு ஒரு கோடி ரூபாய். இதுதானே தவிர, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தெளிவாகச் சொல்லி இருக்கிறார்; நானும் சொல்லியிருக்கிறேன்.



2005 மார்ச் 8]

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் அறிவிக்கப்பட்டு அது செம்மையாக நடைபெற்றிருக்கிறது. ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், "அறிவித்தீர்கள்; அதை நடைமுறைப்படுத்தவில்லை" என்கிறார். ஆனால், அது உண்மை அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இல்லை.

**திரு. துரைமுருகன்:** அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் அறிவிக்கப்பட்டு, அதை நடைமுறைப்படுத்தி இருக்கிறோம். இரண்டாவது, அவர் சொன்னார்; "அதைக்கூட ஒழுங்காக நடத்தவில்லை" என்று. அது ஒழுங்காக நடந்ததா, இல்லையா என்பதற்குத் தனி விவாதம் வைத்தால், நாங்கள் அதில் ஈடுபடுகிறோம். ஏனென்றால், திராவிட முன்னேற்றக் கழகம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் சொல்லிவிட்டீர்கள்; அமைச்சர் விளக்கம் சொல்லிவிட்டார்கள். வேலு, முடியுங்கள், ஒரு மணித் துளியில் பேசி முடியுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேலு அவர்கள் பேசுகிறபோது, ஊரக வளர்ச்சியைப் பொறுத்தவரைக்கும், இந்த ஆண்டு குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார். அதற்குச் சில விவரங்களைத் தருகிறேன், 2003-2004 ஆம் ஆண்டு ஊரக வளர்ச்சிக்கு 1927.53 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. வேலு அவர்கள் கவனிக்கவேண்டும். அது Revised Estimate-லே, 2,097.95 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டது. தற்போதைய 2005-2006 பட்ஜெட்டுக்கு ரூ. 2,416.07 கோடி என்று உயர்வாகத்தான் தரப்பட்டிருக்கிறது. நீங்கள் கூறியது தவறான தகவல். அதைப்போலவே, காவல் துறைக்கு 2003-2004-ல், 1,178.74 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. அதுவே, Revised Estimate-ல் 1,283.75 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டது. தற்போது, record break என்ற அளவிலே, இதுகாறும் எந்தக் காலத்திலேயும் இல்லாத அளவிற்கு, ரூ.1,339.33 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது. 1,339.33 கோடி ரூபாயாகத் தற்போது உயர்த்தப்பட்டிருக்கிறது. விவசாயத் துறையைப் பொறுத்தவரைக்கும் ரூ. 652.71 கோடி, 2003-2004 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டது. Revised Estimate -ல் ரூ.2,025.49 கோடி ஆகியது. அது, தற்போதைய பட்ஜெட்டில், 2005-2006-க்கு, ரூ.854.41 கோடி என உயர்த்தப்பட்டிருக்கிறது.

[திரு. சி. பொன்னையன்] [2005 மார்ச் 8

அதைப்போலவே, கரும்பைப் பொறுத்தவரைக்கும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது கூறினார். இந்த அரசைப் பொறுத்தவரைக்கும் நலிவுற்ற நிலையிலே இருக்கிற உழவுத் தொழிலுக்கு உய்வினைத் தரவேண்டும் என்பதுதான், மாண்புமிகு அம்மா அவர்களின் தலையாயக் கொள்கை. அந்த அடிப்படையில், நலிவுற்றிருக்கின்ற சர்க்கரை ஆலைகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், தற்போது *229.97* கோடி ரூபாய் Supplementary Estimate, இந்த வருடத்திலே *2004-2005*-ல் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்வோடு கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் *1-10*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது தவறு என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்காக, அவர்கள் நிதியொதுக்கீடு செய்ததாகச் சொல்லியிருப்பது தவறு. அனைத்துத் துறைகளுக்கும் ஒதுக்கப்பட்ட தொகையை, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழே, கணக்கில் கொண்டுவந்தது தி.மு.க. ஆட்சியில்தான். எல்லாத் திட்டங்களின் செயல்பாடுகளையும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்று கொண்டு வந்தது, தி.மு.க. ஆட்சியில். ஆனால், புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்மூலமாக, நேரடியாக ஒன்றியத்திற்கு ஒரு கோடி ரூபாய் என்று ஒதுக்கீடு செய்யப்பட்டது எங்களின் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவின் ஆட்சியிலேதான். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலு, பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கென்று நிதிநிலை அறிக்கையிலேயே, தனியாக ஒதுக்கி இருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், இவர்கள் கொண்டு வந்த முதல் நிதிநிலை அறிக்கையிலேகூட, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்று போட்டு, அதற்கு ஒரு தொகையை ஒதுக்கினார்கள். அதற்குப் பிறகுதான், அதை புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்று மாற்றினார்கள்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு அவர்கள் சொல்லியிருக்கின்ற அளவிற்கு, சென்ற ஆட்சிக் காலத்தில் நிதிநிலை அறிக்கையில் *692* கோடி ரூபாய் நிதி ஒதுக்கவில்லை. மாறாக — இதே



2005 மார்ச் 8] [திரு. இரா. விசுவநாதன்]

விவாதம் சென்ற முறை வந்ததால், நான் இங்கே எடுத்துச் சொல்லவேண்டிய கடமைக்கு, கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறேன். சென்ற முறைகூட, இங்கே இந்த விவாதம் நடைபெற்றபோது, சென்ற உங்கள் ஆட்சிக் காலத்தில் நடைபெற்றபோது — உதாரணத்திற்கு, நெடுஞ்சாலைத் துறை மூலமாக அந்த மாவட்டத்தில் எவ்வளவு செலவு செய்தார்களோ, அந்தப் பகுதியிலே நெடுஞ்சாலைத் துறையால் செய்யப்பட்ட பணிகளை, இந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கான கணக்கில் ஏற்றிக் கொண்டார்கள். அதேபோல, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகச் செய்யப்பட்ட பணிகளுக்கு, அந்தப் பகுதியிலே எவ்வளவு செலவு செய்தார்களோ, அதை இந்தக் கணக்கிலே கொண்டு வந்தார்கள். அதேபோல, பொதுப் பணித் துறையின் மூலமாக, அது இயற்கையாக, routine-ஆக, வழக்கமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற பணிகளை, அந்தப் பகுதியில் எவ்வளவு தொகை செலவழித்தார்களோ, அந்தத் தொகையை அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் கொண்டு வந்தார்கள். இப்படிக் கணக்கில், நீங்கள் book adjustment, கணக்கிலே, புத்தகத்திலே ஏற்றிக்கொண்டீர்களே, அப்படி கணக்கு adjustment செய்தீர்களே தவிர... (மேசையைத் தட்டும் ஒலி) — நீங்கள் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கென்று பெயரளவில் ஒரு தொகையை ஒதுக்கிவிட்டு, அங்கே மக்களை ஏமாற்றினீர்களே தவிர, உண்மையிலேயே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்த இந்தப் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டமானது, அம்மா அவர்கள் இன்றைக்குக் கொண்டு வந்திருக்கும் திட்டமானது, இது உண்மையிலேயே நடைபெறுகின்ற பணி. நீங்கள் மக்களை ஏமாற்றுவதற்காக, வேலையில்லாது பூசி மெழுகச் செய்தப் பணிகள்தான் உங்கள் ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்.

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டதா இல்லையா என்பது வாதம். ஒதுக்கியிருக்கிறோம் என்றார்கள். அவருக்கு இருக்கிற ஆதாரத்தை வைத்து நீங்கள் ஒதுக்கவில்லை, book adjustment என்று சொல்கிறார்கள். அதுதான் பிரச்சினை. ஆனால் அதை விட்டுவிட்டு, ஏதோ மக்களை ஏமாற்றினோம் என்று சொன்னால், ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அவர் சொன்ன அந்தக் கருத்தை வலியுறுத்திச் சொல்வதற்காக சொன்னாரே தவிர, தவறாக ஒன்றும் சொல்லவில்லை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்று சொல்வது முறைகேடானது. அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) திரு. வேலு, பேசுங்கள். (குறுக்கீடு) பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் கேட்டதற்கு அவர் உரிய விளக்கத்தினைச் சொன்னார். (குறுக்கீடு) வேலு, பேசுங்கள். (குறுக்கீடு) வேலு, பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) திரு. வேலு, பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) இல்லையென்றால் அடுத்த பேச்சாளரைக் கூப்பிடுவேன். (குறுக்கீடுகள்) திரு. சிவசாமி. (குறுக்கீடுகள்)

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் உட்காருங்கள். பேராசிரியர் பேசட்டும்.

**பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏமாற்றுவது என்று சொன்னாலும், ** என்று சொன்னாலும், இரண்டும் ஒரே அர்த்தம்தான். அவர் ஏமாற்றுவது என்று சொன்னார். துரைமுருகன் ** என்று சொன்னார். அனுமதித்தால் இரண்டையும் அனுமதியுங்கள். இல்லையானால் இந்த அவையிலே ஒரு பக்க சார்பாக முடிவு சொல்கிறார் சபாநாயகர் என்று நாங்கள் கருதுவதற்கு அது இடமாகும்.

*பிற்பகல் 1-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதை, ஏற்கெனவே சொல்லிவிட்டீர்கள். அதைப்பற்றி ஒன்றும் இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது, பழைய அண்ணா மறுமலர்ச்சி திட்டத்திலே வெவ்வேறு தலைப்புகளிலே நெடுஞ்சாலைத் துறை, குடிநீர் வடிகால் வாரியத் துறை என்று இருந்ததை எல்லாம் அண்ணா மறுமலர்ச்சித் திட்டமென்று சொல்லி ஏமாற்றினீர்கள் என்று ஆதாரத்தோடு ஒன்றைச் சொல்கிறார். அதற்கு ஏதோ கீரைக் கடைக்கு எதிர் கடை வைப்பதுபோல் பதில் சொல்ல வேண்டுமென்பதற்காக ** அப்படி என்று சொல்வது முறைகேடானது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ திட்டம் என்ற சொன்னால் உடனே அதற்காக தனியாக நிதி வந்தால்தான் திட்டம் என்று ஒரு தவறான கருத்தை அடிப்படையாக வைத்து (குறுக்கீடு) நான் சொல்கிறேன். திட்டம் என்று சொன்னால் அது ஒரு Identified Project என்ற அர்த்தமே தவிர, அதற்குத் தனியாக பணம் ஒதுக்க வேண்டுமென்று ஒன்றும் கட்டாயம்கூட கிடையாது. அதை எப்படி செயல்படுத்துகிறார்கள் என்பது பொதுமக்களுடைய சூழ்நிலையைப் பொறுத்து, அவர்களுடைய தேவையைப் பொறுத்து, பல பணிகள் சேர்ந்து ஒரு வட்டாரத்திலே முன்னேற்றத்திற்காக ஒருங்கிணைப்புப் பணியாக நிறைவேற்றப்படுவதுதான் அறிஞர் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்று கொண்டுவரப்பட்டதே தவிர, திட்டம் என்று சொன்னவுடனே அதற்கு தனியாக நிதி ஒதுக்கினால்தான் திட்டம் என்ற அந்தக் கருத்தையே நான் ஏற்றுக்கொள்ள மறுக்கிறேன். அதேபோல நீங்கள் அந்தத் திட்டத்தை மாற்றினீர்கள், வேறு பெயரால் அறிவித்தீர்கள். வேறு வகையாக செயல்படுத்தினீர்கள். அது உங்களுடைய விருப்பம். எதை எப்படி செய்வது என்பதுதான் திட்டமே தவிர, எந்த நிதி என்பது திட்டம் அல்ல.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சொன்னதை, அவர்களுடைய உறுப்பினர் புரிந்து கொண்டால் அது போதுமானது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் எ.வ. வேலு அவர்களுக்கு, பேராசிரியர் அன்பழகன் அவர்கள் பேசியது அவருக்கு அந்தப் பதில் பொருத்தமாக அமையும். காரணம் என்னவென்று சொன்னால், அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில், ஏதோ அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு, 682 கோடி ரூபாயை நிதி ஒதுக்கீடு செய்து நேரடியாக நிதி ஒதுக்கீடு செய்தது, செலவு செய்தது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தினார். அதனால்தான் அந்த விளக்கத்தைச் சொன்னேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மாண்புமிகு பேராசிரியர் தாங்கள் சொன்ன கருத்தை ஏற்றுக்கொள்வதிலே ஒன்றும் தவறில்லை. தாங்கள் சொன்னதுதான் சரியானது. மாண்புமிகு உறுப்பினர் வேலு அவர்கள் பேசுகிறபோது, நாங்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தோம். அதை நீங்கள் விட்டுவிட்டு வேறு திட்டத்திற்குப் போய்விட்டீர்கள் என்று சொன்னதற்கு மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள், அதற்கு உரிய விளக்கத்தைச் சொன்னார்கள். அதுதான் பிரச்சினை.

**பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவரவர்களே, தங்களோடு வாதம் செய்ய நேரிடுவதற்காக நான் வருந்துகிறேன். தாங்கள் ஒரு பக்கமாக வாதாடுகிறீர்கள். ஏன் அப்படி வாதாட வேண்டிய கட்டாயம் தங்களுக்கு எல்லாம் ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை.

**பேராசிரியர் க. அன்பழகன்:** இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் திட்டமென்று சொன்னால், . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேலு சொன்னதற்கு உரிய பதிலைத்தான் அவர் சொல்கிறார்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** வேலு அவர்கள் சொன்னது, நாங்கள் கொண்டு வந்த திட்டத்தை விட்டுவிட்டு, நீங்கள் வேறுவிதமாக திட்டம் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்பதற்காகத்தான் வாதாடினார். ஒரு உறுப்பினர் தவறாகக்கூட ஒரு கருத்தைச் சொல்லலாம். அதை மாண்புமிகு அமைச்சர் மறுக்கலாம். அதிலே எனக்கு எந்த மாறுபாடும் கிடையாது. நானே தவறாகப் பேசலாம். ஒரு அமைச்சர் அதை மறுக்கலாம். அது அவருடைய உரிமை. இன்னும் சொல்லப்போனால், கடமை. அந்தத் தவறு என்பது ஏமாற்றுவதற்காகச் செய்யப்பட்ட க்ர்ரியமா, மக்களை வாழவைப்பதற்காகச் செய்யப்பட்ட காரியமா என்பதை மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும். அது ஏமாற்றுவதற்கு செய்யப்பட்ட காரியம் அல்ல. இன்னும் சொல்லப்போனால், எந்தத் திட்டமாக இருந்தாலும், மக்களை ஏமாற்றுவதற்காகச் செய்ய வேண்டிய அவசியம் எந்தக் கட்சிக்குமேகூட இயல்பாக இருக்காது. ஆனால், இடையிலே ஏதேனும் சில தவறுகள் நடைபெறுமானால், அது வேறு பிரச்சினை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராசிரியர் அன்பழகன் அவர்கள், இப்போது தி.மு.க.வின் கொள்கையை, திடமான நம்பிக்கையை தெளிவுபடுத்தியதற்காக அவருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். ஓர் அற்புதமான தத்துவத்தை, கொள்கையை இங்கே விளக்கினார். திட்டம் என்று அறிவித்தால் அதற்குத் தனியாக நிதி ஒதுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று பேராசிரியர் அன்பழகன் இங்கே குறிப்பிட்டார். இதுதான் தி.மு.க.வின் கொள்கைபோலும்! அதனால்தான், அவர்கள் ஆட்சியில் இருக்கின்றபோதெல்லாம், பல திட்டங்களைச் சரமாரியாக அறிவித்துவிட்டு, அதற்கு நிதியே ஒதுக்காமல் கண்துடைப்பு செய்துவிட்டுப் போய்விடுகிறார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு, நிதி ஒதுக்கி நிறைவேற்ற வேண்டிய கட்டாயத்திற்கு நாங்கள்



ஆளாக்கப்படுகிறோம். எங்களைப் பொறுத்தவரை, அந்தக் கொள்கையைச் சொல்லவே மாட்டோம். எங்களைப் பொறுத்தவரை, எங்களுடைய கொள்கை இதுதான். ஒரு திட்டம் என்று அறிவித்தால், அதை நிறைவேற்றுவதற்கு, செயல்படுத்துவதற்கு நிதி ஒதுக்கியே ஆக வேண்டும். அந்த நிதி ஒதுக்க முடிந்தால்தான், அந்தத் திட்டத்தை அறிவிப்போமே தவிர, வெறும் கண்துடைப்பு நாடகம் செய்வதற்காக நாங்கள் வெறும் அறிவிப்புகளைச் செய்யமாட்டோம். எங்களுக்கு அந்தக் கொள்கையில் நம்பிக்கை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்குவதிலேதான் இருக்கிறார்களே தவிர செயல்பாடுகளைப் பற்றி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்கவில்லை என்று நான் கருதுகிறேன். இன்றைக்கும்கூட எத்தனையோ காரியங்கள் அறிவிக்கப்பட்டு, நிதி ஒதுக்கப்பட்டு, அந்த நிதி உரிய காரியத்திற்குப் பயன்படாத நிலைமை, தமிழ்நாட்டிலே இருப்பதை நான் மிக நன்றாக அறிவேன். உரியமுறையில், அந்த நிதி செலவிடப்படாமல் --நிதி எவ்வளவோ ஒதுக்கப்படுகிறது; உங்கள் தலைமையிலே உள்ளவர்களுக்கு அந்த நிதி எங்கே விரயமாகிறது என்று தெரியாமல்கூட இருக்கலாம்.

*பிற்பகல் 1-20*

அது Audit Report வருகிறபோதுதான் தெரியக்கூடிய நிலைமை இருக்கலாம். நிதி ஒதுக்குவதா, அல்லவா என்பதல்ல project. Project என்று சொன்னால், எத்தனையோ வழிவகைகளில் செயல்படுவதை ஒருமுகப்படுத்தி, ஒருங்கிணைத்து, ஒரு சமுதாயத்தினுடைய நன்மைக்காக இணைத்துச் செயல்படுத்துவது project. மாவட்ட ஆட்சித் தலைவர் எத்தனையோ வகைகளிலே வருகிற பல்வேறு தலைப்புகளில் வரும் நிதிகளைக் கொண்டு, அந்த மாவட்டத்தினுடைய முன்னேற்றத்திற்கான பல காரியங்களைச் செய்கிறார். அதிலே ஒரு சிறப்பு அம்சமாக அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் அமைந்து, பல இடங்களில் நானே சென்று அந்தத் திட்டத்தைத் தொடங்கிவைத்திருக்கிறேன். அது நிறைவேறிய கட்டத்திலேயும் நான் அந்தப் பகுதிக்குச் சென்று பார்வையிட்டிருக்கிறேன். ஆகவே, திட்டம் நடைபெற்றது. அதற்கு நிதி எந்தெந்த வகையிலே வந்தது என்பதிலே கருத்து வேறுபாடு இருக்கலாம். அந்த நிதி, அரசாங்கத்தினுடைய நிதி, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அந்தப் பகுதி ஊரக வளர்ச்சிக்காகச் செலவிடப்பட்ட நிதிதான், இந்த மறுமலர்ச்சித் திட்டத்திற்கும் பயன்பட்டு இந்தத் திட்டம் உருவாயிற்று.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராசிரியர் அவர்கள் பேசுகிறபோது, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சிறப்பாக நடைபெற்றது; தானும் பார்த்தேன் என்று கூறினார். ஒரு பஞ்சாயத்திலே, ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் 15 பஞ்சாயத்துகள், ஊராட்சிகள் இருக்கும் என்றால், அங்கே இருக்கின்ற 14 ஊராட்சிகளை வஞ்சித்துவிட்டு, அதற்குரிய நிதியையும் எடுத்து, கொஞ்சம் கொஞ்சமாக, ஒரு குறிப்பிட்ட, ஒரே ஒரு ஊராட்சிக்கு ஒதுக்கி, ஒரு ஊராட்சியை வளப்படுத்தி, மீதி இருக்கின்ற 14 ஊராட்சிகளை வளம் குன்ற செய்த திட்டம்தான் அந்தத் திட்டம் என்ற குறை இருந்த காரணத்தால், (மேசையைத் தட்டும் ஒலி) கோரிக்கைகள் வந்த காரணத்தால், பரவலாக்கப்பட்ட திட்டமாக, உதாரணமாக 15 ஊராட்சிகளிலும் குச்சிக் கிழங்கு நடப்படுகிறது என்றால், அங்கு ஒரு குச்சிக் கிழங்கு factory, a small scale industry, a value added product-ஆக அமைத்தால் விவசாயிகளுக்கும் பலன் கிடைக்கிறது; அந்த விவசாயப் பொருட்களுக்கும் value addition கிடைக்கிறது; மற்றவர்களுக்கும் வேலை கிடைக்கிறது; தொழிலும் வருகிறது என்றுதான் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை, rural industry based பொருளாதாரத்தை உய்விக்கும் திட்டமாக, மாண்புமிகு அம்மா அவர்கள், அதற்கு உரு கொடுத்து தற்போது வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு அந்தத் திட்டத்தைக் கைவிட்டதற்கு, மாண்புமிகு அமைச்சர் பொன்னையன் அவர்கள் கருதுகிற காரணங்கள் இந்த அரசுக்கு ஏற்றதாக இருக்கலாம். ஆனால், அந்தத் திட்டம் நிறைவேறியபோது அந்த வட்டாரத்திலே 10, 12 கிராமங்களுக்குச் சேர்த்து, ஒரு வளர்ச்சிக்கு மையமாக ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அதிக மக்கள்தொகை உள்ள இடமாகப் பார்த்து, தேர்ந்தெடுத்து, மாவட்ட ஆட்சித் தலைவரே தீர்மானித்து, அங்கே செய்யப்படுகிற காரியங்கள் அந்தப் பக்கத்திலே உள்ள கிராமங்களுக்கு எல்லாம் பயன்படுகிற நோக்கத்தோடு நிறைவேற்றப்பட்டன. எனவே, அப்போது அந்தத் திட்டத்தை அங்கே உள்ள மக்கள் வரவேற்றார்கள். இன்றைக்கும் வரவேற்கத் தயாராக இருக்கிறார்கள். அது யாரையும் வஞ்சிக்கிற ஒரு திட்டம் அல்ல. யாருடைய நிதியையும், யாருக்கும் பயன்பட வேண்டிய நிதியையும் கைப்பற்றி, அல்லது அவர்களுக்குச் சென்று சேராமல் வேறு ஒருவருக்குப் பயன்படுத்துகிற ஒரு காரியமாக அது நடைபெறவில்லை. ஒருங்கிணைந்த ஊராட்சி ஒன்றிய வளர்ச்சிக்குப் பயன்பட்ட, கிராமப்புற மேன்மைக்கு உறுதி வழங்கப்பட்ட, அப்படிப்பட்ட திட்டமாகத்தான்



நிறைவேற்றப்பட்டது. மறுபடியும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வருமானால் அந்தத் திட்டத்தை மறுபடியும் நிறைவேற்றி அமைச்சர் பொன்னையனையே கொண்டு வந்து, அந்தத் திட்டத்தைக் காட்டுவதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பேராசிரியர் கூறியதிலும் குறை இருக்கிறது. ஊராட்சி ஒன்றிய மேன்மைக்கு உரிய திட்டம் தி.மு.க. ஆட்சிக் காலத்து அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் அல்ல. ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிற ஒரு ஊராட்சிக்கு மட்டுமே பயன்பட்ட குறுகிய திட்டம் என்ற காரணத்தால், (மேசையைத் தட்டும் ஒலி) பரந்த திட்டமாக அம்மா அவர்கள், அதைப் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்று விரிவுபடுத்தினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் க. பொன்முடி:** Point of order.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய நேரத்தை எடுத்துக்கொள்ள நான் உள்ளபடியே வருத்தப்படுகிறேன்; மன்னிக்க வேண்டும். பொன்னையன் அவர்கள் சொன்னதை நான் மொத்தமாக மறுக்கிறேன். அதற்குத் தேவையான ஆதாரங்கள் உள்ளன.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாக ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்காக அந்த நிதி ஒதுக்கப்படவில்லை. ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கின்ற, அதிகப்படியாக இருக்கின்ற ஒரு village panchayat, single village panchayat-க்குத்தான் ஒதுக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. செ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு ஊராட்சிதான் தேர்வு செய்யப்பட்டதே தவிர, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு ஊராட்சி கிடையாது. ஒரு சட்டமன்றத் தொகுதியில் ஒரு ஊராட்சியைத் தேர்வு செய்யவேண்டும் என்று சொன்னீர்கள். நான் அப்போதைய சட்டமன்ற உறுப்பினர். என்னுடைய தொகுதிக்கு ஒரு village-ஐக் கொடுத்தேன். அந்த ஊராட்சிக்கு ஏன் குறைவாக நிதி ஒதுக்கப்பட்டது என்று கேட்டதற்கு, மக்கள்தொகை அடிப்படையில்தான் கொடுக்கப்படும்;

ஒரு நபருக்கு 500 ரூபாய் என்று சொல்லிவிட்டீர்கள். ஆனால், ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினருக்கு மட்டும் அதிகப்படியான வேலைகளை, அடிப்படையாகவே செய்தீர்கள். நான், எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் என்ற காரணத்தால், தண்ணீர் வசதிகூட செய்து கொடுக்கப்படவில்லை, சாலை வசதி செய்து கொடுக்கப்படவில்லை. கேட்டால் உங்களுக்கு, ஒரு நபருக்கு, 500 ரூபாய் வீதம்தான் வழங்கப்படும் என்றீர்கள். அப்போது ஒரு தொகுதிக்கு ஒரு ஊராட்சி. (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 1-25* 1

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒருங்கிணைப்புப் பணி ஒவ்வொரு ஒன்றியத்திற்கு, ஒரு பேரூராட்சி அல்லது ஒரு ஊராட்சியிலேதான் நடைபெறும் என்பது நடைமுறையிலே இருந்தது. ஆனால், சட்டமன்றத் தொகுதிக்கு ஒன்று என்பது, ஒரு ஆண்டிற்கு ஒரு சட்டமன்றத் தொகுதியிலே ஒரு இடம். அதைப்போல இரண்டு ஆண்டுகளில் இரண்டு ஒன்றியங்கள் அந்தச் சட்டமன்றத் தொகுதியிலே இருக்குமானால், இரண்டு ஒன்றியங்களிலே ... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடுகள்)

**பேராசிரியர் க. அன்பழகன்:** நான் பேசுகிறபோது என்னுடைய குரல் எனக்கே கேட்காத நிலைமை ஏற்படுமானால், தொடர்ந்து கருத்தைச் சொல்ல முடிவதில்லை. அதனாலேதான், நான் தடைபட்டு நின்றேன். ஒரு சட்டமன்ற உறுப்பினர் அந்தத் தொகுதியைக் கவனிக்கவேண்டும் என்ற அந்த அடிப்படையில், அந்தச் சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதியிலே இரண்டு ஒன்றியங்கள் இருக்குமானால், ஒரு ஒன்றியத்திலே இந்த ஆண்டு, அடுத்த ஆண்டு அடுத்த ஒன்றியத்திலே என்று நடைமுறைப்படுத்தப்பட்டுத்தான் நடைபெற்றது. அதிலே எந்தவிதமான பாகுபாடும் இல்லை. பாரபட்சமான காரியம் எதுவும் நடைபெறவில்லை. (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, .... (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...



**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடட்டும். (குறுக்கீடு) அமைச்சர் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடு) இல்லை, அமைச்சர் பேசி முடித்துவிடட்டும்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** பேராசிரியர் எழுந்ததால்தான், நான் உட்கார்ந்து விட்டேன். திரும்பவும் நீங்கள் எழுந்திருக்கிறீர்களே? (குறுக்கீடு) உட்காருங்கள், நான் பேசுகிறேன்.

**திரு. துரைமுருகன்:** இல்லை, இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் சொல்லிவிடட்டும்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** நான் மூன்று முறை எழுந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், (குறுக்கீடு) திரு. துரைமுருகன், (குறுக்கீடு) மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் சொல்லட்டும்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்பட்ட வேண்டுமென்ற ஒரு மனப்பான்மையில், மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு தொலைநோக்குப் பார்வையோடு எல்லாத் திட்டங்களையும் அளித்துக் கொண்டு வருகிறார்கள். தமிழ்நாட்டு மக்கள் அனைவருமே இன்றைக்கு எந்த அளவிற்கு ஒரு பூரண திருப்தியோடு இருக்கின்றார்கள் என்பதற்கு, அவர்களுடைய சான்று போதும், உங்களுடைய சான்று தேவையில்லை. ஆனால், நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், ஒரு கருத்தைச் சொன்னார்கள். தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வரும் என்று. நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ... (குறுக்கீடு) நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொல்லுகின்ற ஒரு பழமொழியை நான் இங்கே சொல்கிறேன். "கடல் வற்றி கருவாடு சாப்பிட நினைத்த கொக்கு, குடல் வற்றி செத்த கதை"யாகத்தான் உங்களுடைய கதை. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், திரு. துரைமுருகன் பேசுகிறார்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள். கொஞ்சம் இருங்கள். பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் திரு. விசுவநாதன் சொல்கிறபோது, மற்றதற்கெல்லாம் ஒதுக்கி ஒதுக்கி, — ஒன்று, இரண்டு அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்று அறிவித்து விட்டீர்கள் — மற்ற திட்டங்களுக்கென்று. இங்கே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இந்த ஆண்டு ஒரு கோடி ரூபாய் எம்.எல்.ஏ. நிதியாக அளிக்கப்படும் என்று. ஆனால், அந்த ஒரு கோடி ரூபாய் எம்.எல்.ஏ. நிதி என்று அளிப்பீர்களேதவிர, குடிநீர் வடிகாலுக்கு 10 இலட்சம், "நமது கிராமம்" திட்டத்திற்கு 10 இலட்சம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. துரைமுருகன், பிரச்சினை அதுவல்ல. (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** நிதியை ஒதுக்கி விட்டீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினை என்பது பழைய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கும், புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கும்.

**திரு. துரைமுருகன்:** அதனால்தான் சொல்கிறேன். ஆனால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழைய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் எப்படி செயல்படுத்தப்பட்டது என்பதைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்.

**திரு. துரைமுருகன்:** அதைத்தான் சொல்கிறேன். விளக்கம் சொல்கிறேன். நான் வேறு ஒன்றும் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினை, சட்டமன்ற உறுப்பினருடைய நிதியைப் பொறுத்தது அல்ல.

**திரு. துரைமுருகன்:** நான் அதைச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினை, அதைப் பொறுத்தது அல்ல. பிரச்சினையைத் திசை திருப்பவேண்டாம்.



**திரு. துரைமுருகன்:** நான் அதைச் சொல்லவில்லை. ஒத்துக்கொள்கிறேன், அதனாலே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. ஜெயக்குமார் அவர்கள் "கடல் வற்றி கருவாடு சாப்பிட்ட நினைத்த கொக்கு" பற்றி ஒரு பழமொழியைச் சொன்னார். கடல் வற்றியிருக்கிறது; 40 இடங்களிலும் மீனைப் பிடித்திருக்கிறோம். 234 இடங்களிலும், திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி வெற்றி பெறும், வெற்றி பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், இப்போதே மாலை நேரப் பொதுக் கூட்ட ஞாபகத்திலே பேசுகிறார் போலிருக்கிறது (சிரிப்பு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. வேலுவைப் பேச விடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பதில் சொல்லட்டும். (குறுக்கீடு) அவருக்கு ஒதுக்கிய நேரம் முடிந்துவிட்டது. உண்டாக்க வேண்டிய பிரச்சினையை உண்டாக்கி விட்டார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்தினுடைய தொகுப்பே என்னவென்று சொன்னால், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்று பெயரளவில் அந்தத் திட்டம் இருந்ததேதவிர, ஆனால் வழக்கமாக நடைபெற்று வருகிற பணிகள், அரசுத் துறைமூலமாக, அந்தந்த கிராமங்களிலே உள்ள ஊரக வளர்ச்சித் துறைமூலமாக, பல்வேறு அரசுத் துறைகள்மூலமாக வழக்கமாக நடைபெற்று வந்த பணிகளை அதிலே குறிப்பிட்டு, அந்த வார்த்தை ஜாலங்களை மட்டும் பயன்படுத்தி — அந்தத் திட்டம் வழக்கமாக நடைபெற்று வந்த பணிகள்தான். இப்போதுகூட, புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலே, நீங்கள் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்று கொண்டு வந்து, வளர்ச்சிப் பணிகளைச் செய்ததைக் காட்டிலும், இப்போது அந்தத் திட்டம் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

[திரு. இரா. விசுவநாதன்] [2005 மார்ச் 8

என்று வந்ததற்குப்பின்பு, அந்த வளர்ச்சிப் பணிகள் உங்களுடைய ஆட்சிக் காலத்திலே நடைபெற்றதைக் காட்டிலும், கூடுதலாக புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே வளர்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுடைய கற்பனை, இனிமேல் திராவிட முன்னேற்றக் கழகம்தான் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் என்ற பொருள்பட, நீங்கள் கற்பனை செய்து கொண்டிருக்கிறீர்கள்... (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் அலுவல் நேரம் சில மணித் துளிகள் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** அந்தக் கற்பனை ஒரு காலத்திலும் நிறைவேறப்போவது இல்லை. மீண்டும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் தமிழகத்தின் முதலமைச்சராக வரப் போகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுக்கு வேண்டுமானால் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பதவி கிடைக்குமா; கிடைக்காதா என்பதுதான் இப்போது இருக்கின்ற பிரச்சினையேதவிர, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிச்சயமாக வருவார்கள் என்பதிலே எந்தச் சந்தேகமும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலுவின் பேச்சு முழுமையாக நிறைவு பெற்றது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (9-3-2005) காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

40. 2003-2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்தி ஒன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)



2005 மார்ச் 8]

41. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

47. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஐம்பத்து மூன்றாவது அறிக்கை. (2003-2005)

D
V24 S1 105
Pos. 70.1
226632

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**112, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Special Commissioner and Commissioner of Stationery and Printing, Chennai-600 002.